பக்கங்கள்: இருபது

JAFFNA.

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 16 திங்கட்கிழமை (02.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 341

# யுத்தகால நிகழ்வுகள் தொடர்பாக பொன்சேகாவிடம் அமெ. விசாரிக்கும்

## வாஷிங்ரனில் புதனன்று ஆஜராகக் கோரிக்கை



வாஷிங்ரன், நவம்பர் 02

வன்னிப் போர்க்களத்தில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்த நிகழ்வுகள் தொடர்பாக முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்துவதற்கு அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது.

அமெரிக்காவில் 'கிறீன் கார்ட்' குடியுரிமைபெற்றவரான சரத் பொன்சேகா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தற்போது அங்கு சென்றுள்ள நிலையில், வாஷிங்ரனில் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை சந்திக்குமாறு அமெரிக்க அரசு அவரைக் கேட்டிருக்கிறது.

(19ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும்-I,II, கணிதம்-II பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம்-I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## கோத்தபாயவையும் மடக்க அமெரிக்கா இரகசியத் திட்டம்?



கொழும்பு, நவ. 02

இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு எதிராக சாட்சியங்களை வழங்கவேண்டுமென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிடம் அமெரிக்கா கோரியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவுக்குத் தற்போது தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டுள்ள முன்னாள்இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அங்குள்ள இலங்கைத் தூதரகத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில், கோத்தபாய

(19ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் இராணுவத் தளபதி மீது அமெரிக்கா விசாரணை நடத்துவதை தடுக்க அரசு பகீரதப் பிரயத்தனம்

கொழும்பு நவ.02

வன்னிப் போர்க்களத்தில் நடைபெற்ற இறுதிக்கட்ட யுத்த நிகழ்வுகள் குறித்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விசாரிப்பதற்கு அமெரிக்க அரசு மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளை நிறுத்துவதற்கு, இலங்கை அரசாங்கம் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

அரசாங்கத்தின் மிக உயர் மட்டத்தினர் இந்த முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் கடந்த மாதம் வெளியிட்ட இலங்கையில் நடைபெற்றதாகக் கருதப்படும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## சம்பள உயர்வு கோரி தொழிற்சங்கங்கள் போராட முஸ்தீபு

கொழும்பு, நவ.02

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், நீர்வழங்கல் வடிகால் சபை, மின்சார

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை உயர்மட்டக் குழு விரைவில் இந்தியா செல்லும்

கொழும்பு,நவ.02

இந்திய அரசுடன் முக்கிய பேச்சுக்களை மேற்கொள்வதற்காக இலங்கை அரசின் உயர்மட்டக் குழுவொன்று விரைவில் புதுடில்லி செல்லவுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர்

(20ஆம் பக்கம் பார்க்க)

## 2,818 பேர் நேற்று யாழ். அழைத்து வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், நவ.02

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து சொந்த இடங்களில் குடியமர 946 குடும்பங்களைச் சேர்ந்த 2,818 பேர் நேற்று

(20ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காயில் மீள்குடியமர்வுச் செயற்பாடுகளை நேரில் கண்டறிய புலம்பெயர் தமிழர் குழு செல்கிறது

வவுனியா,நவ.02

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்று வரும் மீள்குடியமர்வுச் செயற்பாடுகளைக் கண்டறிய புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் சார்பிலான ஒரு குழு இன்று அங்கு செல்லவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் தலைவரும் ஜனாதிபதியின் விசேட ஆலோசகருமாகிய பசில் ராஜபக்சவின் பணிப்புரைக்கமைய இந்தப் பிரதிநிதிகள் துணுக்காய் பிரதேசத்திற்கு அதிகாரிகளினால்

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்கு சகல உரிமைகளும் பெற்றுத்தரும்வரை காங்கிரஸ் ஓயாது

### மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் சொல்கிறார்



சென்னை, நவ. 02

இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கும்வரை காங்கிரஸ் ஓயாது. இந்திய அரசமைப்பின் 14 ஆவது ஷரத்தில் உள்ளதுபோல இலங்கை அரசமைப்பில் 13 ஆவது ஷரத்தை திருத்தி சிங்கள மக்களுக்கு இணையாக அனைத்து உரிமைகளும் அங்குள்ள தமிழர்களுக்கு பெற்று தரும்வரை காங்கிரஸ் ஓயாது - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

மதுரை ஜான்சிராணி பூங்கா அருகே காங்கிரஸ் சார்பில் இந்திராகாந்தியின் 25 ஆம் ஆண்டு நினைவு நாள் மற்றும் மத்திய அரசின் சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய முறையிலான அரசியல் தீர்வை இலங்கையில் உருவாக்க வலியுறுத்துக

### தமிழக முதல்வருக்கு தமிழர் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கடிதம்

கொழும்பு, நவ.2

இலங்கைப் பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையிலான எந்தவொரு அரசியல் தீர்வு வழங்கப்பட்டாலும் கடும் போக்காளர்கள் எதிர்காலத்தில் அநாவசியமாகத் தலையிடும் வாய்ப்பை அது கொடுத்து விடும். எனவே இங்கும் இந்திய முறையிலான ஒரு தீர்வை முன்வைப்பதற்கு வலியுறுத்தவேண்டும். அத்தகைய முறை 'ஒற்றையாட்சி', 'சமஷ்டி' ஆகிய வார்த்தைகளை விரும்பாதவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

(20ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கூடைப்பந்தாட்டத்திடலுக்கு மின்னொளி வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்லூரி பாண்ட் வாத்திய அணியுடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும்-
மங்கல விளக்கேற்றுவதையும் கூடைப்பந்தாட்டதிடலுக்குமின்னொளியை ஆரம்பித்து வைப்பதையும் -
அமைச்சருடன் அதிபர் அ.அகிலதாஸ், விருந்தினர்களான வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நடராசா, கூடைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் செ.ரமணன் ஆகியோர் காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:நேசன்)

# மக்களின் அனைத்துத் தடைகளும் விரைவில் நீங்கும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், நவ.2

மக்கள் முகம் கொடுத்து வரும் அனைத்துத் தடைகளும் விரைவில் நீக்கப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கூடைப் பந்தாட்டத்திடலைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

யாழ். குடாநாட்டில் மின்னொளியில் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆசை வெகு நீண்ட நாள்களாகத் தன்னிடம் இருந்து வந்ததாகவும் அந்த ஆசை இன்று நிறைவேறுவதையிட்டு தான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும் தற்போது அமுலிலிருக்கும் ஊரடங்குச் சட்டத்தை வெகு விரைவில் முழுமையாக நீக்குவதற்கு தான் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு வருகின்ற எமது மக்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற ரீதியில் தற்போது அதற்கான அனைத்து நடவடிக்கை களையும் தான் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்ததுடன் எம்மக்கள் முகங்கொடுத்து வருகின்ற அனைத்துத் தடைகளையும் வெகு விரைவில் நீக்கி அம்மக்களுக்கு ஒளிமயமானதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கும் முகமாகத் தான் முன்னெடுத்து வரும் செயற்திட்டத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேற்படி விழாவின்போது நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் ஆண்கள் பிரிவில் கொக்குவில் சன சமூக நிலைய அணியும் வெற்றி பெற்றன. வெற்றி பெற்ற அணிகளுக்கான கேடயங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

## பிரதேச செயலகங்களின் கட்டடப்பணிக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ. 02

நல்லூர், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் புதிய கட்டடங்களின் நிர்மாணத்திற்கான மூன்றாம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு 5 மில்லியன் ரூபாவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு 5 மில்லியன் ரூபாவும் பொது நிர்வாக அமைச்சு செயலரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு பிரதேச செயலகங்களினதும் இரு மாடிக் கட்டட புனரமைப்புப் பணிகள் 2010 பெப்ரவரியில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(203-302)

# யாழ்.மக்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதை கண்காட்சி மூலம் அறிந்து கொண்டோம்

## எம்.டி.குணசேனா நிறுவன முகாமையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்.மக்கள் கல்விக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் என்ற உண்மையை 2002 இல் நேரில் வந்து அறிந்தோம். அதன் விளைவாக யாழ்.மண்ணில் புத்தகக் கண்காட்சியினை நடத்த வேண்டும் என்ற எமது நோக்கம் மிகச் சிறப்பாக நிறைவு கண்டிருக்கிறது என எம். டி. குணசேன அன் சன்ஸ் நிறுவன சந்தைப்படுத்தல் முகாமையாளர் சி.எவ்.லொயிட் குறிப்பிட்டார்.

யாழ்.மத்திய கல்லூரியில் 'பிகோ' நிறுவன ஏற்பாட்டில் எம்.டி.குணசேன அன் சன்ஸ் நிறுவனப் பங்களிப்புடன் இடம்பெற்று வந்த புத்தகக் கண்காட்சி தொடர்பாக கருத்துக்கூறும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

நாம் 2002 இல் யாழ்ப்பாணம் வந்து மாணவர்களினதும் விரிவுரையாளர்களினதும் எழுத்தாளர்களதும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தோம். எம்மிடம் பல நூல்களின் தேவைகளைக் குறிப்பிட்டார்கள். தேவையான குறிப்பிட்ட சில நூல்களை தாம் பெறுவதில் கஷ்டங்கள் இருப்பதாகவும் அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் எம்மிடம் கேட்டனர்.

இக்குறைபாட்டினைத் தீர்ப்பதனை நோக்கமாகக் கொண்டே இப்புத்தக கண்காட்சியையும் விற்பனையையும் மேற்கொண்டோம். மிகக்கூடிய சலுகை அடிப்படையில் மாணவர்கள் நன்மையடையக் கூடியதாக புத்தக விற்பனை செய்யப்படுகிறது.

குறிப்பாக மருத்துவ மாணவர்களுக்கும், ஆங்கில அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள விரும்பும் மாணவர்களுக்கும், கூடிய நன்மையாக இருக்கும்.

யாழ்.கல்வி வலயத்தின் அனுமதியுடன் பாடசாலை மாணவர்களும், பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் 30 பாடசாலைகளுக்கு எமது செலவில் வாகன வசதி ஏற்படுத்திக் கொடுத்து மாணவர்கள் பார்வையிட வசதி செய்து கொடுத்திருக்கிறோம்.

தினசரி 5000 பார்வையாளர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டுச் சென்றனர். பார்வையாளர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தே இப்புத்தக கண்காட்சியையும் விற்பனையையும் ஒரு நாள் நீடித்திருக்கிறோம். நான்கு தினங்கள் நடத்துவது என முதலில் தீர்மானித் திருந்தோம். தற்போது ஐந்து தினங்கள் இடம்பெற்றிருந்தது.

எம்.டீ.குணசேன அன் சன்ஸ் நிறுவனத்தின் கிளை ஒன்றை யாழ்.நகரில் திறப்பதற்கும் முயன்று வருகின்றோம் - என்றார்.

(1-14)

## மரண அறிவித்தல்

### சேவியர் பத்திநாதர் (தங்கராசா)



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சேவியர் பத்திநாதர் நேற்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நேசம்மாவின் அன்புக் கணவரும் பிறின்ஸ்சிலி பயஸ் (பிரான்ஸ்), ஜோய்ஸ்சிலிபயஸ், அருட்சகோதரி மேரி வினோதா A.C.- (மூதூர்), வினிவிறேற் றெபல்னர (நீர்கொழும்பு), அருட்சகோதரி வேஜினி பப்றிஸ்ரா H.C. (Czech) ஆகியோரின் அன்புத் தந்தையும் எடித் அன்றியா, சுஜிதா, அலோசியஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் றொபின், பிரவின், யூலியட், கரோலின், டினேஜா, ஜெனிற்றா, டனிஸ்ரன், லியோனிஸ், மெல்வின், டிலூசன், கிளௌடியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, அருளம்மா, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் மரியம்மா, இராசேந்திரன், காலஞ்சென்ற பிலோமினா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(03.11.2009) செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் பண்டத்தரிப்பு அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(90535) தகவல்:
கீரிமலை வீதி, மனைவி, பிள்ளைகள்,
பண்டத்தரிப்பு. 021 300 2613 அருட்சகோதரி வினோதா A.C.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 'ஏ' பிரிவினர் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்துடன் இணைந்து நடத்தும் ஜீ.சீ.ஈ (உ/த) உயிரியல் பிரிவு ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று திங்கட் கிழமை காலை 8 .30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மீன்பிடியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## பொலிகண்டி கந்தவனத்தில் அன்னாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம், நவ.02

வரலாற்றுச் சிறப்பு மிக்க பொலிகண்டி கந்தவனத்தில் ஐப்பசி பருவதினமாகிய இன்று திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து சுவாமிகளுக்கு சாற்றப்பட்ட திரு அன்னம் கந்தவன சமுத்திரத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு கரைக்கப்படும்.

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், நவ. 02

மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றவர் மின் கம்பத்துடன் மோதுண்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் நேற்று காலை அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நாரந்தனையில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த எல். ஜீவா (வயது - 16) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் [illegible]

(1 - 7)

## மரண அறிவித்தல்கள்

### Dr. C. Rajendram

(Registered Medical Officer, பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் செல் லப்பா இராஜேந்திரம் நேற்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோர்ஜ் கனகராஜா செல்லப்பா - மாகிரட் சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கற்பகத்தின் பாசமிகு கணவரும், ராஜினி சகாயசீலன் (உப அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ரஜாந்தினி சேதுகாவலர் (ஆசிரியை, சென். தோமஸ் கல்லூரி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சகாயசீலன் (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) மற்றும் கர்ஷன் சேதுகாவலர் (H.N.B கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், செருபி, செரினா மேசாக், ஹரேன், மதுரி ஆகியோரின் பாசமிகு பேரனும் இராசம்மா வரத்துங்கம், காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் ராஜகுணநாயகம், இராஜசௌந்தரம், இராஜபூபதி, இராஜதேவி, ஞானோதயன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை 03.11.2009 பி.ப. 4 மணிக்கு நடைபெற்று நல்லடக்கம் கோப்பாய் பரி. கன்னிமரியாள் ஆலய கல்லறைத் தோட்டத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பெத்தனி' தகவல்: கற்பகம் ராஜேந்திரம்
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (90536) (மனைவி).

### சோதிலிங்கம் மங்கையர்க்கரசி (மண்டைதீவு)



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், K.K.S றோட், சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் மங்கையர்க்கரசி நேற்று (01.11.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் சரஸ்வதி அம்மா திலகவதி, தேவவதி, திருஞானசம்பந்தன் ஆகியோரின் அன்புச். சகோதரியும், இலட்சுமிகாந்தன் (ஆசிரியர், உயரப்புலம் மகா வித்தியாலயம், நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), சுந்தரலிங்கம் (கிராம உத்தியோகத்தர், கந்தர்மடம் தென்மேற்கு -ஜே/ 104),காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், தனரஞ்சுதம் (உபஅதிபர், இளையதம்பி மகாவித்தியாலயம்), திருமதி ப. சுந்தரலிங்கம் (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், டினேஷாந்(யாழ்.இந்துக் கல்லூரி), டிலக்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), ராஜ்காந், ஜெயகாந், விஜயராஜ், கஜலக்ஷி, யதீஸ்காந் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 3 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K. K. S. றோட், (90534) தகவல்: மகன்மார், சோ.சுந்தரலிங்கம்
சம்பியன் லேன், (கிராம உத்தியோகத்தர் J/104)
கொக்குவில் கிழக்கு. சோ. இலட்சுமிகாந்தன் (ஆசிரியர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆறு மாதத்தில் அசாத்திய மாற்றங்கள்

கடந்த மே மாதம் நடுப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிரந்தரமாகத் தோற்கடித்து வெற்றி வாகை சூடிக்கொண்டாயிற்று என இலங்கை அரசு அறிவித்தபோது, மஹிந்தர் அரசின் செல்வாக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் அசைக்கமுடியாத உறுதியோடு கிளர்ந்து நின்றது.

ஆனால் இப்போது ஆறு மாதங்கள் கடந்த நிலையில் நிலைமை தலைகீழாக மாறும் அறிகுறி. யாரும் நம்பமுடியாத விதத்தில் குறுகிய காலத்தில் செல்வாக்குச் சரிவு வெளிப்படையாகத் தென்படத் தொடங்கிவிட்டது.

அரசியல், இராணுவ, பொது நிகழ்வுகளில் கட்டவிழும் சம்பவங்கள், மஹிந்தர் அரசின் இறுக்கமான பிடி தளர்ந்து வருவதை வெளிப்படுத்தி நிற்பது கண்கூடு.

உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஒரே சமயத்தில் கடும் நெருக்குதல்களை எதிர்கொள்ளும் இக்கட்டு மஹிந்தரின் நிர்வாகத்திற்கு ஏற்பட்டிருப்பதும் மிகவும் வெளிப்படையான உண்மை.

அசைக்கமுடியாத அரசு என்றும், எதிர்க்கட்சிகள் நெஞ்சு நிமிர்த்தி எதிர்கொள்ள முடியாத கட்டமைப்பு என்றும் கருதப்பட்ட கொழும்பு ஆட்சிப்பீடம் ஆறு மாதங்களுக்குள் பொலபொலத்துப் போகும் துரதிர்ஷ்டம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் போர் வெறித் தீவிரத்தோடு முனைந்து நின்ற முக்கூட்டு 'ஹீரோ'க்கள் இடையே நிலவுவதாகக் கூறப்படும் முரண்பாடு, இந்த அரசுத் தலைமையின் ஆதிக்கப்பிடிக்கு விழுந்த முதல் பலவீனம்.

புலிகளுக்கு எதிரான பெரும் போரை வழி நடத்திய ஜெனரல் சரத் பொன்சேகாவே மிக விரைவில் சீருடைகளைக் களைந்துவிட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான அரசியல் களத்தில் இறங்குவார் என்ற பேச்சுப் பரவலாக அடிபடத் தொடங்கியபோதே மஹிந்தரின் அரசியல் செல்வாக்கும் சந்தேகத்துக்கு உரியதாகிச் சரியத் தொடங்கிவிட்டது.

தென்னிலங்கையின் பௌத்த, சிங்களத் தீவிரப் போக்குடைய பேரினவாதத் தேசியவாதிகளின் நேரடி ஆதரவும், சில சர்வதேச சக்திகளின் பின்புல ஆதரவும், ஜெனரல் பொன்சேகாவுக்குக் கிட்டி வருகின்றன என்று அடிபடும் பேச்சுகளில் உண்மை இருக்குமானால், மஹிந்தரின் செல்வாக்குக்குச் சவால் விடும் மூன்றாவது சக்தியாக ஜெனரல் பொன்சேகா மேல் கிளம்புவது அப்படி ஒன்றும் சிக்கலான விடயமாக இருக்காது என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பீடு.

இதேவேளை, நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருகின்றமையும் மஹிந்தருக்கு ஆதரவான அலை சற்றுப் படுத்துப் போனமைக்குப் பிரதான காரணமாகும். இந்தப் பொருளாதார நிலை வீழ்ச்சிக்குப் பின்னால் பல மூலங்கள் உள்ளன. தீர்க்கதரிசனமற்ற பொருளாதாரக் கொள்கை, மோசமான முகாமைத்துவம், நிதி வீண் விரயம், ஊழல் - மோசடிகள் என்று அந்த மூலங்களின் பட்டியல் நீளும்.

இந்தப் பொருளாதாரப் பின்னடைவுகள் காரணமாக, மக்கள் விரும்பும் வரவு - செலவுத் திட்டம் ஒன்றை முன்வைக்க முடியாத இயலாமையில் சிக்கிக் கிடக்கிறது அரசு. அதனால் அதனைச் சமாளிக்க நிதி ஒதுக்கீட்டு அறிக்கை என்ற தந்திரோபாய வழியை நாடியிருக்கின்றது அது.

பொருளாதாரப் 'பொட்டுக்கேட்டை' - அதனால் ஏற்பட்ட பாதிப்பை - மக்கள் முன் ஒப்புக்கொள்ளாமல் இப்போதைய பாட்டுக்குச் சமாளித்தபடி பொதுத்தேர்தலை சந்திக்கும் உத்தி இது. பொதுத்தேர்தலின் பின்னர் புதிய அரசின் மூலம் வரவு - செலவுத் திட்டத்தை வெளிப்படுத்தி உண்மையை ஒப்புக்கொள்ளும் காய் நகர்த்தல் கட்டவிழ்கிறது. இது சரிப்பட்டு வருமா என்பதற்குக் காலம்தான் பதில் கூறவேண்டும்.

இப்படி வரவு - செலவுத் திட்டத்தையும் அறிவிக்காமல், அதன்மூலம் அரச ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வு பற்றிய பிரகடனங்களையும் வெளியிடாமல், காலத்தை இழுத்தடித்து, தேர்தல் முடியும் வரை விடயத்தைச் சமாளிக்கும் அரசுத் தலைமையின் தந்திரத்துக்கு எதிராக தொழிற்சங்கங்கள் பலவும் ஏற்கனவே முரசு கொட்டி, யுத்தப் பேரிகை முழங்கிக் கிளர்ந்து எழுந்து விட்டன.

இதன் விளைவாக அத்தியாவசிய சேவைத் துறைகளில் வேலைநிறுத்தங்களும், அதனால் சாதாரண வாழ்வியலில் அமைதி கெட்டு நெருக்கடிகளும் தோன்றும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. அசைக்கமுடியாத அரசு என்று ஆறு மாதங்களுக்கு முன்னர் கருதப்பட்ட இந்த ஆட்சிப்பீடத்தை தொழிற்சங்கக் கூட்டமைப்புகள் சீண்டிப் பார்த்து நோண்டும் அளவுக்கு நிலைவரங்களில் திடீர் மாற்றம்.

யுத்தவெற்றி பற்றிய மகிழ்ச்சியில் திளைத்துக் கிடந்த தென்னிலங்கையை, வயிற்றைக் கிள்ளும் பசி இப்போது அதிகம் உறுத்தத் தொடங்கிவிட்டது. விலைவாசி உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்புப் போன்றவை தென்னிலங்கைப் பாமர சமூகத்தை மலைக்கவைத்து நிற்கின்றன.

'யுத்தத்துக்கு அவர்; வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்கவும், மேற்குலகைக் கையில் போட்டு அதிக உதவித் திட்டங்களைப் பெற்றுத்தரவும் வேறு எவரோ....?' - என்று சிந்திக்கத் தலைப்படும் நிலையைத் தெற்கு மக்களுக்கு இந்த ஆட்சிப்பீடம் ஏற்படுத்தி விட்டது - இந்த ஆறுமாத காலத்துக்குள்.

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை விலக்கு, யுத்தக் குற்ற விசாரணை என்று பல அஸ்திரங்களைக் கையில் வைத்துக் கொண்டு, உலக நாடுகள் பலவும் கொழும்பை மிரட்டத் தொடங்கியிருக்கின்றமை மற்றுமொரு கவனிக்கத்தக்க அம்சமாகும்.

ஊழல், மோசடிகள், குளறுபடிகள் குறித்தெல்லாம் மக்கள் பேசத் தொடங்கிவிட்டனர். போதாக்குறைக்கு யுத்தம் முடிந்து ஆறு மாதங்கள் கடந்த பின்னரும் ஊடகங்களுக்கு எதிரான ஆட்சிப்பீட அடக்குமுறை தொடர்கதையாக நீடிக்கின்றது.

இவை எல்லாம், இதுவரை நொந்து, நூலாகித் துவண்டு போய்ப் படுத்துக் கிடந்த எதிர்க்கட்சிகளுக்கு 'விற்றமின்' ஊக்க மாத்திரைகளாக வந்து வாய்த்திருக்கின்றன.

செல்வாக்குச்சரிவு என்ற நோய் ஆட்சி மாற்றத்துக்கு வழி செய்யுமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

# நிறைவேற்று ஜனாதிபதிமுறைக்கு ஆப்பு வைக்குமா எதிர்க்கட்சிக் கூட்டமைப்பு

நேற்றைய (01.11.2009) 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் கட்டுரையிலிருந்து பெறப்பட்டது

விடுதலைப்புலிகளை தோற்கடித்து ஆறுமாதங்கள் முடிவுறும் நிலையில் அரசுக்கு கிடைத்திருந்த பாராட்டுக்களும் வெற்றி முனைப்புகளும் தளர்வு நிலைக்குவந்துக் கொண்டிருப்பது போல் தோன்றுகின்றது. அரசு உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பெற்றிருந்த பெருமையும் புகழும் தேய்ந்து கொண்டுபோவதாக உணரப்படு கின்றது.

அரசியல் - இராணுவ வளர்ச்சி நிலையில் வேகமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள், மக்கள் நாட்டின் அன்றாட நடப்புகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளமை. ஏற்கனவே தலைவிரித்தாடிய இலஞ்சமும் ஊழலும் மேலும் அதிகரித்துவருகிறது. அத்துடன் தொழிற்சங்க மற்றும் மாணவர் அமைதியின்மைகளும் விரிவடைந்து வருவது தெரிகின்றது.

உள்நாட்டில் இராணுவக் கலகம் ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தோன்றியுள்ளதாக கிளம்பியிருந்த பயப்பீதி கடந்தவாரங்களில் தணிந்து போனதுடன் மக்கள் மத்தியில் அமைதிப் பெருமூச்சும் நிலவியது.

அரசியல் மட்டத்தில் கடந்த வாரம் தலைதூக்கிய வேறுஇரு விடயங்களையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

பெற்றோலியத்துறையில் தொழிற்சங்கங்கள் கடந்தவாரம் நான்குநாள்கள் மெதுவாக வேலை செய்யும் போராட்டத்தை நடத்தின. இதனை அரசாங்

## பொன்சேகா அரசியலில் இறங்குவது தொடர்பாக சூசகமாக அறிவிப்பு

கத்தை விழித்துக் கொள்ள செய்வதற்கான தெளிவான ஓர் எச்சரிக்கையாகக் கொள்ளவேண்டும். இதனால் தெருக்களில் வாகன நடமாட்டம் குறைவடைந்ததையும் பெற்றோல் வழங்கும் நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசைகளில் நின்றமையையும் கவனிக்கக் கூடியதாய் இருந்தது.

இந்தத் தொழிற் சங்கங்களால் தமது சம்பள உயர்வு கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் அவை பலமான சில எச்சரிக்கைகளை விடுத்திருந்தன. அவைகளால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இறங்கமுடியும் என்பதும், எரிபொருள் விநியோகத்தை முடங்கச் செய்ய முடியும் என்பதையும் வெளிப்படுத்த முடிந்துள்ளது. இந்த வெற்றியின் அடிப்படையில் இப்போது மின் துறையிலும் நீர் வழங்கு துறைகளிலுமுள்ளவர்களும் அவர்களுடன் சேர்ந்து போராடும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

எனவே மேலும் ஒரு நான்கு நாள் மெதுவாக வேலை செய்யும் போராட்டம் நடைபெறக்கூடிய சாத்தியம் தோன்றியுள்ளது.

ஜே.வி.பியின் தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டங்களில் முன்னிலையில் நின்றுள்ள அதேசமயம் அது நடத்திய வேறு இரு போராட்டங்களும் பெரும் எண்ணிக்கையில் மக்களைக் கவர்ந்து இழுத்திருந்தது. ஒன்று நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது மற்றது பல்கலைக் கழக மாணவர்களின் கோரிக்கைகள் தொடர்பானது.

பல்கலைமாணவர்கள் ஆர்ப்பட்ட ஊர்வலம் லிப்டன்ஸ் சதுக்கத்தில் ஆரம்பித்து கொள்ளுப்பிட்டிக்கு சென்றபோது தர்மபால மாவத்தையில் வைத்து தடுக்கப்படுவார்கள் என்று எதிர்பார்த்தார் கள். அமைதியான முறையில் இல்லாது போனால் குறுந்தடி பிரயோகித்து அல்லது கண்ணீர்ப் புகையடித்து பொலிஸார் தடுப்பார்கள் என்று எதிர்பார்த் திருந்தவேளையில், ஆச்சரியப்படும் விதத்தில் லிபேர்ட்டி தியேட்டரையும் கடந்து அலரிமாளிகைக்கு 100 மீற்றர் தூரத்தில் தள்ளியுள்ள காலிவீதிவரை செல்ல அனுமதிக்கப்பட்டனர். நிலைமையை மிகக்கவனமாக எதுவித அசம்பாவிதமுமின்றி கையாண்டனர்.

வேறுசமயம் என்றால் பொலிஸார் மிகவும் முரட்டுத்தனமாக நடந்து கொண்டிருப்பார்கள். இந்த முறை சம்பவம்

## அரசுக்கு திகில் ஊட்டும் வகையில் பத்து அம்சக் கொள்கை அறிவிப்பு

எதுவும் இடம்பெறாத வகையில் கவனமாக நடந்து கொண்டுள்ளனர் என்று மாணவர் ஒருவர் தெரிவித்தார். ஜே.வி.பி. தனது தொழிற்சங்க பலத்தை தற்பொழுது வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு இவை கவலை தரும் நிலைமைகளாய் இருக்கும் அதே சமயம், கடந்தவாரம் எதிர்க்கட்சிகள் கூட தங்களுக்கிடையில் பொது கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டிருப்பது மேலும் கவலையை அதிகரிப்ப தாய் உள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் இந்தபொதுக் கூட்டமைப்பு செயற்படும் என்று தெரிகின்றது. இந்தக் கூட்டமைப்பில் சேர்ந்துள்ள முக்கிய மூன்று கட்சிகள் வருமாறு:

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலுள்ள ஐக்கியதேசியக்கட்சி, மங்களசமரவீரவின் தலைமையிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி (மங்கள பிரிவு), மனோகணேசன் தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணி ஆகியவையே இந்த மூன்று கட்சிகளும். இந்தக் கூட்டணியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான திட்டமொன்றை நாளை செவ்வாய்க்கிழமை நடத்துவதற்கு அவர்கள் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்தக் கூட்டணி உருவாகியிருப்பதனால் ஐ.தே.கட்சிக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

முன்னர் ரணில்விக்கிரம சிங்கவுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த பல கட்சித் தலைவர்கள் இப்போது மீண்டும் அவர்களுடன் இணங்கிப் போகத் தலைப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்றது.

பொதுக் கூட்டமைப்பு செயல்படுத்துவதற்காக இணக்கம் காணப்பட்டுள்ள 10 அம்சங்களில் பின்வருவன உள்ளடங்கும் என்று தெரிகின்றது:

தாங்கள் பதவிக்கு வரும்பட்சத்தில் 180 நாள்களுக்குள் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிமுறை ஒழிக்கப்படும். புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தவும் நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக் கூறும் வகையிலான பிரதம மந்திரி பதவியொன்றை உருவாக்குவது.

ஜனாதிபதி தாம் விரும்பும் போது நாடாளுமன்றத்தைக் கலைப்பது, அமைச்சர்களை நியமிப்பது போன்ற அதிகாரங்களை ஒழிக்கும் சரத்தும் அரசமைப்பில் சேர்க்கப்படும். அமைச்சர்களின் எண்ணிக்கை அரசமைப்பில் நிர்ணயிக்கப்படும். நாடாளுமன்றத் திலுள்ள உறுப்பினர் எண்ணிக்கைக்கு மூன்றில் ஒரு பங்குக்குமேல் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருக்க வழிசெய்யப்படும்.

நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்படும் ஒரு முன்மொழிவின் மூலம் ஜனாதிபதிக்கு இருந்து வரும் அசா தாரணமான நிறைவேற்று அதிகாரங்கள் யாவும் 30 நாள்களில் ஒழிக்கப்படும்.

ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதின் நிமித்தம் தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை, கருத்துச்சுதந்திரம், அரசியல் சுதந்திரம் ஆகியவை உறுதிபடுத்தப்படும்.

ஊழல் அற்ற நிர்வாகம் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப் படுவதுடன் நாட்டில் தற்பொழுது அதிகரித்துக் காணப்படும் கைலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற ஒரு நிர்வாகம் உறுதி செய்யப்படும்.

சுதந்திரமான ஒரு நாட்டை உருவாக்குவதும், இலங்கை தமது நாடு என்று கருதும் அனைத்து மக்களும் பெருமையுடன் வாழும் வகையில் நிலைமைகள் உருவாக்கப்படுவதும் மேற்படி 10 அம்சங்களில் அடங்கும்.

இந்தத்திட்டத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று என்ன வென்றால்,இந்த நாட்டில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட போர், மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் குழுக்களுக்கு ஆறுதலை ஏற்படுத்துவதற்கான இணக்கப்பாட்டு செயல் முறையொன்றை அறிமுகப்படுத்துவதாகும்.

### சரத்பொன்சேகாவின் எதிர்காலத் திட்டம்

முன்னாள் இராணுவத்தளபதியும் முப்படைகளின் பிரதம அதிகாரியுமான ஜெனரல் சரத்பொன்சேகா அரசியலில் பிரவேசிக்கும் சாத்தியம் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்பொழுது அமெரிக்காவில் தங்கியுள்ள ஜெனரல் சரத்பொன்சேகா வாஷிங்ரனில் பௌத்தவிகாரையில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சியில் சிங்களத்தில் உரை நிகழ்த்தியுள்ளார். அங்கு அவர் பேசிய வற்றில் சில பகுதிகள்:.

போரில் ஈடுபட்டிருந்தவர்களுக்குத் தான்வெற்றியின் பெருமை தெரியும். குறிப்பாக இராணுவம் பெரும் பங்காற்றியுள்ளது. அது பற்றிநான் பேசாவிட்டால் எனது கடமையை செய்யாதவனாகிவிடுவேன். இராணுவத்தில் 5,200 பேர் இறந்துள்ளார்கள். 28 ஆயிரம் பேர் காயமுற்றுள்ளார்கள். போரில் ஈடுபட்டவர்களை வழிநடத்தியவன் என்ற வகையில் அவர்களுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். மக்கள் ஆதரவுஇல்லாதிருந்தால் வெற்றி பெற்றிருக்கமுடியாது.

என்ன செய்ய வேண்டுமோ, அதனை செய்யாமல் இருக்கப்போவதில்லை. தளபதிகள் தொடர்ந்தும் தமது சீருடைகளுடன் இராணுவத்தில் இருக் கப்போவதில்லை. நாட்டுக்கு எல்லாமே நிறை வேற்றப்பட்டு விட்டதாக நான் நினைக் கவில்லை. பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதனால் நாட்டின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப் பட்டு விட்டதாகத் கூறமுடியாது.

முகாம்களில் இடம்பெயர்ந்த மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். அவர்களுக்கிடையில் பயங்கரவாதிகளும் இருந்து வருகிறார்கள். அவர்களை இனம் கண்டு கைது செய்தாக வேண்டும். அப்பகுதிகளில் பாதுகாப்பை உறுதிசெய்தால் தான் யுத்தம் முடிவுற்றதாக நாம் மகிழ்ச்சியடைய முடியும். இந்த நோக்கத்தை நாம் அடைந்தாக வேண்டும் எதிர்காலத்தில் சிலசமயம் நான் இந்த சீருடையைக்களைய வேண்டி வரலாம். குறிப்பாக என்னைப் போன்றவர்கள் வாழ்நாள் முழுதும் இப்படியே இருக்க முடியாது. நாட்டின் பாதுகாப்பை நிலை நாட்ட நடவடிக்கை எடுப்பதிலிருந்து நான் பின் வாங்கமாட்டேன். நாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது எமது கடமை. வெற்றியைப் பாராட்டிக் கொண்டேயிருப்பதில் பயன் இல்லை. எதிர்காலத் தைப் பற்றிக்கவனமாக இருக்க வேண்டும். போரின்போது மக்கள் கவனமாக இருந்ததுபோல் நாடு பத்தி ரமாக இருப்பதிலும் கவனமாக இருத்தல் வேண்டும்.

-இவ்வாறு அவர் தமது உரையில் தெரிவித்துள்ளார். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 17 | 03.11.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | பிரதமை பி.இ. 12.46 வரை |
| நட்சத்திரம்: | பரணி மு.இ. 08.13 வரை |
| சுபநேரம்: | 10.34 -12.04 வரை |
| ராகுகாலம்: | 03.04 -04.34 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவுப்பொருள் வியாபாரிகளால் கடத்தப்பட்டு விற்பனை

## பருப்பு, மா ஏற்றப்பட்ட லொறி ஹபரணையில் பிடிபட்டது

கொழும்பு, நவ. 02

இடம்பெயர்ந்து நிர்க்கதியாகியுள்ள மக்கள் மத்தியில் விநியோகிப்பதற்கென நட்பு நாடொன்றினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கோதுமை மா மூடைகளும், பருப்பு மூடைகளும் திருட்டுத்தனமாக வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுவது தெரியவந்துள்ளது.

அண்மையில் திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதற்காக நட்பு நாடொன்றினால் வழங்கப்பட்ட மா மூடைகளும், பருப்பு மூடைகளும் தோப்பூரிலிருந்து கடத்தப்பட்டு தம்புள்ள பொருளாதார நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த வேளையில் பொருள்களை ஹபரணப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

ஹபரணப் பொலிஸாருக்குக் கிடைத்திருந்த இரகசியத் தகவலையடுத்து அவர்கள் ஹத்தரஸ்கொட்டுவ வீதித் தடுப்புப் பரிசோதனை நிலையத்தில் சம்பந்தப்பட்ட லொறியை நிறுத்திச் சோதனை நடத்தினார்கள்.

இந்த உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டிருந்த லொறியைத் தடுத்து காவலில் வைத்ததோடு அதில் இருந்த ஐந்து நபர்களையும் சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்தனர்.

இந்த நபர்கள் வெகுகாலமாகவே இவ்வாறு உணவுப்பொருள்களைக் கடத்தி வருவது விசாரணையில் தெரியவந்துள்ளது. தம்புள்ளவில் உள்ள முக்கிய வியாபாரப்புள்ளிகள் பலர் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்நபர்கள் விரைவில் பொலிஸ் காவலில் வைக்கப்படுவார்கள் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட லொறியில் இருந்து 50 கிலோ நிறைகள் கொண்டிருந்து 48 பருப்பு மூடைகளும் 50 கிலோ நிறைகள் கெண்ட 50 மா மூடைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ப)

---

### தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

**பானை முறையிலான வடிகலன் தொகுதியை திருத்தம் செய்தல் அல்லது மாற்றியமைத்தல்**

எமது வரணி வடிசாலையில் உள்ள பானை முறையிலான வடிகலன் தொகுதியை 2010ஆம் ஆண்டில் முழுமையாக தொழிற்படுத்துவதற்காக இத்துறைசார்ந்த தொழில் நுட்பவியலாளர் மூலம் அதனைத் திருத்தம் செய்யவுள்ளோம். செய்யவேண்டிய திருத்தத்தினைப் பரீட்சித்து திருத்தத்திற்கான அல்லது முழுமையாக மாற்றியமைப்பதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டை தனித்தனியாகக் குறிப்பிட்டு *தலைவர், தென்மராட்சி ப.தெ.வ. அ.கூ.சங்கங்களின் கொத்தணி, வரணி* என்ற முகவரிக்கு 15.11.2009 ஆம் திகதிக்கு முன்னர் மூடி ஒட்டிய நிலையில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இக் கூறுவிலைகள் அனைத்தும் எமது நெறியாளர் குழுவிற்கு காண்பித்து இறுதி முடிவு அவர்களால் மேற்கொள்ளப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்படும்.

அருட்செல்வம்
*பொது முகாமையாளர்.*

*(சி/562069)*

---

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி நடேசமூர்த்தி சின்னம்மா** (மண்டைதீவு)

*திதி - 02.11.2009*

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு மாறாது
ஒவ்வொரு வினாடியும்
உங்கள் நினைவில் ஏங்கித்தவிக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* *(90525)*

---

### மரண அறிவித்தல்

*திருமதி சிவானந்தசுந்தரம் தெய்வாம்பிகை*
(மணி - ஆசைஆச்சி)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், அல்வாய், கொழும்பு ஆகியவற்றை வதிவிடமாகவும் தற்போது ஓமானில் வசித்து வந்தவருமான திருமதி சிவானந்தசுந்தரம் தெய்வாம்பிகை (மணி) கடந்த (28.10.2009) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல்முத்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்றவரான திருமதி அப்புத்துரை திலகவதியார் மற்றும் கனடாவில் வசிக்கும் சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குகாம்பிகை (ரமணி - ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, பம்பலப்பிட்டி), சிவகணேசன் (ரமணன் - ஓமான்), சிவசங்கரன் (ராகவன் - ஓமான்), அம்பிகை (ரஜனி - ஜேர்மன்), ராதாம்பிகை (ராதா - கனடா), நவாம்பிகை (ராஜி - டென்மார்க்), காலஞ்சென்ற சந்திரவதனா (ஜீவா) ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (BOND Master), முத்துமயில்வாகனம், தனபாலசிங்கம், ஸ்ரீநந்தலோஜன், சந்திராதேவி, ஜெயராணி, சண்முகானந்தா, தயானந்தா, சித்திரானந்தா, விவேகானந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சாந்தகுமாரி, சதானந்தவேல், நிர்மலாதேவி, நித்தியானந்தமனுநீதி, கிருபானந்தமனுநீதி, நளாயினி ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் கோபாலராஜன், வைதேகி, மகிந்தன், அபிராமி, ரிஷபி, புருசோத், சிவராகுலன், வைஷ் ணவி, ரிஷேக், ராகவி, பிரதிகா, மதுஷன், ரமணிதரன், சுவாபி, நிருஷன், கேஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை ஓமானில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிர்மலாதேவி 0217210720
சுழிபுரம் மத்தி
சி.சிவகணேசன் (மகன் - ஓமான்)
0096824811604/ 0096895265531
சி.சிவசங்கரன் (மகன் - ஓமான்)
0096899317836

தகவல்:
திருமதி கு.ஆனந்தகுமார்

(இ/562063)

---

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* ஆண்கள்: மாலை 4 மணி பல்கலைக் கழக வி.க எதிர் சென்றலைட்ஸ் பி அணி.
* பெண்கள்: மாலை 5 மணிக்கு கே. ஸி. ஸி. ஸி. வி.க எதிர் விளையாட்டு விஞ்ஞான அலகு. (1-23)

## வெற்றியாளர் கௌரவிப்பு

சித்தன்கேணி, நவ. 02

சுப்றா (14) கல்வி நிறுவனம் சித்தன்கேணி நட்த்தும் ஆசிரியர் தினமும் வெற்றியாளர் கௌரவிப்பும் இன்று திங்கட்கிழமை சித்தன்கேணியிலுள்ள நிறுவன மண்டபத்தில் செல்வன் த.டிலக்சன் தலைமையில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா தேசிய பாசறை கட்டளை அதிகாரி மேஜர் ஏச். எஸ். ஜயரட்ண, சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதனும் கௌரவ விருந்தினர்களாக வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான குரு சிவஸ்ரீ சு.சுந்தரராஜக்குருக்கள், சி.ஞானச்சந்திரமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்) ஆகியோரும் கலந்து கொள்வர். ஆசியுரையை சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள், வணபிதா அன்ரனி அடிகளார் ஆகியோர் நிகழ்த்துவர். (1-28)


**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
**A/L 2010 & 2011**
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள் &
English
★ Gr. 1 முதல் O/L வரை
★ Gr. 6 To 11 Eng.Medium
★ Gr. 10 - 11 English Lit.
★ புலமைப் பரிசில் (4)
(ஞாயிறு பரீட்சைகளுடன்)
★ I.C.T, G.I.T
(செயன் முறைகளுடன்)
★ சிங்களம்
★ Spoken English


### தவறிவிட்டது

கும்புறுபிட்டி - 06 எனும் விலாசத்தையுடைய ஏகானந்தம் எட்வின் இராஜகுமார் என்பவருடைய அடையாள அட்டை (713284203V) யாழ். ஆஸ்பத்திரி வீதி சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0779589759 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### தவறிவிட்டது

வங்கி வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் என்ற முகவரியுடைய ஞானேஸ்வரன் சற்குணதேவி என்பவரது (607792968V) இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 021 321 2731 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியத்தரவும்.


### தனிப்பட்ட வகுப்புகள்

உயர்தர மாணவர்களுக்கான (A/L 2010, 2011) பொருளியல் பாடமும் மற்றும் தரம் 9,10,11ஆம் ஆண்டுகளுக்கான கணிதபாடமும் யாழ். நகர எல்லைக்குட்பட்ட வீடுகளுக்கு வந்து தனிப்பட்ட முறையில் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு ஏற்ற வகையில் கற்பித்துத் தரப்படும். இவ் வகுப்புக்கள் சனி, ஞாயிறு, புதன்கிழமைகளில் பி.ப - 1 மணி தொடக்கம் பி.ப 6 மணிவரை கற்பிக்கப்படும். இந்த நேரத்தில் விரும்பிய நேரத்தில் உங்கள் வசதிக்கேற்ப கற்பிக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர்: K. ஷாம் T.P - 0771102916


### தவறிவிட்டது

மயிலு வீதி, ஆறுகால்மடம் எனும் முகவரியையுடைய பேரின்பநாதன் சுதாகரன் என்பவரது தேசிய அ. அட்டை (802434634V) ... தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 0776217419 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

---

## மரண அறிவித்தல்கள்

### நாகன் கோதண்டபாணி (முருகையா - சித்த ஆயுள்வேத வைத்தியர்)



மறவன் புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தும்பளை தெற்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் கோதண்டபாணி 31.10.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். தவிர்க்க முடியாத காரணத்தால் பூதவுடல் நேற்றுத் தகனம் செய்யப்படவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை தெற்கு,*
*பருத்தித்துறை.* *(சி/562070)*

தகவல்:
கோகுலரதன் (மகன்).

### மவுனகுரு விஜயதெய்வேந்திரன்

(தபால் ஊழியர், தபாலகம், யாழ்ப்பாணம்)



66/12, இந்துமகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கு, அராலியை வசிப்பிடமாகவும் கொண்ட மவுனகுரு விஜயதெய்வேந்திரன் நேற்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மவுனகுரு- பொன்னம்மா தம்பதிகளின் மகனும், நிர்மலதேவியின் அன்புக் கணவரும் சங்கவியின் (மாணவி, தரம் 6 யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்)தந்தையும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தங்கம்மாவின் மருமகனும் புவனேந்திரராசா, தெய்வேந்திரம் (தபால் பொறுப்பாளர், தபாலகம், யாழ்ப்பாணம்), யோகேஸ்வரி (ஆசிரியை, யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் சகோதரனும் நிர்மலராஜா(ஓய்வூதியர்,வன பரிபாலன உத்தியோகத்தர்), நிர்மலதேவா (வாகனத்திருத்துநர், கனகுகராஜ், திருநெல்வேலி), இலிங்கேஸ்வரன் (தேசிய நீர்வடிகால் அமைப்புச் சபை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலி தெற்கு பூனாவோடை மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அராலி தெற்கு,*
*அராலி.* *(90532)*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி நவரெட்ணராஜா கமலாம்பிகை



கொக்குவில் மேற்கு, புதுவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரெட்ணராஜா கமலாம்பிகை நேற்று (01.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகளும் நவரெட்ணராஜாவின் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் ஞானசூரியனின் (சுவிஸ்) அன்புச் சகோதரியும் ராதை (சுவிஸ்), வசந்தா, காலஞ்சென்ற சந்திரா மற்றும் இந் திரா, மல்லிகா, சாந்தா, சண்முகராஜா, தர்மராஜா, செல்வ ராஜா ஆகியோரின் மைத்துனியும் விதூஷன் (சுவிஸ்), கிருசிகன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி, கொக்குவில் மேற்கு.
T.P. 021 222 3613 (90533)

தகவல்: நவரெட்ணராஜா கணவர்
(பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்).

### திருமதி பாக்கியம் வரதலிங்கம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வரதலிங்கம் பாக்கியம் 28.10.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வரதலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியினரின் மகளும் கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் இராஜலட்சுமி, இரத்தினதுரை, சரோஜினிதேவி (லண்டன்), தர்மகுலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன், ஸ்ரீரஞ்சினி, குமாரலிங்கம், வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேசன், சுரேந்திரன் (இந்திரன்), சுதாகரன், சுதாஜினி, சுபாஜினி, சசிலா, மாலிகா, சோபிதன், ஜீவிதன், நிவேதன், தர்மினி, கௌசி, தயாளினி, புஸ்பலதா, வாமதேவன், சிவதாசன், பார்த்தீபன் ஆகியோரின் பேர்த்தியும் நயனி, கஜனி, அர்ஷனா, ரம்மியன், துவாதீசன், ரூபினி, யாதவன், யதுனன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* *(90529)*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன்,தலைமையுரையாற்றுவதையும், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் நிறுவுனர் நினைவுப் பேருரையினை நிகழ்த்துவதையும் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி கௌரி சண்முகலிங்கன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வின் பிரதம விருந்தினர் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் 'முகில்' சஞ்சிகையை வெளியிட்டு வைக்க மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் பெற்றுக் கொள்வதையும் கல்லூரியின் பிரதி அதிபர் இ.ஆனந்தநடராசா 'முகில்' இதழின் வெளியீட்டுரையினை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: ஓங்காரன்)*

## தென்னிந்திய திருச்சபையின் வருடாந்த விழா இன்று வட்டுக்கோட்டையில்

யாழ்ப்பாணம்,நவ.2

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியாதீனத்தின் 2009ஆம் ஆண்டுக்கான வருடாந்த விழா இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்னிந்திய திருச்சபையின் வட்டுக்கோட்டை தேவாலயத்தில் இன்று மு.ப. 11 மணிக்கு பேராயர் கலாநிதி டானியல் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆதீனத்தின் புதிய அலுவலக கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படும்.

அவுஸ்திரேலிய திருச்சபைகளின் கூட்டிணைப்பின் இயக்குநர் வண.ஜோன் பொன்ஹம்கி கட்டடத் தொகுதியை வைபவரீதியாகத் திறந்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு பொதுக்கூட்டமும் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

முன்னதாக காலை 9மணிக்குத் தேவாலயத்தில் ஆராதனை இடம்பெறும். (அ)

## பொது அறிவுப் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.2

மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் இந்து மன்றத்தினரால் மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள திறந்த பொது அறிவுப் போட்டிக்கான முடிவுத் திகதி டிசெம்பர் இரண்டாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான படிவங்கள் மன்றத்தினால் விநியோகிக்கப்படுவதால் மாணவர்கள் மன்றச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## தவறவிட்ட ஆவணத்தைப் பெறுமாறு அறிவுறுத்து

வலி.வடக்கு,நவ.2

சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள கலாசார மண்டபத்தில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கோவையொன்று கண்டெடுக்கப்பட்டு பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி வவுனியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்கள் கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தபோது தவறியிருக்கலாமென நம்பப்படுகிறது.

இந்த ஆவணங்கள் வடமராட்சியைச் சேர்ந்தவருடையதெனவும் இந்த ஆவணங்களைத் தொலைத்தவர் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் மக்கள் இன்று மீள் குடியமர்த்த அழைத்துச் செல்லப்படுவர்

நல்லூர்,நவ.2

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் இருந்து 2006 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள மக்களை மீளக் குடியமர்த்தும் பொருட்டு இன்று திங்கட்கிழமை அந்தப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

மீளக் குடியமரும் வகையில் இந்த மக்கள் இன்று காலை 8 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு சமுகம் தருமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

மீளக் குடியமரும் மக்களை வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், யாழ்.நகரில் இருந்து மண்கும்பானுக்கு அழைத்துச் செல்லுவார் என்று கூறப்பட்டது.

மண்கும்பான் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் கடற்படையினர் இவர்களுக்கான பதிவுகளை மேற்கொண்ட பின்னர் இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். (203-111)

### வவுனியா நலன் புரி நிலையங்களிலிருந்து வந்து

## வேலணையில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக்க நடவடிக்கை

நெடுந்தீவு,நவ.2

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்துவந்து வேலணை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள மக்களுக்கு குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு மூன்று பவுசர்களை வேலணைக்கு அனுப்ப நீர் வழங்கல் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்சமயம் இதற்கென ஒரு பவுசர் வேலணைக்கு வந்து சேர்ந்துள்ளது. ஏனைய இரண்டும் விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நலன்புரி நிலையங்களில் இருந்து வேலணை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள மக்கள் தமக்குப் போதிய குடிதண்ணீரைப் பெறமுடியாது சிரமப்படுவதாக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் நீர்வழங்கல் அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளரிடம் சுட்டிக் காட்டியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து நீர் விநியோகத்தைச் சீரமைக்கும் பொருட்டு மேற்படி பௌசர்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (203-111)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## யாழ். நகரப்பகுதியில் 2 ஆயிரம் மின் விளக்குகள் பொருத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ். நகரப்பகுதிகளில் இரண்டாயிரம் மின்விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கென வடமாகாண ஆளுநரின் முயற்சியால் வடமாகாண சபையால் 5.57 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வீதி விளக்குகள் ஆயிரத்தி 300 புதிதாகவும்,700விளக்குகள் மாற்றீடு செய்யவும் உள்ளதாக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார். (203- 14)

## விவசாயிகளுக்கு 'இலவச விதைநெல்

யாழ்ப்பாணம்,நவ.2

உணவு விவசாய ஸ்தாபனமும் - விவசாய திணைக்களமும் இணைந்த வகையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இலவச விதைநெல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

சண்டிலிப்பாய் விவசாய போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் தலைமையில் இலவச நெல் விநியோகம் நடைபெறுகின்றது.

உவர் நிலச் செய்கையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மூன்றரைமாத நல்லின நெல்விதைகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை உவர்நிலச் செய்கையால் பாதிக்கப்பட்ட நவாலி வடக்கு, நவாலி தெற்கு, நவாலி கிழக்கு மற்றும் ஆனைக்கோட்டை விவசாயிகள் தமது முழுமையான பாதிப்பு குறித்து சம்மேளனத் தலைவர் அல்லது செயலாளர் ஊடாக கிராம அலுவலரின் சிபார்சுடன் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு விவசாய போதனாசிரியர் திருமதி ப.மணிவண்ணன் கேட்டுள்ளார். (203-302)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.2

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று திங்கட்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்ந்து நடைபெறும் வழிபாட்டில் ஓம்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை,பஜனை, சிறப்புச்சொற்பொழிவு, நாராயண சேவை என்பன நடைபெற்று மதியம் 12.30 மணிக்கு நிகழ்வுகள்நிறைவு பெறும் (10)

## கைதடி முதியோர் இல்லத்துக்கு ஒரு தொகுதி பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.2

கைதடி முதியோர் இல்லத்துக்கு சாப்பாட்டு அறைக்குரிய மேசைகள், கதிரைகள், நுளம்புவலைகள் என்பவற்றை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

இல்ல நிர்வாகிகளிடம் மேற்படி பொருள்களை கையளித்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்குள்ளவர்கள் தமது வாழ்வின் முதுமைப்பருவத்தை சந்தோசத்துடனும் நிம்மதியுடனும் களிக்க வேண்டுமெனவும் அதற்குத் தேவையான வசதிகளை தனது அமைச்சின் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும் எனினும் இனிமேல் அந்நிலையத்திற்கு அடிக்கடி வருகை தந்து முதியோர்களின் குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக அறிந்து அதற்கேற்ப செயற்பாடுகளை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வின் போது முதியோர்கள் தமது கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்தனர். (203- 7)

## போலி இலக்கத் தகடு பொருத்தி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.2

போலி இலக்கத் தகடு பொருத்தி சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப் பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக் கப்பட்டது. வழக்கினை விசாரித்த நீதிவான் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றத்திற்காக 30 ஆயிரம் ரூபாவும், போலி இலக்கத் தகடு வாகனத்தில் பொருத்திய குற்றத்திற்காக 10 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார்.

அபராதத் தொகை செலுத்தத்தவறின் முறையே 15 மாதம், 10 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (203- 207)





வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் விவசாயம்சார் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கான திராட்சைக் கன்றுகள், உபகரணங்கள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி விவசாய திணைக்களத்தில் இடம்பெற்றது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஸ், விவசாய திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார், யாழ்.கமநல சேவைகள் ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், பேராதனை விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ்.நாகதாசன் ஆகியோர் விவசாய உள்ளீடுகளையும் கன்றுகளையும் வழங்குவதைக் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'பிகோ' நிறுவன ஏற்பாட்டில் 'எம்.டி.குணசேன அன் சன்ஸ்' நிறுவனத்தின் பங்களிப்புடன் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்று வரும் புத்தக கண்காட்சி நிகழ்வின் நிறைவு தினமான நேற்று எடுக்கப்பட்ட படங்கள்.
(படம்:.உமா,தமிழரசன்)


## 2ஆவது பிறந்த தின வாழ்த்து




ஜேர்மனியில் வசிக்கும் திரு.திருமதி சுந்தரராஜா - அதேவிகா தம்பதியரின் செல்வப் புதல்வன் சுஷாந் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (2.11.2009) திங்கட்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை ஜேர்மனியில் வசிக்கும் அப்பா, அம்மா இலங்கையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அத்தை, மாமா, மச்சான்மார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், சுவிசில் உள்ள சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணாமார், ஜேர்மனியில் உள்ள சித்தப்பாமார், சித்திமார், அக்கா, அண்ணாமார், தம்பி, U.Kயில் உள்ள மாமாமார், மாமிமார், அனைவரும் நயினாதீவு சுதுமலை, கலட்டி அம்மன் அருள் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறார்கள்.

9,கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: மாமா - வீ.மோகனதாஸ்

(90515)


## மாணவர்களுக்கு வேண்டிய வளங்களைக் கொடுத்தால் எமது மாணவரும் பல்வேறு சாதனைகளை நிகழ்த்துவர்

நல்லூர், நவ.2

விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் துறையில் மாணவர்களுக்கு வேண்டிய வளங்களைக் கொடுக்கும் பட்சத்தில் விஞ்ஞான சாதனைகளை எமது மாணவர்களால் நிகழ்த்த முடியும்.

உலக விஞ்ஞான தினத்தையொட்டிய யாழ்.மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்ற கண்காட்சியைப் பார்வையிட்ட சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

கண்காட்சி குறித்த அபிப்பிராயம் தொடர்பாக செய்தியாளர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் நமது விஞ்ஞான வளர்ச்சி ஏற்கனவே இடம்பெற்றிருக்கவேண்டியதானது.

இடையில் ஏற்பட்ட சம்பவங்களால் அது பின் தங்கி விட்டது. இப்போது அதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

மாணவர்களின் திறமைகள் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் குறித்து அவர்களிடம் கேட்டறிந்ததுடன் மாணவர்களைப் பாராட்டுவதிலும் மகிழ்ச்சியடைகிறேன்.

விஞ்ஞான வளர்ச்சிக்கும் மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்குமான உதவிகளை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சுடன் இணைந்து அனைவரும் மேற்கொள்ள வேண்டும்- என்றார்.

உலக விஞ்ஞான தினத்தையொட்டி நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விஞ்ஞான கைத்தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சின் விதாதாவள விஜயம் ஏற்பாடு செய்திருந்த இக் கண்காட்சியை முன்னதாக சமூக சேவைகள் அமைச்சர் திறந்து வைத்துப் பார்வையிட்டார். யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் இது பற்றிக் கூறும்போது

கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி அமைச்சின் விதாதாவள நிலையம் காட்சியை ஒழுங்கு செய்துள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மாணவர்களின் ஆற்றல்களும் இதனூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் விஞ்ஞான அறிவாற்றலுக்கு கண்காட்சி எடுத்துக் காட்டாக இருக்கிறது- என்றார். நேற்று ஆரம்பமான இக் கண்காட்சி இரண்டாவது நாளாக இன்றும் இடம்பெறும் . (203- 111)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## புதுக்கடைத் திறப்பு விழா



அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் (02.11.2009) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.04 மணி முதல் 1.10 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்

**ஸ்ரீ லக்ஷ்மி ஜுவலறி**

எனும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிப்பதற்கு இறைவன் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்,

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் முன்பாக).

நா.இராமகிருஸ்ணன் (ரமேஸ்)
(உரிமையாளர்).

(சி/562046)


## 16ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
**இரத்தினசிங்கம் சிவஞானதேவி**
(சைவச் செம்மல்)

திதி : பூர்வபக்ஷ பிரதமை

தோற்றம்: 29 ✱ 10 ✱ 1954
மறைவு: 19 ✱ 10 ✱ 2009

ஆண்டு விரோதி ஐப்பசி நற்றிங்கள்
பூண்ட பூர்வபக்கப் பிரதமையே - மாண்டபுகழ்
சிவஞான தேவி இரத்தின சிங்கத்தை நீத்துயர்
சிவஞானப் பேறடைந்த தினம்.

சிவன்கோயிலடி,
K.K.S வீதி, இணுவில்.

(90519)

தகவல்:
குடும்பத்தினர்.


## அலுவலக உத்தியோகத்தர் உடன் தேவை

கம்பியூட்டர் ரைப்பிங், INTERNET, E.MAIL, SCANNING, GRAPHIC DESINING என்பவற்றில் நன்கு பரீட்சயமான அத்துடன் ஆங்கிலத்தில் உரையாடக்கூடிய உத்தியோகத்தர் தேவை.

திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். 04.11.2009 அன்று (புதன்கிழமை) காலை 9.00மணிக்கும் பி.ப 4.00மணிக்குமிடையில் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு: 0774528818

148, கோயில் வீதி, (யுனிசெவ் முன்பாக யாழ்ப்பாணம்) (சி/56062)


## தொழில் முயற்சியாளர் விருது வழங்கும் நிகழ்வு

யாழ்.நவ.2

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழிற்துறை மன்ற தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையுடன் இணைந்து இலங்கை வர்த்தக தொழிற்துறை மன்றங்களின் சம்மேளன தலைவர் மற்றும் பணிப்பாளர் நடத்தும் வருடத்திற்கான இலங்கைத் தொழில் முயற்சியாளர் வடமாகாண விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பிரதம விருந்தினராகவும், யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கௌரவ விருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்து கொள்வர்.

(203-14)

## மரண அறிவித்தல்

### சுப்பையா குமாரவேல் (மாம்பழம்)



கொக்குவில் மேற்கு, கே.கே.எஸ் வீதி, "சுந்தர பவனத்தை" பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது இங்கிலாந்தில் வசித்தவருமாகிய சுப்பையா குமாரவேல் (மாம்பழம்) 30.10.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான சுப்பையா - நாகரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலம் சென்ற சிவபாக்கியவதியின் அன்புக்கணவரும், காலம் சென்றவர்களான தம்பு- அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயக்குமார், ரஜனி, ராஜ்குமார், அமரர் பிறேம்குமார், வதனி, விஜயகுமார், உதயக்குமார், சாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றமணி, சச்சிதானந்தம், பிருந்தா, நடராஜா, ரவீந்திரமாலா, மேரி, வர்ணகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அனுசூரியா, அனுஜா, அனுராஜ், ஜெயதினி, ஷாலினி, பிரசன்னா, நிருஷன், சானுஷன், பிரணீஷான், பிரதீப், பிரமிலன், பிரவீனா, அஞ்சலோ, டானியல், ஏஞ்சலா, ஹெலன், சர்மிலா, துர்ஷனா,நிலானி ஆகியோரின் பாசமிகு பேரனும், நல்லையா, இராசமலர், அமரர். Dr.இரத்தின சிங்கம், இன்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லக்ஷ்மி காந்தன், ஸ்ரீஸ் காந்தன், இராஜகாந்தன், ஜெயகாந்தன் காலம் சென்ற காந்தினி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் இந்தி ராணி, அமரர். கிருஸ்ண பிள்ளை, Dr.சுசான், இராஜரட்ணம், காலம் சென்றவர்களான சிவலக்ஷ்மி தேவி, விவேகானந்தன் மற்றும் சிவசுப்பிரமணியம், சிவபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 08.11.2009 ஞாயிற்றுக்கிழமை இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

No: 06, Fernando Road,
Mount Laviniya.

தகவல்:
இராசமலர் கிருஸ்ணபிள்ளை,
Dr.இளங்கோ,
திருமதி மஞ்சுளா இளங்கோ.

(90523)


தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

## வாழும் கலைப்பயிற்சி பாகம் - I



(பிராணாயாமம், பாஸ்கிரிகா, சுதர்ஸனகிரியா எனும் சிறப்பு மூச்சுபயிற்சி உள்ளடக்கியது)

✱ மன உளைச்சல், மன விரக்தி நீங்கி அமைதி பெற
✱ உயிர்சக்தியை அதிகரிக்க செய்து விழிப்புணர்வைக் கூர்மையாக்க
✱ நோய்கள், உபாதைகள் உடலை விட்டு நீங்கிட

**இலவச அறிமுக உரை**

இடம் :- கம்பன் கோட்டம்
காலம் :- 03.11.2009 ( செவ்வாய்க்கிழமை)
நேரம் :- பிற்பகல் 5மணி
பயிற்சி நாள்கள்:- 04.11.2009 முதல் 08.11.2009 வரை

மேலும் விவரங்களுக்கு.,

**வாழும் கலை அற நிறுவனம்**

T.P: 0777250879,0771777998,0212227030

(90521)

## வாடகைக்கு

யாழ். சிறாம்பியடி வீதியில் அலுவலக பாவனைக்குகந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குள்ளது.

தொடர்பு:.0212222912, 0776029664 (90503)

## மூக்குக் கண்ணாடி விற்பனை

சிறுவர்கள், பெரியோர்களுக்கான நவீன டிசைன் மூக்குக் கண்ணாடிகள் மிகவும் குறைந்த விலையில் கண் பரிசோதித்து வழங்கப்படும்.

தொடர்பு:.VISION CARE OPTICAL,
17, Palaly Road, Jaffna.

(90494)

## தவறி விட்டது

செட்டிகுளம், கதிர்காமர் நலன்புரி நிலையத்தில் இருந்து புறப்பட்டு 28-10-2009 புதன் கிழமை இரவு சாவகச்சேரி கலாசார மண்டபம் வந்தடைந்தோம். அப் [illegible] இடப்பட்ட உரப்பைப் பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும். திருமதி [illegible] புஸ்பராஜா (ஆசிரியர்), கைதடி வடக்கு, கைதடி.

T.P.0213218077, 0774145270. (90518)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வில் முன்னேற்றம் காண்பதாயின் 13ஆவது திருத்தத்திலிருந்து உந்திப்பாய வேண்டும்

(நேற்றைய தொடர்ச்சி)

### உச்ச நீதிமன்றத்தினூடாக அதிகாரப் பகிர்வை பரிசோதித்துப் பார்த்தல்

13ஆவது திருத்தம் இது வரைகாலமும் சட்டரீதியில் முழுமையாக நிறைவேற்றப்படவில்லையா? அப்படியானால் எவையெவை நிறைவேற்றப்படவில்லை? அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளவைகள் குறைபாடான முறைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு விடயங்களை முழுமையாக நிறைவேற்றுதல் அல்லது அரைகுறையாக நிறைவேற்றுதல் என மேற்கொள்ளமுடியுமா? அரசியல் யாப்பானது வெளிப்படையாக சட்டவார்க்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ளபோது அந்த அதிகாரங்களை யாராவது யாருக்காவது கொடுத்தல் அல்லது கொடுக்க மறுத்தல் என விடயங்கள் உள்ளனவா? அரசியல் யாப்பு மூலமாக மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு மறுக்கமுடியுமா? அப்படி மறுக்கப்படுகின்ற விடயங்களுக்கு தீர்வுதர வேண்டியது ஜனாதிபதியா? மத்திய அமைச்சரவையா? நாடாளுமன்றமா? அல்லது உச்ச நீதிமன்றமா? இவை போன்ற கேள்விகளை எழுப்பி சட்டபூர்வமான சரியான , தெளிவான விடைகளைத் தேடுவதும் இப்போதைய அவசியமாகும்.

இந்தியாவில் உள்ளது போல இலங்கையிலும் உச்ச நீதிமன்றமே அரசியலில் யாப்பின் காவலன்- அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள நீதி நியாயங்களை நிலைநிறுத்த வேண்டிய கடமையாளன் மத்திய மற்றும் மாகாண ஆட்சி அமைப்புக்களுக்கு இடையில் அதிகாரம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் வரும்போது தீர்த்து வைக்கும் வல்லாண்மை உச்சநீதி மன்றத்துக்கே உண்டு. 13ஆவது திருத்தத்தின் உண்மையான அதிகாரப் பகிர்வு அமைவை உச்ச நீதிமன்றத்திலேயே பரிசோதித்து பார்த்தல் வேண்டும்.

மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையே அதிகாரப் பகிர்வு குறித்த சிக்கல் ஏதும் ஏற்படுமாயின் அந்தப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசோ அல்லது மாகாண அரசோதான் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்கவேண்டும். அந்தவகையில் பார்க்கையில் கிழக்கு மாகாணம் உட்பட எல்லா மகாண ஆட்சிகளும் மத்திய ஆட்சியாளரின் சார்பான ஆட்சிகளாக இருக்கும் நிலையில் யார் அவ்வாறன வழக்கைத் தொடுக்க முன்வருவார்கள், இப்போதுள்ள எந்த மகாண முதலமைச்சராவது 13ஆவது திருத்தத்தின்படி நிறைவேற்றப்படாதவற்றை நிறைவேற்றும்படி கேட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் நிலையில் உள்ளாரா என்பன கேள்விக்குறிகளே!

**கடந்த சுமார் ஆறரை தசாப்தங்களாக இலங்கையின் முதல் சாபக்கேடாகி அதனை உலுக்கிவரும் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான உகந்த அரசியல் முறைமை அல்லது தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்?**

**இது குறித்து பல்வேறு குரல்கள் - கருத்துக்கள் வெளிக் கிளம்புகின்றன.**

**வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியைச் (பத்மநாபா அணி) சேர்ந்தவருமான அ.வரதராஜப் பெருமாள் தரும் கருத்தை ஞாயிறு உதயனில் "உரைகல்" பகுதியில் இங்கு தருகின்றோம்.**



கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கப்பட்டு சில வாரங்களில் அனைத்து மாகாண முலமைச்சர்களின் மாநாடு செயற்பட ஆரம்பித்தது மாகாணங்களுக்கு அதிகாரங்கள் போதியஅளவு பகிரப்பட வேண்டும் என்ற குரல் எழுந்தது. ஆனால் ஏதோ காரணத்தால் அந்தக் குரல் எழும்பிய அதே வேகத்திலேயே அடங்கிப் போய்விட்டது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான ஒரு வழக்கை ஏதாவது ஒரு பொதுநிறுவனமோ அல்லது ஒரு நபரோ பொதுநலன் சம்பந்தப்பட்ட வழக்கு என உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கலாமா என ஆராய்ந்து அதற்கேற்றபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். இவையெல்லாம் செய்யும் அக்கறையும் போக்கும் அரசியல் சக்திகள் மத்தியில் நிலவினால்தான் அதிகாரப்பகிர்வு பற்றிய ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும். அத்துடன் 13ஆவது திருத்தம் பற்றிய தெளிவான நிலைமைகளும் வெளிப்படும். சிங்களப் பேரினவாத சக்திகள் வடக்கு கிழக்கு மகாணங்களைப் பிரிப்பதிலும், அதிகாரப் பகிர்வுக்கு எதிராகவும் உச்ச நீதிமன்றத்தைப் பயன்படுத்துவதில் கொண்டிருக்கும் அக்கறையும் ஈடுபாடும் ஜனநாயக முற்போக்கு சக்திகளிடம் அவர்களது இலக்குகள் தொடர்பாக காணப்படவில்லை என்பதே வேதனையான உண்மையாகும்.

அரசியல் யாப்பில் உள்ள 13ஆவது திருத்தம் வழங்கியுள்ள அதிகாரப் பகிர்வுகளை செயற்பட வைப்பதற்கு அவை சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்தையும் அணுகி அது ஒரு விரிவான ஆழமான தலையீட்டை மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதும் அவற்றினை மேற்கொள்வதும் நாம் அவசியமாகவும் உடனடியாகவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

உச்ச நீதிமன்றம் 13ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் அந்த விடயங்கள் அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்டதன் அடிப் படைகளையும் கவனத்திற் கொண்டு கீழே கூறப்பட்டுள்ள பிரதானமான மூன்று வகைப் பட்ட விடயங்களுக்குரிய தெளிவான சட்ட விளக்கங்களைத் தருவதோடு அவற்றிக்கு அமைவான கட்டளை களையும் பிறப்பித்தல் வேண்டும்.

1] 13ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை முழு மையாகவும், சரியாகவும் மத்திய அரசாங்கம் நிறை வேற்றாமையைக் கண்டறிதல் உதாரணமாக தேசிய மற்றும் மகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை நியமிக்காமை, மாகாணங்களுக்கு உரிய நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களையும், இலாக்க ளைகளின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக் களையும் உரிய நிறைவேற்று அதிகாரங்களுக்கு அமைய இன்னமும் பகிரப்படாமை போன்றன.

2] 13ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களில் மத்திய அரசாங்கம் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகின்றமையை வெளிப்படுத்துதல், உதாரணமாக கிழக்கு மகாணத்தில் நிதி அமைச்சர் பதவியையும் அதிகாரங்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சருக்கு ஆளுநர் கையளிக்க மறுப்பது ஆசிரியர் வேலைகளை மத்திய அமைச்சரே வழங்குவது வைத்தியசாலை மற்றும் சுகாதார விடயங்களின் அதிகாரங்களை இன்னமும் மத்திய அமைச்சரே வைத்திருப்பது போன்றவை.

3] 13ஆவது திருத்தத்தில் உள்ள சில முக்கியமான சொற்பதங்களுக்கு சரியான சட்ட விளக்கங்களைத் தருதல் உதாரணமாக மாகாணங்களின் வரிவருமானங்கள் ,பொது நிரலில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தினதும் மீதான நிறைவேற்று அதிகாரம் எந்த ஆட்சியமைப்புக்கு உரியது, மற்றும் ஆளுநரின் நிறைவேற்று அதிகார வரையறைகள் போன்ற விடயங்கள்.

உச்ச நீதிமன்றத்தை அணுகுவதன் மூலம் நாம் எதிர்பார்க்க கூடிய திருப்பதிகரமான நிலையை எந்தளவு அடையலாம் என்பதை இப்போதே எதிர்வு கூற முடியாது -எனினும் அதை முறையாக அணுகுவதன்மூலம்சில பலாபலன்களை அடைய வாய்ப்புகள் உண்டு.

### 13வது திருத்தம் நிரந்தரமான அரசியற் தீர்வாகுமா?

13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படகூடாது என சிங்களப் பேரினவாத சக்திகள் கூச்சல் போடுவதில் இருந்தே 13ஆவது திருத்தத்தில் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன என்பதை புரிந்துகொள்ளலாம். ஆனாலும் 13ஆவது திருத்தம் இப்போதுள்ள அதன் அமைப்பு, குறைபாடுகள், முரண்பாடுகள் ஆகிய காரணங்களால் மாகாணங்களுக்கான உண்மையானதும், போதுமானதுமான அதிகார பரவலாக்கத்துக்கு திருப்திகரமானதல்ல. இலங்கையின் அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைக்கான அதிகாரங்களை அளிப்பதில் திருப்பதியற்ற ஒன்று என 20 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை அரசுடன் அரசியலில் ரீதியல் போராடி அந்த 13ஆவது திருத்தத்திற்கு மாற்றாக பத்தொன்பது அம்சக் கோரிக்கைகளை இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பொறுப்பாளியான இந்திய அரசுக்கும் அன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கும் வடக்கு- கிழக்கு இணைந்த மாகாண சபையின் உத்தி யோகபூர்வமான தீர்மான மாக இலங்கை அரசுக்கும் முன்வைத்திருந்தேன். அவற்றினை அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா நிதானமாக நாட்டு மக்க ளின் நலன்கருதி பரிசீ லித்து அமுலாக்கி இருந் திருந்தால் அதற்கு பின்னர் தொடர்ந்து ஏற்பட்ட சொல் லொணா உயிர்உடமைகளின் இழப்புக்களையும், அனர்த்தங்களையும் தமிழர்களின் இன்றைய இழிநிலையையும் நிச்சயமாக தவிர்த்திருக்கலாம். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகி விட்டது. பிரேமதாசாவின் அலட்சியத்திற்கு புலிகளும் துணைபோனது நல்ல வாய்ப்பாகி விட்டது. இதனால்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று மாகாண சபை அதிகாரத்தை கைவிட நேர்ந்தது. எமது அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டபடியாற்தான் பின்னர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட சந்திரிக்கா அவர்கள் ஓர் அரசியல் தீர்வை முன்வைத்தார். 13ஆவது திருத்தம் போதியதல்ல என்ற நிலைப்பாட்டினால்தான் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் கமிட்டியை அமைக்க வேண்டியேற்பட்டது. எனினும் இப்போதுள்ள அரசியல் யாப்பில் ஏற்கனவே 13ஆவது திருத்தம் என்ற வடிவில் அதிகாரப் பகிர்வு உள்ளது என்ற வகையில் இப்போதைக்கு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு நல்ல நோக்குடன் தற்காலிகமாக அதிகாரப் பகிர்வு விடயங்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமானது. முறையாக உள்ளடக்கங்களைக் கொண்ட சரியானதொரு அரசியல் தீர்வின் வரைவு இறுதி செய்யப்பட்டு சட்டமாக்கப்படுவதற்கு ஒரு கால அளவு கட்டாயமாக தேவைப்படும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அது ஒரு கபட உள் நோக்கம் கொண்ட திட்டமிடப்பட்ட கால தாமதமாக இருக்கக் கூடாது. அந்த இடைக்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடியான அரசியல் நடவடிக்கையாக மக்கள் மத்தியில் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பும் விதமாக 13ஆவது திருத்தத்தை ஆக்கபூர்வமாக அமுல்படுத்தலாம்.

ஆனால் தொடர்ந்தும் 13ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணங்களுக்கான பரவலாக்கங்களை இதயசுத்தியுடன் மத்திய அரசால் நடைமுறைப் படுத்தப்படாவிட்டால் இருக்கும் சிறிய நம்பிக்கைகளும் சிதறடிக்கப்பட்டுவிடும். 13ஆவது திருத்தத்தை ஆக்கபூர்வமாக செயற்படவைப்பதற்குரிய நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்குமிக்க அரசியல் சக்திகள், புத்திஜீவிகள் செயற்படாமல் இருப்பதுவும் தவறாகும். அர்த்தமுடையதும் பயனுள்ளதுமான வகையாக 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அது தொடர்பாக சில அடிப்படையான விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அவற்றில் பிரதானமானவை பின்வருமாறு:

1] 13ஆவது திருத்தத்தை முடிந்தளவு மாகாண சபைகளுக்கு சார்பாக விளக்கமளிக்கும்படி அதிகாரம் கொண்ட அதிகாரப் பகிர்வு ஆணைக்குழு (Devolution Commission) ஒன்று ஜனாதிபதியால் கட்சி சார்பற்ற நிபுணர்களைக் கொண்டு உடனடியாக அமைக்கப்படல் வேண்டும். இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அதிகாரப்பகிர்வின் நடைமுறை விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2] மதிப்புக்கூட்டுவரி (Vat) உட்பட விற்பனைவரிகள் (Sales Taxes), மதுபான வரிவருமானங்கள் (Taxes and other Revenues On Alcohols), சொத்து மாற்ற வரிகள் (Stamp Duties On Property Transfers ) போன்றன உட்பட மாகாண சபைகளின்வரி வருமானங்களென 13ஆவது திருத்தத்தில் உள்ள 19வகை வருமானங்களும் திரட்டப்பட்டு காலதாமதமின்றி முழுமையாக மாகாண ஆட்சிகளுக்கு உரியபடி பகிர்ந்தளிக் கப்பட வேண்டும். அத்துடன் வருமானவரி (Income Tax), சுங்கவரிகள் (Custom Duties) மற்றும் வெளிநாட்டு வர்த்தக (Foreign Trade) வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தி லும் கணிசமான பங்கு மாகாண அரசுகளுக்கு தேசிய நிதி ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் பகிரப்படவேண்டும். மத்திய அரசாங்கத்தால் மட்டுமே நிர்வகிக்கப்பட வேண்டிய விடயங்களான நாட்டின் பாதுகாப்பு, ஒருமைப்பாடு, வெளிநாட்டுறவு, கப்பல்துறை மற்றும் துறைமுகங்கள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள், றெயில்வே, மத்திய நிதி நிர்வாகம், வங்கிகள், தொலைத் தொடர்புகள், தொலைக்காட்சிகள் மற்றும் வானொலி கட்டுப்பாடுகள், வெளிநாட்டு வர்த்தகம் போன்ற நாடு தழுவிய மற்றும் தேசிய விடங்களைத் தவிர ஏனைய விடயங்கள் பெரும்பாலும் மாகாண சபைகளால் நிறைவேற்றப்படுபவையாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு மத்திய நிதி வளங்கள் மாகாண அரசுகளுக்கு வழங்கப்படல் வேணடும்.

3] அதற்கு உரிய வகையில் குறைந்த பட்சமான அமைச்சுக்களையும் நிர்வாக கட்டமைப்புக்களையும் வைத்துக் கொண்டு ஏனையவற்றை மாகாண அரசுகளிடம் விட்டுவிட வேண்டும். இதன் மூலம் அநாவசியமாக உருவாகும் இரட்டை நிர்வாக அமைப்புக்களையும் அதனால் ஏற்படும் இரட்டைச் செலவீனங்களையும் தவிர்ப்பதோடு மாகாண அரசுகளை மக்கள் மத்தியில் சமூக பொருளாதார அபிவிருத்தி விடயங்களில் காரியதாக்கம் கொண்டவையாக செயற் படும் நிலையை உருவாக்கவேண்டும்.

4] மத்திய அரசின் அதிகாரத்துக்குட்பட்ட பெரு வீதிகள், சிறப்பு வீட்டு திட்டங்கள், குறிப்பிட்ட சமூக நலத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங் கள் என்பன மகாண அரசின் நிறைவேற்று நிர்வாகங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்விடயங்களில் மத்திய அரசாங்கம் மாவட்டங்கள் தோறும் தனது மேற்பார்வை அதிகாரிகளைக் கொண்டிருப்பதைத் தவிர கீழ் நிலைப்பட்ட இலாகாக்களைக் கொண்டிருக்கக் கூடாது.

## உரைகல்

5] அரசாங்க அதிபர்கள் உட்பட பொதுநிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அந்தந்த மாகாண ஆட்சிகளின் நிர்வாகங்களுக்கு உட்பட்டவர்களாக ஆக்கப்படுதல் வேண்டும். மத்திய அரசின் விடயங்களை நிறைவேற்றுவதில் அந்த உயர்நிர்வாக அதிகாரிகள் மத்திய அரசின் கட்டளைகளுக்குப் பணிவாக செயற்பட வேண்டும். அப்படியில்லையாயின் மாகாண ஆட்சிகள் தமக்கென மாவட்டங்கள், பிரதேச எல்லைகள், கிராமங்கள் வரை பொது நிர்வாக அதிகாரிகளையும் ஊழியர்களையும் தனியாகக் கொண்டிருக்க வகை செய்ய வேண்டும்.

6] புனர்வாழ்வு வேலைகளும், மத்திய அரசின் கட்டடங்கள் தவிர்ந்தவற்றின் அனைத்து புனரமைப்பு வேலைகளும் முழுமையாக மாகாண அரசுகளின் அதிகாரத்துக்கு உட்பட்டவையாக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். அந்த வகையில் அவற்றுக்கான நிதிகள் மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்டவையாக ஆக்கப்பட வேண்டும்.

7] விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி, நகரங்களின் அபிவி ருத்தி, சிறுதொழில்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள், சமூகநல சேவைகள், கூட்டுறவு அமைப்புக்கள், மாகாணங்களுக்குள் வர்த்தகம், மாகாணங்க ளுக்குள் போக்குவரத்து, உள்ளூர் சுற்றுலாத்துறை போன்றவையும் அவை தொடர்பான விடயங்க ளும் முழுமையாக மாகாண அரசுகளின் அதிகாரங் களாக அமையும் வகையில் நடைமுறைப்படுத் தப்படவேண்டும்.

8] மத்திய அரசின் கல்வி நிலையங்கள் என விசேடமாகக் குறித்து அறிவிக்கப்பட்டவற்றைத் தவிர ஏனைய அனைத்து பள்ளிக்கூடங்களினதும் மற்றும் தொழில் பயிற்சிக் கல்வி நிலையங்களினதும் அபிவிருத்தி, நிர்வாகம், ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றின் முழுமையான அதிகாரம் மாகாண சபைகளுக்கு உரியதாக விடப்பட வேண்டும்.

9] மத்திய அரசுக்கு உட்பட்டதென திட்டவட்டமாக கூறப்பட்டவற்றை தவிர ஏனைய அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய சேவைகளின் விருத்தியும் நிர்வாகமும், மேலும் சுகாதாரம், மருந்துகள் மற்றும் தொடர்பான அதிகாரங்களும் தலையீடற்ற ...ாக மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

10] மாகாண பொலிஸ் பிரிவானது மாகாண சபையின் சட்டங்களுக்கும் மாகாண முதலமைச்சரின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவாக செயற்பட வேண்டும் என்ற நிர்வாக ஏற்பாடு ஒன்றை ஜனாதிபதி மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மாகாண மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுக்களை காலதாமதமின்றி நியமிக்கவேண்டும்.

11] காடு மற்றும் அரச நிலங்களின் பாவனை தொடர்பாக மத்திய அரசு கொள்ளும் சுற்றுச் சூழல் கொள்கைகளுக்கு அமைய மாகாண அரசுகளே நிலப் பாவனை, நில நிர்வாகம், நில அபிவிருத்தி, நிலப்பகிர்வு, அரசநிலங்களில் குடியேற்றங்கள் மற்றும் காட்டு வளங்கள் பற்றிய விடயங்களில் முழுமையான நிவேற்றதிகாரம் கொண்டிருக்க வகை செய்தல்வேண்டும்.

12] தேர்தல் நடத்துவதை தவிர உள்ளுராட்சி அமைப்புக்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மாகாண ஆட்சிகளுக்கு உட்பட்டவையே என்பது உறுதியாக நிலை நாட்டப்படவேண்டும்.

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தத்தை இந்திய- இலங்கை சமாதான உடன்பாட்டுக்கு அமைவாக நிறைவேற்ற வேண்டுமாயின் தமிழர்களின் அரசியற் கோரிக்கைகளை குறைந்த பட்சமாயினும் முறையாகத் தீர்த்துவைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்பது உண்மையானால் மேலே குறிப்பிட்டுள்ள பிரதானமான விடயங்களை குறிப்பிட்டுள்ள பிரகாரம் நிறைவேற்றினால்தான் 13 ஆவது திருத்தம் பயனுடையதாக இருக்கும். அப்போது தான் 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படும்-நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்வதில் உண்மையான அர்த்தம் ஏற்படமுடியும்.

அதைவிடுத்து அரசியலில் மற்றும் ராஜரீக அழுத்தங்களைத் திசைதிருப்புவதற்காக மேலெழுந்தவாரியாக 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி அளிப்பதிலோ அல்லது 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று வாக்கு வேட்டைக்காக தேர்தல் கோஷம் போடுவதிலோ அர்த்தமில்லை. அதேபோல் 13ஆவது திருத்தத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அது புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்று எனச் சொல்வதுவும் தவறாகும்.

மேற்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் எதுவும் அதீதமான கோரிக்கைகளோ அல்லது 13 ஆவது திருத்தத்தை மீறியவையோ அல்ல. உண்மையில் 13ஆவது திருத்தத்தை சரியாக அமுல்படுத்தி மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்படவேண்டும். மாகாண ஆட்சிகள் அரசியல் ரீதியில் அர்த்த புஷ்டி உடையவையாக இருக்கவேண்டும் என்றால்- மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் காரிய சித்தி உடையவையாக அவை செயற்படவேண்டுமென்றால், நான் கூறியுள்ளபடி 13ஆவது திருத்தம் வியாக்கியானம் (interpretation) தரப்பட்டு விடயங்கள் நடைமுறையாக வேண்டும்.

அதற்கு மாறாக கடந்த 20 ஆண்டுகளாக தென்னிலங்கையில் ஏழு மாகாண ஆட்சிகளுக்கும், கடந்த 15 மாதங்களாக கிழக்கு மாகாணத்துக்கும் வழங்கப்பட்டது போலத்தான் இனியும் தொடர்ந்து மாகாண ஆட்சிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் இந்த மாகாண ஆட்சிகள் தெண்டச் செலவும் உண்மையான அதிகார பரவலாக்கத்தை உள்ளடக்காத அரசியல் பம்மாத்தும் ஆகும். இது மத்திய ஆட்சியாளர்கள் உலகுக்கு வேடிக்கை காட்டவும், சுமார் 400 பேருக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என ஊரைச் சுத்தும் பதவியளிக்கவும், 45பேருக்கு மாகாண அமைச்சர்கள் என மக்கள் பணத்தில் ஒரு பகுதியை சுருட்டும் வாய்ப்புக்களைத் தரவும் தவிர வேறெதற்கும் பயன்படாது.

ஜனாதிபதியும் அவரோடு இணைந்த ஆட்சியாளர்களும் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதில் கொண்டிருக்கும் நோக்கத்தையும் பயன்படுத்தும் விதத்தையும் பொறுத்ததுதான் 13ஆவது திருத்தத்தின் பயன்பாடு அமையும். 13ஆவது திருத்தத்தை நல்லபடி நிறைவேற்றுவது என்பது ஒரு பெரும் அரசியற் சவால்.

### ஜனாதிபதி செய்ய வேண்டியன

13ஆவது திருத்தத்தை முழுமையாகவும், முறையாகவும் நிறைவேற்ற விரும்பத் தயாராகும் ஒரு ஜனாதிபதி, குறிப்பாக இரண்டு விடயங்களை அடிப்படையில் சாதிக்கவேண்டும்.

1] இப்போது 90 பேர் மத்திய ஆட்சியில் அமைச்சர்களாக இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையை ஆகக் கூடிய பட்சம் 35 [225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 15 சதவீதம்] பேருக்கு மேல் இல்லாது குறைக்க வேண்டும். ஏனென்றால் அத்தனை அமைச்சர்களை மத்தியில் வைத்துக்கொண்டு மாகாண அமைச்சர்களுக்கான பணிகளையும் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் உரிய வகையிலும், காரியதாக்கம் கொண்டவையாகவும் வழங்க முடியாது.

[14ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மன்னார்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

✱ மிகப் பொருத்தமான விடையை தெரிவுசெய்க.

01 'அலங்கு தாரக் கோதையை காணிய சென்று கதைவடைத்தேன்' என்பதில் தார் என்பது,
1) நீர். 2) மாலை. 3) காலை. 4) நார்.

02. ''வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது'' இதில் தழல் என்பது,
1) காற்று. 2) நிலம். 3) தீ. 4) ஆகாயம்.

03. 'ஊழி திரண்டதோ கங்குல்'' இங்கு கங்குல் என்பதன் எதிர்பதம்,
1) இருள். 2) பகல். 3) இரவு. 4) கனவு.

04. ''கசாப்புக்கடைக்காரனின் செயல்யாவும் அவலட்சனமும் அசுத்தமும் ஆனதல்ல'' இங்கு அவலட்சனம் என்பதன் எதிர்பதம்.
1) அதிலட்சனம். 2) வெலட்சனம்.
3) இலட்சனம். 4) பொது இலட்சனம்.

05. '' யெளவனப் பருவத்தில் காணும் கனவுகள் அநந்தம்.'' யெளவனம் என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்,
1) இளமை. 2) அழகு.
3) அவலட்சனம். 4) விருத்தாப்பியம்.

06. F.M அலைவரிசையிலும் தற்போது நிகழ்ச்சிகளைக் கேட்கக்கூடியதாக உள்ளது. F.M என்பதன் தமிழ்ச்சொல்,
1) வலைப்பின்னல். 2) வலைத்தளம்.
3) பண்பாலை. 4) இணையத்தளம்.

07. எழுபத்தைந்தாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா,
1) வைரவிழா. 2) பொன்விழா. 3) மணிவிழா. 4) அமுதவிழா.

08. பகையரசருக்குக் கொடுக்கும் திறைப் பொருள்,
1) கூலி. 2) கப்பம். 3) வரி. 4) இறை.

09. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமும் என்ற அருஞ் சொற்றொடர் குறிக்கப் படுவது,
1) வளர்ச்சி 2) தேய்வு. 3) மறைவு. 4) தளர்ச்சி.

10. வேறு துணை இல்லையென ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்,
1) திருமணம். 2) அடைக்கலம். 3) சரணாகதி. 4) கையுறை.

11. கடுமையாக வேலைசெய்தல் என்னும் பொருள்தரும் மரபுத்தொடர்.
1) வெட்டிச்சாய்த்தல். 2) அழுங்குப்பிடி.
3) நெருப்பெடுத்தல். 4) கச்சைக்கட்டுதல்.

12. ''சட்டியும் முட்டியும்'' என்பது,
1) அடுக்குத் தொடர். 2) அடுக்கிடுக்குத்தொடர்.
3) இணைமொழி. 4) இரட்டைக்கிழவி.

13. போலி நியாயம் என்ற கருத்தைத் தரும் பழமொழி,
1) தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்.
2) வெழுத்ததெல்லாம் பாலல்ல.
3) பெண்ணென்றாற் பேயும் இரங்கும்.
4) வேலைக்கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு.

14. 'எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு'' என்ற கருத்தைத் தரும் பழமொழிக்குப் பொருத்தமான வேறொரு பழமொழி,
1) இக்கரை மாட்டுக்கு அக்கறை பச்சை.
2) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.
3) சந்திரனைப் பார்த்து நாய் குரைக்குதாம்.
4) எட்டா பழம் புளிக்கும்.

15. 'திருவலை' என்பதன் திருந்திய வடிவம்,
1) திருவலை. 2) திருவுபலகை. 3) துருவலகு. 4) துருவலை.

16. போதகம் என்ற இளமைப் பெயரைக் கொண்டது.
1) சிங்கம். 2) யானை. 3) ஆடு. 4) மாடு.

17. ''சலவை'' என்ற திசைச் சொல்.
1) பாரசீகமொழிச்சொல். 2) போர்த்துக்கீசமொழிச் சொல்.
3) ஒல்லாந்துமொழிச்சொல். 4) தெலுங்குமொழிச்சொல்.

18. அவதூறு கேட்டதும் அவளுக்கு அம்மெனக் கண்ணீர் அரும்பியது. இங்கு ''அம் மென'' என்பது,
1) ஒலிக்குறிப்பு. 2) விரைவுக்குறிப்பு.
3) அச்சக்குறிப்பு. 4) வியப்பு

19. தமிழ் நெடுங்கணக்கில் இல்லாத போதும் தமிழிலே பயன்படுத்தும் ஒரெழுத்து,
1) யெள. 2) ஹ 3) ⁚ 4) ந்.

20. மோகன் இன்று காலையில் இல்லத்தில் வைத்து அழகிய சித்திரத்தை வரைந்தான். இவ்வாக்கியத்தில் பொருள் சிதையாதவாறு விலக்கிவிடக்கூடிய சொற்கள்.
1) கோவிந்தன் இன்று. 2) அழகிய சித்திரத்தை.
3) இன்று காலையில். 4) இல்லத்தில் வைத்து.

21. மற்றவர்களது சிறப்பை எவ்விதமேனும் இழித்துக் கூறுதல்,
1) அடம் பண்ணுதல். 2) நாக்குவளைத்தல்.
3) கோளாமுடிசொல்லுதல். 4) ஆலாப்பறத்தல்.

22. ''இராவணன் ஆப்பிழுத்த குரங்குபோல் அவதியுற்றார்ன்'' இங்கே வந்த உவமேயச் சொல்,
1) ஆப்பு. 2) குரங்கு.
3) போல. 4) கந்தவேள்.

23. பேயோடு பழகினும் பிரிவது அரிது இதன் எழுவாய்,
1) பேய். 2) பிரிவது. 3) அரிது. 4) ஒருவர்.

24. ''இன்பதுன்பம் இயற்கையின் நியதி'' இங்கே இன்பதுன்பம்,
1) பண்புத்தொகை. 2) வேற்றுமைத்தொகை.
3) உம்மைத்தொகை. 4) வினைத்தொகை.

25. ''குழந்தாய் நின்பாடல் நனிநன்று'' இதில் வந்துள்ள நனிநன்று என்பது,
1) உரிச்சொற்றொடர். 2) இடைச்சொற்றொடர்.
3) எழுவாய்த் தொடர். 4) அடுக்குத்தொடர்.

26. '' தண்மதியத்துதயம்'' என்ற தொடரைப் பிரித்து எழுதினால்,
1) தண்+ மதியம்+ உதயம். 2) தண்மை + மதி + அத்து+ உதயம்.
3) தண்+ மதி+ இத்து+ உதயம். 4) தண்மை+ மதியம்+ உதயம்.

27. பின்வருவனவற்றுள் தொகாநிலைத்தொடர்,
1) மகனேவா. 2) வட்டக்கல். 3) வளர்பிறை. 4) முத்துப்பல்.

28. வயவேந்தே பொன்மாலை சூட்டினாள் பொன். இங்கு இடம்பெறும்அணி,
1) உவமை. 2) தற்குறிப்பேற்றம்.
3) சிலேடை. 4) உருவகம்.

29. தெரிநிலை வினையின் சிறப்பு,
1) காலத்தை குறிப்பாக காட்டும்.
2) காலத்தை வெளிப்படையாகக் காட்டும்.
3) வேற்றுமை ஏற்கும். 4) செயலைக் காட்டாது.

30. காகம் என்னும் சொல்லில் முதலில் வந்துள்ள எழுத்து,
1) உயிர் எழுத்து. 2) வல்லினமெய்யெழுத்து.
3) உயிர்மெய்யெழுத்து. 4) இடையெழுத்து.

✱ பின்வரும் வினாக்களில் வாக்கியத்தின் முதற்பகுதிக்கு மிகப் பொருத்த மான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

31. அவன் அந்த நல்ல பேனாவை ...................................
1) பாவிக்கத் தெரிந்தவனல்லன்.
2) உபயோகிக்கத் தெரிந்தவனளல்ல.
3) பாவிக்கத் தெரிந்தவனல்ல.
4) உபயோகிக்கத் தெரிந்தவனல்லன்.

32. அவன் எனக்கு ...................................
1) ஓர் இடம் இருப்பதற்கு தரவில்லை.
2) இருக்க ஓர் இடமும் கொடுக்கவில்லை.
3) ஓர் இடமும் இருக்கக் கொடுக்கவில்லை.
4) இருக்கக் கொடுக்கவில்லை ஓர் இடமும்.

33. அவன் அங்கு வந்தாலன்றி நான் பணம் ..............................
1) கொடேன். 2) கொடுத்தேன்.
3) கொடுக்கவில்லை. 4) கொடுப்பதின்று.

34. நான் படித்திருந்தாலன்றி பரீட்சையில்,
1) சித்தியடையேன். 2) சித்தியடைவேன்.
3) சித்தியடைந்தேன். 4) சித்தியடைந்திருந்தேன்.

35. பாலை நிலத்திலே பயிர்கள் வளராதிருப்பதற்கு காரணம்,
1) அங்கு மழை பெய்யாமையால்.
2) அங்கு மழை பெய்யாமை.
3) அங்கு மழை பெய்யாத காரணத்தால்.
4) அங்கு மழை பெய்யாதிருந்தபடியால்.

✱ பின்வரும் செய்யுளை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குப் பொருத்த மான விடையைத் தெரிவுசெய்க.

தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகால்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் -வெய்யோனை
வாவுபரித் தேறி வாவென்றழைப்பன போற்
கூவினவே கோழிக்குலம்.

36. இச் செய்யுளில் புலவர் வர்ணிப்பது எதனை?
1) கோழிகூவுதலை. 2) சூரியன் வரவை.
3) பெண்ணை. 4) குதிரையை.

37. இச் செய்யுளில் வந்துள்ள அணி,
1) உயர்வுநவிற்சி. 2) தற்குறிப்பேற்றம்.
3) உருவகம். 4) உவமை.

38. இச் செய்யுளின் எழுவாய்,
1) தையல். 2) அழைப்பது. 3) கோழிக்குலம். 4) பரி.

39. பெண்களைக் குறிப்பதற்கு இங்கு கையாளப்பட்டுள்ள சொல்,
1) தையல். 2) மலர். 3) கையால். 4) கோழிக்குலம்.

✱ கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக்கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குற வைத் தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப் பதற்கு வாக்கியங்களின் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

40. அ - அவருடைய அழைப்பினை ஏற்று பட்டுமெத்தையிற் புரண்ட பெண்மணி கள் தாமும் அந்த மாளிகை வாழ்வினைத் துறந்து விடுதலைப் போராட்டத் தில் தடியடிப்பட்டு சிறை சென்றனர்.
ஆ - வருவாய் மிகுந்த வக்கிற்றொழிலை விட்டு இந்த இயக்கத்தில் ஈடு பட்டவர்களுமுண்டு.
இ - இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றிலே பெரும் பரபரப்பு மிகுந்த கால மாகும்.
ஈ - புத்தகங்களை மூடைகட்டி வைத்துவிட்டு மாணவர்களும் போராட்டத் தில் குதித்தனர்.
உ - வியாகவேள்வியிற் குதித்தபடி மகாத்மாகாந்தி நாட்டு மக்களுக்கு அறை கூவல் விடுத்த நேரம் அது.
1) இ, ஈ, அ, உ, ஆ. 2) இ, உ, அ, ஈ, ஆ.
3) அ, இ, ஆ, உ, ஈ. 4) இ, உ, ஈ, அ, ஆ.

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. சுருக்கமான விடை எழுதுக.
01) பின்வரும் தொடரைப்பிரித்து எழுதுக.
''கண்ணுடைய ரென்பவர் கற்றோர்''
02) முல்லைச் சிரிப்பாலே - எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய் - இவ்வடியில் காணப்படும் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக.
03) ''மண்ணெல்லாம் உய்ய மழைபோல் வழங்குதரத்
தண்ணுலா மாலைத் தமிழ் நந்தி நல்நாட்டில்''
இங்கு இடம்பெற்றுள்ள அணி யாது?
இங்கு குறிப்பிடப்பட்ட அரசன் பெயர் யாது?
04) நான் இன்று போகவில்லை. இது என்ன வினை முற்றாகும்? இதனை உடன் பாட்டு வினைமுற்றாக எழுதுக.
05) ஒற்றைக்காலில் நிற்றல் எனபது என்ன தொடராகும்? இத்தொடரின் பொருள் யாது?
06) களை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக் கியங்களில் எழுதுக.
07) பேச்சொன்று நடைபெறும்போது கவனிக்கவேண்டிய இரு முக்கிய விடயங் கள் எழுதுக.
08) உறவு முறைக் கடிதத்திலும் உத்தியோக பூர்வக் கடிதத்திலும் முடிக்கும் பகுதி எவ்வாறு வேறுபடும் என்பதை உதாரணம் மூலம் விளக்குக்
09) சிறுகதையொன்று எழுதும்போது பேச்சுவழக்கிலா, எடுத்துவழக்கிலா எழுதப் படுகிறது? காரணம் எழுதுக.
10) விவாதம் ஒன்று நடைபெறும்போது தலைவருக்கு இருக்கவேண்டிய இரு பண்புகளை எழுதுக.

மறுபக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.பாடசாலையின் கல்விக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர்.மீரா கண்காட்சி மண்டபத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பொருள்களில் சிலவற்றை ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம்.

## 'சமாதானக் காற்று' இசை இறுவட்டு வெளியீடு

வலி.வடக்கு,நவ.2

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் ஆக்கத்தில் உருவான 'சமாதானக் காற்று' இசை இறுவட்டு வெளியீடு கல்லூரி கலையரங்கில் நாடகத்துறை முகிழ் நிலை ஆசிரியர் சே.நிஸாந் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிர்தம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும், சிறப்பு விருந்தினராக அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி அதிபர் அருட்செல்வி றொஷாரியோவும் கலந்துகொண்டனர்.

மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்தினார். இறுவட்டை பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் வெளியிட்டு வைத்தார். முகிழ் நிலை ஆசிரியர்களே இவ் இறுவட்டுக்களை பாடல் ஆக்கம், இசை அமைப்பு மற்றும் பாடல்களைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-86)

## மனித பாவனைக்குதவாத 689 மூடை கோதுமைமா மாநகர அதிகாரிகளால் நகரில் மீட்கப்பட்டது

### நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது மனித பாவனைக்குதவாத 689 மூடைகள் கோதுமை மா மீட்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர முதல்வரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:.

யாழ்ப்பாண மாநகர முதல்வரும், யாழ் மாநகர உணவு அதிகாரியுமான திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவின் பணிப்புரைக்கமைய யாழ். மாநகரசபையின் பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர் குழு யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள பேக்கறிகளில் (வெதுப்பகம்) பரிசோதனை செய்தது. சோதனையின் போது பதினொரு நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, எட்டு நிலையங்களில் காணப்பட்ட குறைபாடுகள் இரண்டு கிழமைகளுக்குள் பூரணமாக நிவர்த்தி செய்யப்படல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் மூன்று நிலையங்கள் மனித பாவனைக்கு உதவாத வண்டு, புழுக்களுடனான துர்நாற்றமுள்ள கோதுமை மாவை பேக்கறிகளிலும், பேக்கரி உரிமையாளர் சங்கத்திலும் 689 மூடை (50 Kg) பாண் உற்பத்தி செய்வதற்கும், பாண் உற்பத்தி செய்தலுக்கு விநியோகிக்க சட்ட விரோதமாக, களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தமையாலும் இம் மூன்று நிலையங்களுக்கு எதிராக யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் இ.வசந்தசேனன் இவ்வழக்கை 04-11-2009 அன்று விசாரணைக்கு எடுப்பதாகவும் மேற்குறித்த 689 மூடை கோதுமை மாவையும்நீதிமன்ற அனுமதி வரும் வரை விநியோகிக்கவோ, பாண் தயாரித்தலுக்குப் பயன்படுத்தவோ கூடாது எனவும், அதேவேளை பேக்கறி 04-11-2009 வரை பாண் தயாரித்தலை தற்காலிகமாக இடைநிறுத்தும்படியும், மற்றும் 04-11-2009 அன்று யாழ். கச்சேரி திட்டப் பணிப்பாளரையும், மற்றும் பேக்கறி சங்கங்களின் தலைவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜராகும் படியும் கட்டளை பிறப்பித்து உள்ளார்-என்றுள்ளது. (1)

## சர்வதேச ஈரநில தினத்தை முன்னிட்டு மாணவரிடையே ஓவியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,நவ.2

உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபை பாடசாலை மாணவர்களிடையே ஓவியப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்த ஓவியப் போட்டிகள் கனிஷ்ட பிரிவு (தரம் 6-9), சிரேஷ்ட பிரிவு (தரம் 10-13) என்னும் பிரிவுகளாக நடத்தப்படவுள்ளன.

வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும் முறை வருமாறு:-

மாவட்ட மட்டத்தில் இருந்து சிறந்த 10 ஓவியங்கள் மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று இடங்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்படும்.

தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இடங்கள் மற்றும் 7 சிறந்த விருதுக்குரிய ஓவியங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டிக்கான ஒழுங்கு விதிகள் வருமாறு:-

சித்திரப் போட்டிக்கு எத்தகைய வர்ண ஊடகங்களும் பயன்படுத்த முடியும். ஓவியம் அனுப்பப்படும் கடதாசியின் அளவு 18"X14" ஆக அமைதல் வேண்டும். மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இலங்கையின் தேசிய பூங்காவைப் பார்வையிடுவதற்காக ஒவ்வொரு வெற்றியாளர்களுக்கும் 5 நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பங்களை பாடசாலையிலும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை வடமாகாண அலுவலகத்திலும் பெற்று முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரால் உறுதி செய்யப்பட்டு ஓவியத்தின் பின்புறத்தே ஒட்டப்படுதல் வேண்டும்.

அனைத்துச் சித்திரங்களும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தின் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விவரங்களுக்கு யாழ்.மாவட்டச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல்துறை அதிகார சபை வடமாகாண அலுவலகத்துடன் 021 222 4050 என்னும் தொலைபேசி இலக்கமுடன் தொடர்பு கொள்ளவும். (203-201)

## கொக்குவில் இந்துவின் நூற்றாண்டையொட்டி ஒரு கோடி ரூபா செலவில் பார்வையாளர் மண்டபம்

வலி.வடக்கு, நவ.2

கொக்குவில் இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி கல்லூரியின் பழைய மாணவனான மாணிக்கம் சுப்பிரமணியத்தினால் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் மைதானத்தில் பார்வையாளர் மண்டபம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அடிக்கல்லை மா. சுப்பிரமணியம் தம்பதியினரால் நட்டு வைக்கப்பட்டது.

கல்லூரியின் தெற்குப்புறத்தில் இவர் தனது பெற்றோரின் ஞாபகார்த்தமாக மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (203- 86)

## வாசிப்பு மாதத்தையொட்டி சிறாரிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,நவ.2

சாவகச்சேரி நகரசபை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கிடையிலான 'மலரும் மொட்டுக்கள்' என்னும் போட்டியினை அண்மையில் நடத்தினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற சிறார்களின் விவரம் முன்பள்ளி ரீதியாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**ஸ்ரீமுருகன் முன்பள்ளி**

உதயகுமார் யேசுவரன், ஜெகாதரன் பிந்துஷா, கிருபாகரக் குருக்கள் ஹம்சியா.

**தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி**

மனோகரன் நித்திகா.

**நாமகள் முன்பள்ளி**

ஸ்ரீபாலகிருஷ்ணன் வனோஜா, சுமந்திரன் ஜனப்பிரியன்.

**கலைமகள் முன்பள்ளி**

சிவபாலன் சயாழன், செல்வராசா யதுஷன், பாஸ்கரன் வினோஜன்.

**நாவலர் முன்பள்ளி**

பாலகிருபா சாயிராம், அலெக்ஸாண்டர் அபிநயா, சந்திரசேகரம் தசானி.

**வீனஸ் முன்பள்ளி**

இராசலிங்கம் கோபிதரன், ரவீந்திரன் கம்சாயினி, ஜீவதரன் றலன்சியா மேரி.

**குழந்தையேசு முன்பள்ளி**

பூமிசேகரம் பஞ்சிகா, மதனமோகன் டிலோஜினி,

**அம்பாள் முன்பள்ளி**

சுபோதரன் டிலக்ஸன். (203-207)

## மனநிலை பாதிப்புற்ற இளைஞனை கடலில் தள்ளி கொலை செய்ததைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### புதனன்று மேலக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில்

கொழும்பு, நவ.2

மனநிலை பாதிக்கப்பட்ட பாலசுப்பிரமணியம் சிவகுமாரன் என்ற இளைஞனை பம்பலப்பிட்டியில் கடலில் தள்ளி, தாக்கிக் கொலை செய்த சம்பவத்தைக் கண்டித்து சாத்வீக கண்டன ஆர்ப்பாட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசியல், இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு அனைத்து அரசியல் கட்சிகளும், சமூக நிறுவனங்களும், மனித உரிமை அமைப்புகளும் கலந்துகொள்ள வேண்டுமென மனோகணேசன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நாட்டிலே இன்று இத்தகைய காட்டுமிராண்டி கலாசாரம் வேகமாக வளர்த்து வருகின்றது. இந்தக் கொலை சம்பவத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய பொலிஸ் அதிகாரி ஒருவரே முன்னின்று இத்தகைய பாவ காரியத்தை செய்து முடித்திருப்பதை கண்டு முழு நாடுமே தலைகுனிய வேண்டியுள்ளது.

கையெடுத்து வணங்கி, உயிர் பிச்சை கேட்ட 26 வயது இளைஞரை அடித்து கடலில் தள்ளிய காட்சியை தொலைக்காட்சிகளில் செய்திப்படமாக பார்த்து அகில இலங்கையும் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த சம்பவத்தின் காரணமாக கைது இடம்பெற்று இருந்தாலும், இத்தகைய அராஜகப் போக்கை நாம் கண்டிக்காமல் அமைதியாக இருப்போமானால், இது தொடர்கதையாக மாறிவிடும். ஏற்கனவே அங்குலான பகுதியில் இரு இளைஞர்கள் பொலிஸ் அராஜகத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை நாம் மறக்க முடியாது.

எனவே அனைத்துத் தரப்பினரும் தங்களது வழமையான கடமைகளை ஒத்தி வைத்துவிட்டு எதிர்வரும் புதன்கிழமை 4 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத் திற்கு முன்பாக ஒன்றுக்கூடி எமது சாத்வீக எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டும்- என்றார்.

இதேவேளை-

இந்த இளைஞரைத் தாக்கியதாகக் கருதப்படும் பொலிஸ் உத்தியோகத்தரை விசேட பொலிஸ் குழு கைது செய்துள்ளது.கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு, இவரை பம்பலப் பிட்டி பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்ததாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் இடம்பெற்றபோது கடற்கரைக்குச் சென்றதாகக் கூறப்படும் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 10 பேரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

## போதனா வைத்தியசாலைக்கு 6 சிங்களத் தாதியர்கள்

யாழ்ப்பாணம்,நவ.2

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு தென்பகுதியில் இருந்து ஆறு பெண் தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் வைத்தியசாலைக்கு வருகை தந்த இவர்கள் உடனடியாகவே தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த ஆறு தாதியர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து சேவையாற்றுவதற்கான ஏற்பாடுகளை போதனா வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. (50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராஜா- பரமேஸ்வரி மணி மண்...

## 2009.11.02



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசியுரை



''தவமும் தவமுடையார்க்காகும்'' என்பதற்கேற்ப இப்புனிதப் பணியைச் செவ்வனே நடராசா சத்தியரூபன் தமது பெற்றோரின் நினைவாக அவர்கள் மேல் வைத்த அன்புடைமையினால் அழகியதோர் மணிமண்டபத்தினை நல்லைக் கந்தனுடைய மருங்கிலே அமைத்திருக்கின்றார்.

இன்றெல்லாம் பல மண்டபங்கள் எழுந்தவண்ணமாக இருக்கின்றன. அவற்றினைப் பேணிப்பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு ஒப்புடைப்பதே மிகவும் உன்னதமான பணியாகும். நடராசா சத்தியரூபன் அவர்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் தேவைகளை அதாவது சுப மங்கள நிகழ்வுகளைச் சிறப்பாக நிறைவேற்ற அமைத்த மணிமண்டபமானது சிறப்புறு பணிபெருக்கி சிறக்க நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி அமைகின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
(இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,யாழ்ப்பாணம்)

## பீடாதிபதி அவர்களின் வாழ்த்துரை



''நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு. அதனாலே நாட்டிலுள்ள வினைகள் ஓடும்'' என்ற யோக சுவாமிகளின் அருள்வாக்கிற்கு அமைவாக ஈழத்திருநாட்டின் இதயமாக விளங்கும் யாழ்ப்பாணத் திருநகரின் தலைநகரமாக விளங்கிய திருப்பதி நல்லூர் ஆகும். வேண்டுவார் வேண்டும் வரமீந்து காத்தருளும் கந்தப்பெருமான் குடியிருக்கும் புகழ்பூத்த பதியாக இக்கோயில் அமைந்துள்ளது.

நல்லூர் மண் ஞானிகளும், யோகிகளும், பக்தி சீலர்களும் நடமாடிய மண். அவர்கள் பேசிய ஞான மொழிகள் இன்னும் அப் பகுதியில் அதிர்வாய் உள்ளதை அங்குவரும் அடியார்குழாம் நன்கு அறியும்.

இத்தகு அற்புதமான சூழலிலேதான் நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபம் அமைந்திருக்கிறன்து. தமிழ் மக்களின் பாரம்பரியமான கலாசார நிகழ்வுகளை நிறைவேற்றுவதற்கு உகந்ததோர் எழில்விஞ்சும் மணிமண்டபமாகக் காட்சியளிக்கிறது.


''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்ற குறள் நெறிக்கமைவாக இவ்வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைதாளில் இணைந்திருக்கிற அமரர்.நடராசா அவர்கள் பூர்வ புண்ணியப் பயனாக நல்லூர்க் கந்தனைத் தொழுது வரும் காலத்தில் எண்ணிய எண்ணம் அவரது மைந்தன் நடராசா சத்தியரூபன் அவர்களால் இன்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் சிறிநதியா நகைமாடத்தின் முதல்வன் நடராசா சத்தியரூபன் அவர்கள் தமது பெற்றோரின் காணிக்கையாக, ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட மணிமண்டபமாக விளங்குகின்றது.

எதிர்காலத்தில் சைவத்தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இம்மண்டபம் அமைந்திருக்கிறது என்றால் மிகையில்லை. இதைவிட இன்னொரு சிறப்பு யாதெனில் இம் மண்டபத்தின் வாயிலாக பெறப்படும் நிதி அனைத்தும் தனியார் தேவைக்குப் பயன்படுத்தாது பொதுத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்ற செய்தி எமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இம்மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவதற்கு எனக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அது மட்டுமல்ல இன்றைய தினம் வெளியாகும் இச்சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதிலும் பெருமகிழ்வடைகின்றேன்.

எஸ்.கே.யோகநாதன், பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## சோதிடரின் ஆசியுரை



யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வடகிழக்கு வீதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மனோன்மணி அம்பாள் ஆலய வடகிழக்கு எல்லையில் அமைந்துள்ள நடராசா - பரமேஸ்வரி மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மன மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் மணி மண்டப உரிமையாளர் நடராசா சத்தியரூபன் அவர்கள் மனப் பூர்வமாகச் செய்த கைங்கரியம் மிகவும் போற்றத் தகுந்ததாகும். நீடூழி காலம் மணி மண்டபம் எல்லோருக்கும் பயனீதரக் கூடியதாக வளர்ச்சி அடையவேண்டுமென இறைவனைப் போற்றி ஆசி உரைக்கின்றேன்.

சோதிடர், வே.சிவராமலிங்கம்

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஈழ நாட்டிலே தமிழ் மன்னர் மணிமுடி தரித்துச் செங்கோல் ஓச்சிய காலத்தில் அவர்களின் இராசதானியாகிய நல்லூரிலே நடு நாயகமாக விளங்குகிறது நல்லூர்க் கந்தசுவாமி கோயில். நல்லைக் கந்தனின் சூழல் ஞானிகளும், யோகிகளும், ஆன்மீகவாதிகளும் நடமாடிய இடம். இச்சூழலிலே வதிவோர் கந்தப் பெருமானின் அருள் நலம் நிரம்பியவர்கள் என்றே கூறலாம்.

இந்தவகையில் நல்லைக் கந்தனின் அருட்பார்வை நோக்கிலும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் அரவணைப்பிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் ''நடராசா - பரமேஸ்வரி மணி மண்டபம்'' அமைந்திருக்கின்றது. நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலங்களில் அன்னதானம் வழங்கும் சிறிய மண்டபமாகக் காணப்பட்டு இன்று விசாலமான கலையம்சத்தோடு சைவத் தமிழ் மக்களின் கலாசார நிகழ்வுகளை நிறைவேற்றும் அழகிய மணிமண்டபமாகக் கம்பீரமாகக் காட்சி தருகின்றது.

அமரர்கள் நடராசா-பரமேஸ்வரி அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் நினைவுகளுக்கு உருவம் கொடுத்தாற்போல் மகன் தந்தைக்காற்றும் நன்றிக் காணிக்கையாக அன்பர் நடராசா சத்தியரூபன் அவர்களால் பல இலட்சரூபாய் செலவில் இம் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தமது இல்லங்களில் சுபமங்கள நிகழ்வுகளை நடத்த முடியாதவர்களுக்கு இந்த மணிமண்டபம் இடம் கொடுத்திருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாறானதொரு மண்டபம் அமைந்திருப்பது எமக்கெல்லாம் மகிழ்வினைத் தருகின்றது.

நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபத்தினைத் திறந்து வைக்கின்ற பெரும்பேறு எனக்கு இன்று கிடைத்திருக்கின்றது. இம்மணி மண்டபத் திறப்பு விழாவின் நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புறவும், அதன் நோக்கங்கள் மங்களகரமாய்த் தொடர்ந்திடவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.கணேஷ், அரச அதிபர், மாவட்ட செயலர், யாழ்.மாவட்டம்.

## காலத்தின் தேவையை நிறைவேற்ற அமைந்த மணி மண்டபம்



திரு. நடராசா சத்தியரூபன் தனது பெற்றோரின் நினைவாக, நல்லூர்க் கந்தசுவாமி கோயில்ச் சூழலில் நடராசா - பரமேஸ்வரி மணி மண்டபத்தை நிர்மாணித்தது மிகவும் பாராட்டுக்குரியதாகும். எமது பிரதேசத்தில் மங்கள நிகழ்வுகளையோ பொது நிகழ்வுகளையோ நடத்துவதற்கு வசதியான மண்டபங்களின் தேவை இன்று மிகத்துரிதமாக அதிகரித்து வருகிறது. வேகமாக மாறிவரும் எமது சமூக- பொருளாதாரச் சூழ்நிலைகளால் முன்னர் போல் எமது மக்கள் தத்தமது வீடுகளில் பந்தல் அமைத்து மங்கள நிகழ்வுகளை நடத்துவது இன்று முடியாத காரியமாகிவிட்டது. கலியாண மண்டபங்கள் பல ஒருங்கிணைந்த தரமான சேவைகளை ஒரே இடத்தில் வழங்குவதாலும், விருந்தினர்கள், அழைப்பாளிகள் ஒன்று கூடுவதற்குப் பொருத்தமான இடமாக இருப்பதாலும், பிரயாண வசதிக்குரிய இடங்களில் இட அமைவு பெற்றிருப்பதாலும் இவற்றின் பயன்பாடுகள் அதிகரித்து வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

காலத்தின் தேவையை உணர்ந்து அமையப் பெற்ற 'நடராசா- பரமேஸ்வரி மணி மண்டபம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதுடன், நல்லூர்த் திருவிழாக் காலங்களிலும், மற்றும் நாள்களிலும் சமய, சமூக, கலாசார நிகழ்வுகள் நடைபெறப் பெரிதும் உதவியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

நடராசா- பரமேஸ்வரி மணி மண்டபத்திறப்பு விழா சிறப்பாக நடக்க என் மனம் நிறைந்த வாழ்த்துக்களை இச்சிறப்பு மலரூடாகத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்,
யாழ்நகர் பேராசிரியர்.

## மணிமண்டப வாழ்...

வள்ளுவன் வகுத்தான் வாழ்க்...
வாழ்ந்தனர் இங்கே நடராசா ப...
வாழ்வின் உண்மைகள் சிறந்தி...
வாழ்ந்தவர் என்றும் வாழ்பவ...

நல்லது செய்யும் நடராசா
நாவிலம் பே...ம் பரமேஸ்வ...
சத்திய ரூபனை பெற்றெடுத்த...
பெற்றோர் வழியிலே சிறந்திட்...

பருத்தித்துறை வீதி நல்லூரில்...
மணி மண்டபம் அமைத்தார்...
மண்டபம் வளர்ந்திட மாண்பு...
வாழ்த்துகிறேன் இங்கு மனம்...

முத்தமிழ் வாழ்வு சிறந்திடவே...
முளைந்து நிற்பார் என்றும் வ...
சத்திய வேதத்தின் துணைகொ...
சந்ததம் நின்னை வாழ்த்துகின்...

கற்றவர் மற்றவர் மகிழ்திடவே...
கல்வியியலாளர் சிறந்திடவே
பெற்றவர் மகிழ்ந்து வாழ்த்திட...
பிள்ளையே நீயும் வாழ்ந்திடுவ...

நாடிவந்தார் இங்கு சிறந்திடவே...
ஆன்மீக வாழ்வு மலர்ந்திடவே
தேடிய செல்வங்கள் பொலிந்தி...
மணிமண்டபம் நன்மையாய்...

நல்லாசிகள் என்றும் உனக்கா...
நல்லதே நடக்கும் நலமாக
பண்ணவன் பா... பலித்து...
வாழ்த்துகின்றேன்
நீ வாழியவே.

என்றும் அன்புடன்
அருட்திரு.ஆர்.எம்.ஜி.
நேசநாயகம் அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ண்டப திறப்பு விழா சிறப்பு மலர்

## ...உ திங்கட்கிழமை



### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டத்திலே மன்னர்களும், அறிஞர்களும், யோகிகளும் வாழ்ந்த நல்லூர்ப் பிரதேச பிரிவிற்குள் சைவமணமும், ஆன்மீகமும் திகழ்கின்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வீதியிலே அழகான மணி மண்டபம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டவுள்ளமை அறிந்து அகமகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் முன்னணி வர்த்தகரான திரு.ந.சத்தியரூபன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபம் மிகவும் விசாலமானதாகவும் கலையம்சம் பொருந்தியதாகவும் சகல வசதிகளும் பொருந்தியதாகவும் விளங்குகின்றது.

திருமண நிகழ்வுகள் மட்டுமின்றிக் கலைவிழாக்களும் அரங்கேற்ற நிகழ்வுகள் மற்றும் இசைக்கச்சேரிகள் போன்றனவும் இம் மண்டபத்தில் நடத்துவதற்கான வசதிகளைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய சிறப்பான வனப்புமிக்க மண்டபத்தை நிர்மாணித்து யாழ்.தமிழ் சமுதாயத்தின் பாரம்பரியங்களை நிலைநாட்டும் பணியில் ஈடுபடுபவர்களை வாழ்த்தி, திறப்புவிழா இனிதே இடம்பெற எல்லாம் வல்ல நல்லைக்கந்தனின் ஆசீர்வாதம் என்றும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்.

### "பண்டைத்தமிழர் பாரம்பரிய திருமண கலாசார நிகழ்வுகளை நிறைவேற்ற உகந்த நல்லைத் திருவூரின் நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபம்"



"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல்லெனும் சொல்"

என்ற குறள் நெறிக்கமைவாக தன் பெற்றோர்க்கு ஆற்றிய உதவியாக, அவர்களின் ஞாபகார்த்த நினைவாலயமாக நல்லைத் திருவூரில் நடராசா- பரமேஸ்வரி மணி மண்டபத்தினை அன்பர் சத்தியரூபன் அவர்கள் அமைத்திருக்கின்றார்.

இன்றெல்லாம் எம்மைப் பெற்றுப் பாலூட்டிச், சீராட்டி வளர்த்து, உற்ற வகையில் கல்வி தந்து, உபசரித்து, வையத்தில் வாழ் வாங்கு வாழ வழி காட்டிய கண்கண்ட தெய்வங்களாக இரு முது குரவரெனத் திகழும் பெற்றோரைப் புறக்கணித்து மறந்து வாழும் அவர்களைப் பேணாது அலைய விடும் நிலையை சில இடங்களில் பார்க்கின்றோம்.

அன்பர் சத்தியரூபன் அவர்கள் தன் தாயை பால் மணம் மாறாத பருவத்தில் (ஒன்றரை வயதில்) இழந்திருக்கின்றார். அந்தப் பிரிவாற்றாமையோடு வளர்ந்தவர். தன் தந்தை நடராசாவிலே தாய் பரமேஸ்வரியை கண்டு தரிசனம் பெற்று நயந்தவர் சத்தியரூபன்.

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற தாரக மந்திரத்தைச் சிர மேற்கொண்டு, சிந்தைக்கினிய தந்தை செப்பிய வார்த்தைகளுக்கு சிகரம் அமைந்தாற் போல் வடிவம் கொடுத்திருக்கின்றார்.

"நல்லூர் வீதியிலே நடந்தாலே நம்வினை ஓடிவிடும்" அல்லவா. அந்த புனித கந்தத் திருப்பதி வீதி மருங்கிலே "நடராசா - பரமேஸ்வரி" என்ற திருநாமத்தில் அழகியதோர் மணி மண்டபத்தை மனதுக்கினிய வகையில் மாண்புற அமைத்திருக்கின்றார்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற ஆன்றோர் வாக்குக்கமைவாக எண்ணரிய செயல் முடித்து திகழ்கின்றார்.

இந்த வகையில் அன்பர் சத்தியரூபனால் பல இலட்ச ரூபாய் செலவில் அழகியதோர் மணி மண்டபம் அமைக்கப்பட்டிருக்கின்றது. எதிர்காலத்தில் பண்டைத்தமிழ் மக்கள் பாரம்பரியமாக காலாகாலமாகப் பேணி வரும் திருமண வைபவங்களை, பூப்புனித நீராட்டு விழாக்களை மற்றும் கலை, கலாசார, சமூக, சமய நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு சகல வசதிகளையும் கொண்ட கலையம்சம் ததும்பும் வகையில் இந்த மணி மண்டபம் மக்கள் சேவைக்காக அமைந்திருக்கின்றது.

அன்பர் நடராசா சத்தியரூபன் அவர்கள் பெருக்கிய திருப்பணி அனைவருக்கும் நல்ல வாய்ப்பினைத் தர வேண்டுமெனவும், இன்னும் பல சேவைகள் அவர் விரிக்க அவர் தம் திருத்தொண்டை வாழ்த்துகின்றேன்.

வர்ணவைக்கலாநிதி, கவிமாமணி, மதுரகவி காவலர், எம்.பி. அருளானந்தன், J.P (பணிப்பாளர், ...)
[illegible]

### ...ண்டப வாழ்த்துக் கவி

...வகுத்தான் வாழ்க்கைமுறை
...இங்கே நடராசா பரமேஸ்வரி
...உண்மைகள் சிறந்திடவே
...என்றும் வாழ்பவரே.

...ப்பும் நடராசா
...பக்தும் பரமேஸ்வரி
...னைப் பெற்றெடுத்தார்
...வழியிலே சிறந்திட்டார்.

...றை வீதி நல்லூரில்
...டபம் அமைத்தார் மணியாக
...வளர்ந்திட மாண்புடனே
...றேன் இங்கு மனம் மகிழ்ந்தே.

...வாழ்வு சிறந்திடவே
...நிற்பார் என்றும் வளர்ந்திடவே
...கத்தின் துணைகொண்டு
...ன்னை வாழ்த்துகின்றேன்.

...ற்றவர் மகிழ்ந்திடவே
...ாளர் சிறந்திடவே
...மகிழ்ந்து வாழ்த்திடவே
...நீயும் வாழ்த்திடுவாய்.

...இங்கு சிறந்திடவே
...ாழ்வு மலர்ந்திடவே
...ல்வங்கள் பொலிந்திடவே
...பம் நன்மையாய் அமைந்திடவே.

...என்றும் உனக்காக
...டக்கும் நலமாக
...பாத[illegible]ணிந்து நின்றே
...ன்றேன்
...நீ வாழியவே.

...ம் அன்புடன்
...ஆர்.எம்.ஜி.
...கம் அடிகள்



### சந்நிதியான் ஆச்சிரம முதல்வரின் ஆசிச்செய்தி



யாழ்.மாவட்டத்தின் வளர்ந்து வரும் சமூகத் தொண்டாளரும், சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல விதமான அறப்பணிகளுக்கும் தன்னாலியன்ற ஆதரவினை நல்கிவரும் அன்பர் திரு.ந.சத்தியரூபன் அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் வீதியில் இன்றைய சூழலுக்கேற்ப, மக்களின் தேவை கருதி, சேவையினையே மூலாதாரமாகக் கொண்டு திருமண வைபவங்களுக்குரிய மணி மண்டபத்தை அமைத்துள்ளார். அவ்வகையின் மூலம் மேலும் பல அறநிலையங்களின் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்குரிய வழிவகைகளை செய்யும் இவரது முயற்சியினைப் பாராட்டுவதோடு, இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து இவரின் பணிகள் மேலோங்க சந்நிதியானை வேண்டுதல் செய்து வாழ்த்தி நிற்கின்றோம்.

சுபம் சாந்தி!!

அமுதகலாஜோதி, சிவத்திரு செ.மோகனதாஸ் சுவாமிகள்.

### தமிழர் திருமண கலாசார மணிமண்டபமாகத் தந்தையின் சிந்தனைக்கு உருவம் கொடுத்தேன்.



அன்னை வயிற்றில் குடியிருந்தேன். அடுத்து வந்து அவனியிற் பிறந்தேன். கண்ணை விரித்து உலகை ரசித்தேன். மெல்லச் சிரித்து மழலை மொழிந்தேன்... மழலைப் பருவம் தாண்ட முதலே என் மாதாவைப் பிரிந்தேன். (1 1/2 வயதில்) பிதாவின் அரவணைப்பில் பிரியமுடன் வளர்ந்து கற்று, உயர்ந்து வாழத் தொடங்கினேன்.

அக்காவின் அரவணைப்பும், தந்தையின் பரிவும் என்னை வளர்த்தது, அம்மாவின் நினைவு என்னை உயர்த்தியது. சிறுபராயம் முதல் கல்வி கற்றுத் தேறி வரும் காலத்தில் நகைத் தொழிலகமொன்றில் இணைந்து அத்தொழிலை அறிந்து, பயின்று உயர்ந்தேன். காலம் மாறியது நமக்கென்றொரு தொழிலை நாமே நடந்தும் நிலையும் நம்மைச் சேர்ந்தது.

'சிறிநதியா' நகைமாடத்தை எனது மகளின் பெயரில் தொடங்கி நடத்திவரும் காலத்தில்... அன்றொருநாள் அப்பா எனக்குரைத்த செய்தி என் நெஞ்சில் நீளநினைவிருந்தது. நல்லைக் கந்தனைத் தொழுது பணியும் காலத்தில் அவர் எண்ணியதும் என் நெஞ்சில் நீளப் பதிந்தது.

பெற்றோரின் நினைவுகளுக்கு வடிவம் கொடுக்க நினைத்தேன். அதுவே இன்று எம் முன்னால் கம்பீரமாக காட்சியளிக்கும் "நடராசா -பரமேஸ்வரி மணிமண்டபம்" எம் பெற்றோரின் ஞாபகார்த்த நினைவாலயம்.

'ஆசைக்கொன்று அஸ்திக்கொன்று" என்று சொல்வார்களல்லவா. அந்த வகையில் அக்கா சத்தியபாமா யான் சத்திய ரூபனாக எம் பெற்றோரின் விருப்புக்கு ஆளானோம்.

எம்மை அரவணைத்து அன்புடன் வளர்த்து ஆளாக்கி வைத்த எம் தெய்வங்களுக்காக யான் மட்டுமல்ல என் அக்கா சத்தியபாமா, அத்தான் செல்லத்துரை, மருமக்களான நவநீதன், ஸ்ரீலதா, ஸ்ரீரேகாவும் எனது மனைவி விஜயகுமாரி எனது பிள்ளைகளான சிறிநதியா, சானுகா, கஜலக்சன், கஜகனிஷன் எல்லோரின் விருப்புக்கமைய எம் பெற்றோரை எந்நேரமும் தரிசிப்பதற்காக, வணங்குவதற்காக மக்களால், மருமக்களால், பேரப்பிளைகளால் வழங்கப்பட்ட காணிக்கைதான் இந்த மணிமண்டபம்.

1995ஆம் ஆண்டிலிருந்து என் தந்தையார் விரும்பினார் நல்லைக்கந்தன் மகோற்சவ காலங்களில் அடியவர்களுக்கு மண்டபம் அமைத்து அன்னதானம் வழங்கவேண்டுமென. அவரது விருப்புக்கமைய எமது மண்டபத்திற்கு அருகிலிருக்கும் அறுபத்துமூவர் நாயனார் மடத்தில் அப்பணியை அவர் நிறைவேற்றி வந்தார். 2008ஆம் ஆண்டிலும் என் தந்தையார் தேர்த்திருவிழா அன்று அன்னதானம் வழங்கும் பணியிலிருந்தார். அவரது காலத்திலே இந்த மண்டபத்தை உருவாக்கி முடிக்க வேண்டுமென அல்லும் பகலும் உழைத்தோம். இறைவன் திடீரென என் தந்தையை தன்னடிக்கு அழைத்தான்.

அவரது எண்ணத்தை முடிக்க, அவர் கண்ட கனவை நனவாக்க எம்பணி தொடர்ந்தோம். பெற்றோரின் ஆசியினால் இந்தத் திருப்பணியை நிறைவேற்றினோம்.

தமிழ்மக்களின் சுபமங்கள நிகழ்வுகளை, சமய, சமூக காலாசார நிகழ்வுகளை சகல வசதிகளோடு நிறைவேற்றும் வகையில் இந்த மண்டபத்தை அமைத்துள்ளோம். அதுமட்டுமின்றி இம் மணிமண்டபத்தினால் பெறப்படும் நிதிகூட தனியார் தேவைகளுக்குப் பயன்படுத்தாது பொதுப் பணிகளுக்குச் செலவிடப்படும். என்ற நல்நோக்கோடு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. உங்களின் தேவையே எங்களின் சேவை என்பதை உணர்த்தி இந்த மண்டபம் அமைய எனக்கு துணை நின்றவர்களை இன்று இந்த மண்டபத்தை திறந்து வைத்து ஆசி கூறி வாழ்த்துரைக்கும் அத்தனை தகைமை சான்ற பெரியார்களையும் வணங்கி என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

திரு.நடராசா சத்தியரூபன்
ஸ்தாபகர், நடராசா - பரமேஸ்வரி மணிமண்டபம்
முதல்வர்- சிறிநதியா நகைமாளிகை, யாழ்ப்பாணம்.

மலரமைப்பு: சங்குநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களகரமான புதிய கட்டடத் திறப்பு விழா

## முத்தொளி வீடியோ படப்பிடிப்பாளர்

விரோதி வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் இன்று (02.11.2009) திங்கட்கிழமை காலை 9.31 தொடக்கம் 10.50 வரையுள்ள சுபவேளையில் பலாலி வீதி, கோண்டாவில் டிப்போவுக்கு முன்பாக அமைக்கப்பட்ட

**முத்தொளி வீடியோ படப்பிடிப்பாளர்**

என்னும் புதிய கட்டடம் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதனை எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பிரதான கிளை,
பலாலி வீதி,
(கோண்டாவில் டிப்போவுக்கு அருகாமையில்)
கோண்டாவில்.

முத்தொளி வீடியோ,
தில்லையம்பதி, கோண்டாவில். T.P.: 0213008492

---

NMC

New Medi Care Hospital

# New Medi Care Hospital

இல.32, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தொ.பே.: 0213734505

## தென்மராட்சிக்கு ஓர் வரப்பிரசாதம்

எங்கும் செல்லவேண்டிய அவசியமில்லை உங்கள் காலடியில்

## நியூ மெடி.கெயர் வைத்தியசாலை

இன்று (02.11.2009) திங்கட்கிழமை நண்பகல் 12.06 முதல் 7 மணி வரை உள்ள சுபநேரத்தில் வைத்திய கலாநிதி எஸ். ரவிராஜ் (சத்திரசிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை), உயர்திரு செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர், சாவகச்சேரி) ஆகிய இருவரினாலும் திறந்து வைக்கப்படுகிறது.

**நவீன வசதியுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதி**

24 மணி நேர MBBS சேவை வைத்திய நிபுணர்களின் ஆலோசனை சேவை.
அதி நவீன கணனி மயப்படுத்தப்பட்ட இரத்த, சல பரிசோதனை ஆய்வு கூடம்
ஸ்கான், ECG,
சலரோகம், இருதய நோய், பிறசர், மூட்டு நோய்களுக்கான கிளினிக்

கர்ப்பவதிகளுக்கான கிளினிக்,
பல் பிடுங்குதல், கட்டுதல், அடைத்தல், கிளிப் போடுதல், முழுமையான கண் பரிசோதனை,
கண்ணாடி வழங்குதல்

முதல் 7 நாள்களுக்கு (02.11.2009 – 08.11.2009) வரை பார்வையிடப்படும் நோயாளர்களுக்கு வைத்தியர்களுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
சில இரத்த, சல சோதனைகளும் இலவசமாக செய்யப்படும்.

## சிற்றி சென்ரர் (சண்றைஸ் றேடஸ்)

உரிமையாளர் – ரி.குகநேசன்,
வைத்தியர்கள், ஊழியர்கள்.

(90513)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY

# கணிதம் - II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

* பகுதி Aயிலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி Bயிலிருந்து ஐந்து வினாக் களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடை தருக.
* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி - A

01. ஒருவர் வங்கி ஒன்றிலிருந்து பெற்ற கடன் ரூபா 16,200இற்கு 8% ஆண்டு வட்டி உடன் சமமான 36 மாதாந்த கட்டணங்களாக செலுத்தவேண்டும்.
   1) மாதம் ஒன்றில் செலுத்தப்படவேண்டிய பகுதி எவ்வளவு?
   2) மாத அலகு ஒன்றிற்கு வட்டி யாது?
   3) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
   4) செலுத்த வேண்டிய மொத்தவட்டி யாது?
   5) வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்தப்பணம் எவ்வளவு?
   6) செலுத்த வேண்டிய தவணைக்கட்டணம் யாது?

02. a. $y = x^2 - 2x$இன் வரைபொன்றை வரைவதற்கு பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.


| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 8 | ...... | 0 | ...... | 0 | ...... | 8 |

   1) x, y அச்சுக்களில் பத்து பிரிவுகளுக்கு ஒரு அலகாக எடுத்து இதன் வரைபை வரைக.
   2) $y = -2x + 2$ என்ற நேர்கோட்டின் வரைபை ஆழ்கூற்றுத்தளத்தில் வரைக.

| x | -1 | 0 | 0 | 1 |
|---|---|---|---|---|
| y | 3 | 1 | 0 | -1 |

b. வரைபிலிருந்து
   1) இழிவுப்பெறுமானம் யாது?
   2) சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   3) நீர் வரைந்த வரைபும் நேர்கோடும் இடைவெட்டும் புள்ளியில் x ஆழ் கூறுகளினால் $x^2 - 2 = 0$ திருப்பியாக்குகின்றது எனக்காட்டுக.
   4) இதிலிருந்து 2 இன் பெறுமானம் யாது?

03. a. தீர்க்குக. $x + 1/x - 2 - x + 3/2 - x = 4$
b.




x பக்கமுள்ள சதுரத்தக்கட்டுக்கு படத்தில் காட்டியவாறு பக்கங்களுக்கு 3cm, 2cm நீளங்கள் காட்டப்பட்டு அவ்வுருவம் செவ்வகமாக்கப்படுகிறது. புதிய செவ்வகத்தின் பரப்பு $30cm^2$ எனின்,
   1) செவ்வகத்தின் நீளம் x சார்பாக காண்க.
   2) செவ்வகத்தின் அகலம் x சார்பாக காண்க.
   3) செவ்வகத்தின் பரப்பை கருதி சமன்பாடு ஒன்று அமைக்குக.
   4) இச்சமன்பாட்டை வர்க்க பூர்த்தியாக்கும் முறையோ அல்லது சூத்திரத்தை பயன்படுத்தி x இன் தீர்வை காண்க.

04. குறித்த பாடசாலை ஒன்றில் 11A தரத்தில் உள்ள மாணவர்களின் நிறைகளை கிட்டிய கிலோகிராமில் தரப்பட்டுள்ளது.

| நிறை kg | 23 - 25 | 25 - 27 | 27 - 29 | 29 - 31 | 31 - 33 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் | 3 | 5 | 10 | 8 | 4 |

   1) எவ்நிறை ஆய்யிடையில் அதிக எண்ணிக்கையானவர்கள் உள்ளனர்?
   2) ஒரு மாணவனின் இடைநிறையைக் காண்க.
   3) 11ஆம் தரத்தில் 100 மாணவர்கள் உள்ளனர் எனின், மொத்த நிறையை விஞ்ஞான குறியீட்டில் தருக.

05. 7.5% பங்குலாபம் வழங்கும் நிறுவனம் ஒன்றில் ரூபா 10 கொண்ட பங்குகள் வாங்குவதற்கு ரூபா 12,500 முதலீடு செய்தர். அவர் அதிலிருந்து பெற்ற வருமானத்தில் 15% வரியாக செலுத்திய பின் அவரிடம் ரூபா 637.50 எஞ்சியிருந்தது.
   1) நிறுவனத்திலிருந்து பெற்ற வருமானம் எவ்வளவு?
   2) வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திர பெறுமானம் யாது?
   3) வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?
   4) பங்கு ஒன்றை என்ன விலைக்கு வாங்கியுள்ளார்?

06. ABCD ஓர் இணைகரமாகும். ACயும் BDயும் ஒன்றை ஒன்று செங்குத்தாக Oவில் வெட்டுகின்றன. பின்வருவனவற்றை நிறுவுக.
   1) $\Delta AOB = \Delta AOD$
   2) AO ஆனது BAD இன் இரு கூறாக்கி
   3) AB = AD
   4) $\Delta ABD$இன் விசேட பெயர்?

## பகுதி - B

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.


01. cm/mmn அளவிடை உள்ள ஒரு நேர் விளிம்பு கவராயம் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைப்பு கோடுகளை தெளிவாகக்காட்டி
   1) BC = 7cm, ABC = $30^0$, BAC = 90 ஆகுமாறு $\Delta ABC$ ஐ அமைக்குக.
   2) AC ஐ அமைக்குக.
   3) B, C யிலிருந்து சமதூரத்தின் அசையும் புள்ளியின் ஒழுக்காக அமைக்குக.
   4) இவ் ஒழுக்கானது BC ஐ வெட்டும் புள்ளி O எனக்குறிக்குக.
   5) O வை மையமாகவும் OB ஐ ஆரையாகவும் கொண்டு வட்டம் வரைக.
   6) இவ்வட்டத்தை எவ்வாறு அழைக்கப்படும்.
   7) முக்கோணியின் பரப்புக்கும் வட்டத்தின் பரப்புக்கும் உள்ள விகிதத்தை எழுதுக.

02. 7.2cm நீளமும் 5.06cm அகலமும் 0.86cm உயரம் உடைய கனவுருவத்தை உருக்கி 3.2cm உயரமுடைய திண்ம உருளை ஒன்று செய்யப்பட்டது.
   1) உருளையின் ஆரையை a எனக்கொண்டு $a^2 = 7.23 \times 0.06 \times 0.861 / 3.2\pi$ எனக்கூட்டுக.
   2) $3.2\pi = 10.5$ எனக்கொண்டு மடக்கையைப் பயன்படுத்தி $a^2$ இன் பெறுமானம் காண்க.
   3) இதிலிருந்து aஇன் பெறுமானத்தையும் காண்க.


03. விருத்தி ஒன்றின் nஆவது உறுப்பு $T_n = 3n - 1$ இனாலே தரப்படுகிறது.
   1) எவ் விருத்தி எனக் கூறுக.
   2) விருத்தியின் 12ஆவது உறுப்பு யாது?
   3) முதல் 25 உறுப்புகளின் கூட்டுத்தொகை யாது?
   4) இனவிருத்தியின் நான்காம் உறுப்பிலிருந்து ஒன்பதாம் உறுப்புவரை உள்ள உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

04. a. இவ்வுவில் O வட்ட மையம் படத்தில் காட்டிய குறியீட்டினபடி,
   1) xஇற்கும் qஇற்கும் உள்ள தொடர்பை எழுதுக.
   2) yஇற்கும் pஇற்கும் உள்ள தொடர்பை எழுதுக.
   3) xஇற்கும் yஇற்கும் உள்ள தொடர்பை கருதி P + qஇன் பெறுமானத்தைக்காண்க.


b. இவ்வுருவினது
   1) DAB இன் மிகை நிரப்பு கோணம் யாது?
   2) Δ BCE இற்கு இயல்பொத்த முக்கோணி ஒன்றை பெயரிடுக.
   3) DB/ DE இற்குச் சமமான இரண்டு விகிதங்களை எழுதுக.




05. $n(A^1) = 27$, $n(B^1) = 32$, $n(B) = 30n (AnB^1) = 8$ எனின்,
   1) மேற்படி தரவை கொண்டு உருவில் குறிக்குக.
   2) n(A) 3) n(AuB)
   4) n(ε) 5) n(AnB)
   6) $n(A^1nB)$ ஆகியவற்றைக் காண்க.




06. a. முக்கோணி ஒன்றில் இரு பக்கங்கள் சமன் எனில், சமபக்கத்திற்கு எதிர்கோணங்கள் சமன் எனக்காட்டுக.
உருவில் PQR ஒரு நேர்கோடு PQ = PT ஆகவும், QR = RS ஆகவும், PT/ RS எனவும் தரப்பட்டுள்ளது.
   1) PQT = x எனின், QPT ஐ காண்க.
   2) RQS = y எனின், QRS ஐ y சார்பாக காண்க.
   3) QRTஇற்கும் QRSஇற்கும் உள்ள தொடர்பை காரணத்துடன் தருக.
   4) அதிலிருந்து (x + y) இன் பெறுமானத்தைக் காண்க. TQS செங்கோணம் எனக் காட்டுக.




-நிறைவுற்றது-

# தமிழ்மொழியும் இலக்கியமும் - II இன் தொடர்ச்சி......

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் எழுதுக.
   1) இன்றைய உலகில் பெருகிவரும் தொழில்நுட்ப சாதனங்கள் மூலமாக தொடர்புசாதனங்கள் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளன. இவற்றின் வளர்ச்சி சின்னத்திரை உலகிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. அவ்வகையில் இன்று ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நாடகங்களினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள அனுகூலங்கள், பிரதிகூலங்கள் பற்றி விளக்கக்கட்டுரை எழுதுக.
   2) இன்று உலக நாடுகளின் அபிவிருத்தியில் தொடர்பாடல் தொழில்நுட்பம் பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. நாடுகளின் அபிவிருத்திக்கு கல்வித்துறை வளர்ச்சியடைவது அவசியமாகும். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தொலைக்காட்சியின் அனுகூலங்களைப்பெறும் அதேவேளையில் பிரதிகூலங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்தில்கொண்டு இருவருக்கிடையே நடைபெறும் உரையாடல்.
   3) இன்றைய இளைஞர்கள் மத்தியில் தம் பெற்றோரை பராமரிக்காது அவர்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக முதியோர் இல்லங்களில் அனுமதித்து விடுகிறார்கள். அதனால் பெற்றோர் மனநிலை பாதிப்படைந்து துயரத்துடன் வாழ்கின்றார்கள். இந்நிலை தொடர்ந்து வரக்கூடாது. முதியோரை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி நீர் நிகழ்த்தும் மேடைப் பேச்சு.
   4) அவன் இவ்வாறு தீய நண்பர்களோடு சேர்ந்து சுற்றித்திரியும் வாலிபனாக இருந்தானேயொழிய அவனது கல்விக்கு பெற்றோர் உட்பட ஆசிரியர்களும் வசதி செய்து கொடுத்தார்கள். அவனுக்கு படிப்பதற்கென வசதி செய்து கொடுக்கும் பணத்தைக்கூட தீய வழிகளில் பயன்படுத்தினான். கற்பதற்குரிய வழிமுறைகளையும் சந்தர்ப்பங்களையும் உதறித்தள்ளினான். இறுதியில் கடந்தது என்ன? ''காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்'' என்ற பழமொழிக்குப் பொருத்தமாக ஒரு சிறுகதை எழுதுக.

03. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பகுதிகளின் கருத்தையும் 15-20 சொற்களில் எழுதுக. சொல் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
   அ. உறவினர்களையும் அன்புக்குரிய நண்பர்களையும் இல்லத்துக்கு அழைத்து விருந்தோம்புதல் என்பது எங்கும் பரவியுள்ள பழக்கம். எனினும், மேலை நாடுகளான ஐரோப்பியரிடமும் அமெரிக்கரிடமும் விருந்தோம்பலில் தெளிவான நிவாரணம் கடைப்பிடிக்கப்படுகிறது. உறவினரோ? நண்பரோ? நினைத்த நேரத்திற்கு உறவினர் அல்லது நண்பர் வீட்டுக்கு வருவது பொதுவாக விரும்பப்படுவது இல்லை. தொலைபேசி வழியாகவோ கடித மூலமோ வரும் நாளையும் நேரத்தையும் முன்பே உரியவருக்கு தெரிவித்து விட்டு பின்னர் வருவதே வரவேற்கப்படுகிறது. இதனால் அவர்களுக்கு அன்பில்லை. பகிர்ந்துகொள்ளும் பண்பில்லை என்று கீழ்நாட்டவர் முடிவு செய்வது சரியாகாது. முன்னறிவிப்புச் செய்துவிட்டு வந்தால் சிறப்பாக விருந்தோம்பலாம் என்பதே முன்னறிவிப்பை எதிர்பார்ப்பதன் நோக்கமாகும்.
   ஆ. குற்றம் செய்த பகைவரைக் கண்டவிடத்து இயல்பாகவே சிவக்கும் கண்களையுடைய சேர மன்னனது யானைப்படையில் கோபமுறும் மத முகங்கொண்ட வலிமைமிக்க யானைகள் இருந்தன. அப்போர் யானைகளில் ஒன்று போர் செய்வதில் தனிப்பட்ட சிறப்பு வாய்ந்த படைப் பலம் பெருந்த மன்னர்களது விரிந்து பரந்த மலையோடு கூடிய வெண்கொற்றக்குடையை அதன் நிலை.
   குலையும் வண்ணம் அடியோடு பெயர்த்து எறிந்து வந்த பழக்கமுடையது. எனவே, அப்பழக்க உணர்ச்சியால் எதிரில் மாற்றாற்படை ஒன்றும் காணாது. யானையொன்று நின்றபோது சற்றும் சிந்திக்காது தனது தும்பிக்கையை மேல் நோக்கி நீட்டி முழு நிலவை மாற்றார் படையின் வெண்கொற்றக் குடை எனக் கருதித் தொடுகிறது. சேரனின் யானைப்படையின் முன்பு எவ்வித மாற்றார் படையும் இன்றி வழுவிழந்து ஓடிவிட்டன.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

நிலவே நிலவே எங்கெங்கு போனாய்?
உலகம் முற்றும் உலாவப் போனேன்.
உலாவல் எதற்கு விலாசத்தீபமே?
காடும் மலையும் மனிதரும் காண
காண்பதெற்குக் களிக்கும் பூவே?
சூரிய வெப்பம் நீங்கிக் குளிர
குளிர்ச்சி எதற்கு வெளிச்சப் பொருளே?
செய்யுள் தொழிலிற் சித்தங்களிக்க
சித்தங்களிக்க செய்வதெதற்கு?
வீட்டைச்சுரண்டும் அடிமை விலக்க
அடிமை விலக்கும் அதுதான் எதற்கு?
கொடுமை தவிர்த்துக் குலத்தைக் காக்க.

   1) இப்பாடலின் பிரதான கருத்து என்ன?
   2) பிரதான கருத்தைக் கூறுவதற்கு ஆசிரியர் கையாண்ட உத்தி என்ன?
   3) நிலவு எங்கு போனது?
   4) பின்வருவனவற்றுக்கு ஒத்த சொல் தருக.
      1. மலை. 2. காடு.
   5) பின்வருவனவற்றுக்கு எதிர்பதம் தருக.
      1. போதல். 2. குளிர்ச்சி.

05. உமது பாடசாலையில் நடத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழாவினை சிறப்புற நிகழ வழிப்படுத்திய குழுவின் செயலாளராக உம்மைக்கருதி நடந்த இலக்கிய விழா பற்றி அறிக்கை எழுதுக.

வளரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப் பகிர்வில் முன்னேற்றம்....

(07ஆம பக்கத் தொடர்ச்சி)

2] மொத்த அரச வருமானத்தில் குறைந்த பட்சம் 50 சதவீதத்தையாவது மாகாண ஆட்சிகளின் நிர்ணயத்துக்கும் நிர்வாகத்துக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நிதி ஆதாரங்கள் இன்றியமையாதவை.

இந்த இரண்டு விடயங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டாமல் 13ஆவது திருத் தத்தை முழுமையாக மக்களுக்குப் பயனளிக்கும் அதிகாரப் பரவலாக்கம் கொண்டதாக நிறைவேற்றுவது சாத்தியமில்லை! ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த இரண்டு விடயங்களையும் செய்ய வேண்டும். அதற்கு அவரைச் சூழ்ந்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட மற்றைய சக்திகள் உந்துதல்களும், ஆதரவும் கொடுக்கவேண்டும்.

### மாற்றம் அவசியமே

எவ்வாறாயினும் 13ஆவது திருத்தத்தின் இப்போதைய அமைப்பின் அதன் நல்லபோக்கும் கூடாத போக்கும், சட்டத்தின் அமைவாக அல்லாமல் மத்திய ஆட்சித்தலைவரின் தனிப்பட்ட நோக்கத்தி லும் கருத்திலும் தங்கியிருப்பதற்காகவே இருக்கும். ஆட்சி மாறினால் 13ஆவது திருத்தத்தின் நடைமுறையும் மாறக்கூடும். எனவே அதனை நீண்ட காலத்துக்கு நம்பியிருக்க முடியாது. அதனால் 13ஆவது திருத்தம் நல்ல முறையில் முழுமையாக நிறைவேற்றப் பட்டாலும் கூட, மற்றொரு அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் நல்லமுறையில் மாற்றி அமைக்கப் பட்டால் தான் அது ஒரு பெரிய பயனுடைய விடயமாக அமையும் என்பதும் மிக விரைவில் அதற்கு மாற்றாக சட்டரீதியாக நிரந்தரம் கொண்ட சரியான தொரு அரசியற் தீர்வு ஆக்கப்பட்டு செயற் படுத்தப் படவேண்டும் என்பது தீர்க்கமானதாகும்.

அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களும், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது ஒரு தற்காலிக ஏற்பாடே, அது பிரச்சினைகளுக்கு முழுத்தீர்வாகாது. அரசியல் யாப்பு திருத்தத்தின் மூலம் அர்த்த புஷ்டியான அதிகாரப் பரவலாக்கம் நிறைவேற்றப்பட்டால்தான் தமிழ்மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### நமது கடமை

மிகப் பெரும்பாலானவர்கள் 13ஆவது திருத்தம் பற்றிய எந்த அறிவும் இல்லாமலே -பரவலாக எழுப்பப்படும் கோஷங்களை அடிப்படையாக வைத்து-13 வது திருத்தம் மீதான அதிருப்தியைக் காட்டுகின்றனர் சிலர்.

சில நபர்களின் நுனிப்புல் மேய்ந்த வகையான கருத்துக்களைக் கேட்ட அளவிலேயே தமது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்ற னர். 13ஆவது திருத்தம் பற்றி முறையாக் கிரகித்து புரிந்து கொள்ளாமல் ஒருவர் இலங்கையில் அதிகாரப் பகிர்வு பற்றி தமது தெளிவான அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ளமுடியாது.

எவ்வளவுதான் குறைபாடுகளைக் கொண்டதாக இருந்த போதிலும், அடுத்த கட்டமான அதிகாரப் பகிர்வு முன்னேற்றமானது. 13ஆவது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப்பாயும் ஒரு விடயமே. எனவே 13ஆவது திருத்தம் பற்றிய முறைான அறிவும் தெளிவான புரிதலும் சமூக இலட்சிய பாதையில் உள்ள இன்றைய தேவையாகும். அத்துடன் 13ஆவது திருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் நடைமுறையாக வைப்பதற்கான வேலைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதுவும் தமிழர்களின் நலன்கள் மீது உண்மையான அக்கறை கொண்டோரின் கட்டாயமான கடமையுமாகும். [முற்றும்]


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1135 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 11 15 16 48

30-10-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 202,864 | 20/- | 4,057,280/- |
| 2 இலக்கங்கள் | 18,688 | 40/- | 747,520/- |
| 1 இல. + லக்கினம் | 18,430 | 60/- | 1,105,800/- |
| 2 இல. + லக்கினம் | 1,738 | 200/- | 347,600/- |
| 3 இலக்கங்கள் | 504 | 1000/- | 504,000/- |
| 3 இல. + லக்கினம் | 41 | 10,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 7,772,200/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 242,273 | | 8,272,200/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,906,550/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : எம்.எஸ்.விஜேசூரிய இங்கிரிய

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டபிள்யூ.ஏ.சுஜீவா டில்ருக்ஷி குருநாகல்

2009 நொவெம்பர் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுகள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500663845-1-04 |
| நுவரெலியா | 500648871-5-15 |
| பதுளை | 500648599-2-15 |
| மாத்தளை | 500651043-7-21 |
| களுத்துறை | 500649204-4-40 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் தற்போது தென்மராட்சிக் கல்வி வலய முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த பிரதிக்கல்விப் பணிப்பாளர்

**திரு.பி.முத்துலிங்கம்**

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIஇற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம். (90438)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தின் பெருமதிப்பிற்குரிய அதிபர்

**உயர்திரு.சி.பவளகுமாரன்**

அவர்கள்இலங்கை அதிபர்சேவை தரம் 2-1 இற்குப் பதவி உயர்வு பெற்றமையயிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேன்மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற்று அவரது சேவை தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிக்கழகம்,
யா/ கைதடி முத்துக்குமார சுவாமி ம.வித்தியாலயம். (90438)

## யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய
## புகழுறு மாணவர் விவரம் திரட்டல்

வித்தியாலயத்தினால் வெளியிடப்படவுள்ள நூலில் பாடசாலையில் கல்வி கற்ற புகழுறு மாணவர், விவரங்களையும் இணைப்பதற்கு ஏதுவாக உலகெங்கும் பரந்து வாழும் பழைய மாணவர்கள் தங்களது விவரங்களை 08.11.2009ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மின்னஞ்சல்:
ilavalai meihandan@yahoo. com.
தொலைபேசி இல:- 021 3007828

அதிபர்,
யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இளவாலை. (சி562061)

# நெஞ்சம் மறவாத ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 25.06.1946 விண்ணில்: 27.10.2004

அப்பா!
பாசமதால் கட்டியாண்டு பண்புடனே வளர்த்தெடுத்து
பாரகத்தே நாம் சிறக்கப் பல நலன்கள் காட்டி வைத்து
நிலவுலகை விட்டு நீங்கள் சென்று ஐந்தாண்டுகளாகியும்
மாசுபடா உங்கள் நினைவுதன்னை நெஞ்சிலே சுமந்துகொண்டு
ஊன் உருகி உளம் நோக வாழ்கின்றோமப்பா!
ஆசைமுகம் காண ஆத்மா அனலாய்க் கொதிக்குதப்பா!
அங்கமெல்லாம் வெந்தணலாய் வேகி வாழும் - இந்
நிலையற்ற வாழ்வின் நாடக பாத்திரத்தைச் செவ்வனே முடித்து
உங்களுடன் சங்கமித்து அர்த்தமான வாழ்வு வாழும்வரை
மீளாத்துயிலில் நீங்களும் ....
மீளாத் துயரில் நாமும்....

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைஞ்சும்,
குடும்பத்தினர்.

அமரர்
**சுப்பிரமணியம் செல்வராசா**
(உரிமையாளர், வாணி ரெக்ஸ், சாவகச்சேரி)
திதி: பூரணை

கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

(சி 561892)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலுக்கு மின்னொளி வழங்கும் நிகழ்வையொட்டி நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக்கொள்வதைப் படங்களில்
(படங்கள்: நேசன்)

# வலிகாமம் வலய உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் நாளை!

வலி. வடக்கு, நவ. 2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் தலை மையில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணத் தொழில் நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் என். ஆர். ஜீ. ஹூலும், சிறப்பு விருந்தினராக வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதி பர் திருமதி இந்திராணி ஜெயக்குமாரனும், கௌரவ விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்தியத் தலைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(04-86)

## சண்டிலிப்பாய் கோட்ட உதைபந்தாட்டம்

# 16 வயதுப் பிரிவில் சம்பியனானது இளவாலை ஹென்றியரசர் கல்லூரி

வலி. வடக்கு, நவ.2

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினர்களுக்கான உதை பந்தாட்டப் போட்டியில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட் டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இள வாலை புனித கென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பமாகி 12 வது நிமிடத்தில் புனித கென்றியரசர் கல்லூரி தனது முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணி களும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப் புடன் களமிறங்கி மோதிக் கொண்டன. எனி னும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெறமுடி யவில்லை.

ஆட்ட நிறைவில் புனித கென்றியரசர் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக்கல்லூரியை வெற்றி கொண்டு கோட்டமட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சண் டிலிப்பாய் இந்துக்கல்லூரியும், மாதகல் சென்யோசப் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப்போட்டி சம நிலையில் முடி வடைந்ததால் வெற்றி தோல்வியைத் தீர்மா னிப்பதற்காகச் சம நிலைத் தவிர்ப்பு உதை கள் வழங்கப்பட்டன. இதன் போது சண்டிலிப் பாய் இந்துக் கல்லூரி 04:02 என்ற கோல் கணக்கில் மாதகல் சென்யோசப் வித்தியால யத்தை வீழ்த்தி மூன்றாம் இடத்தைப் பெற் றுக் கொண்டது. (04-86)

# 13 வயதுப் பிரிவிலும் சாதித்து சம்பியனானது ஹென்றியரசர் கல்லூரி

வலி. வடக்கு, நவ.2

சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பாட சாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி சம்பியனா கத் தெரிவு செய்யப்பட்டது.

இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட் டியில் மாதகல் சென். யோசேப் வித்தியால யமும் ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி நிறைவு பெறும் வரை ஹென்றியரசர் கல்லூரியின் ஆதிக் கமே மைதானத்தில் மேலோங்கிக் காணப் பட்டது.

ஹென்றியரசர் கல்லூரி 02 கோல்களைப் பெற்று முன்னிலையில் காணப்பட்ட நிலை யில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டமும் சென். ஹென்றியரசர் கல்லூரிக்குச் சாதகமாகவே காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் ஹென்றி யரசர் கல்லூரி மேலும் 02 கோல்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆட்ட இறுதியில் சென்.ஹென்றியரசர் கல் லூரி 04:00 என்ற கோல் கணக்கில் சென். யோசேப் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு கோட்டமட்டச்சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மானிப் பாய் இந்துக் கல்லூரியும் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இப்போட்டி சம நிலையில் முடிவடைந்த தைத் தொடர்ந்து வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சின்மயபாரதி வித் தியாலயம் 03:01 என்ற கோல்கள் அடிப் படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி யைத் தோற்கடித்து 3ஆம் இடத்தைப் பெற் றுக் கொண்டது. (04-86)

## அகில இலங்கை ரீதியில் பெண்களுக்கான

# கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் விளையாட வேம்படி, திருக்குடும்பக் கன்னியர் மடம் அணிகள் தகுதி!

வலி.வடக்கு, நவ. 2

அகில இலங்கைப் பாடசாலைகள் கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய மாவட்ட அணிகளுக்கு இடையேயான பெண்களுக் கான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் நடைபெறும் இறுதிப் போட்டிகளில் விளையாட யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை யும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல் லூரியும் தகுதி பெற்றுள்ளன.

கொழும்பு வெள்ளவத்தை சென்.லோறன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டிகளில் யாழ்ப்பாணம் திருக் குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையும், வேம்படி மகளிர் கல்லூரியும் கலந்து கொண் டன.

'ஏ' பிரிவில் கலந்து கொண்ட திருக் குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை தான் பங்குபற்றிய 5 போட்டிகளில் மூன்று போட் டிகளிலும் -

'சி' பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி கலந்து கொண்ட நான்கு போட்டிகளில் மூன்று போட்டிகளிலும்-

வெற்றியைப் பெற்று இறுதிச் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

எனினும் இச் சுற்றுப் போட்டியின் இறு திப் போட்டிகள் கடந்தவாரம் கொழும்பில் இடம் பெற்ற போதிலும் குறுகிய கால முன்னறிவித்தல் காரணமாக கொழும்பு செல்ல முடியாத நிலையினால் இறுதிப் போட் டிகளில் விளையாட இவ்விரு அணியும் செல்லவில்லையென்பதும் குறிப்பிடத்தக் கதாகும். (04-86)

# விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மின்னல் வேகக் கூடைப்பந்தாட்டம் இன்று

வலி. வடக்கு, நவ.2

யாழ்ப்பாணம் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் அமரர் விபுலானந்தன் ஞாப கார்த்தமாக நடத்தும் மின்னல் வேகக் கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

இன்று இடம் பெறும் போட்டிகளில் 12 கழகங்கள் பங்குபற்றவுள்ளன. இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெற வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04-86)

# இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளது வலிகாமம் வலய உதைபந்தாட்டம்

வலி. வடக்கு, நவ.2

வலிகாமம் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் 16 வய துப் பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி, இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி ஆகி யனவும்-

18 வயதுப் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் இறுதிப் போட்டிகளில் விளை யாடத் தகுதி பெற்றுள்ளன.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் 16,18 வயதுப்பிரிவினருக்கான அரையி றுதி ஆட்டங்கள் வட்டுக் கோட்டை யாழ்ப்பா ணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

16 வயதுப் பிரிவு அரையிறுதி ஆட்ட மொன்றில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் புனித கென்றியரசர் கல்லூரி 02:00 என்ற கோல் கணக்கில் மகா ஜனக் கல்லூரியை வெற்றி கொண்டு இறு திப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் அராலி இந் துக்கல்லூரியும் மானிப்பாய் இந்துக்கல்லூ ரியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல் லூரி 04:00 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக் கல்லூரியை வீழ்த்தி இறுதிப் போட் டியில் விளையாடத் தகுதி பெற்றது.

18 வயதுப் பிரிவினருக்கான அரையி றுதி ஆட்டமொன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் அராலி இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 05:01 என்ற கோல் கணக்கில் அராலி இந்துக்கல்லூரியை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (04-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, நவ.2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெறவுள்ள 18 வயதுப் பிரி வினருக்கான அரையிறுதி ஆட்டமொன் றில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொள்ளவுள்ளன. (04-86)

* * *

வலி வடக்கு,நவ.2

யாழ் மாவட்டத் தாச்சிச் சங்கம் வர்த் தக வங்கி, இலங்கைவங்கி என்பவற்றின் ஆதரவுடன் பதிவு செய்யப்பட்ட தாச்சிக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுதுமலை யுவ சக்தி விளை யாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பண்டத்தரிப்பு அறிவொளி விளை யாட்டுக்கழகம், எதிர்இணுவில் அறிஞர்விளை யாட் டுக் கழகம்.

* பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் நவரலி சென். றோக் விளையாட்டுக் கழகம். (04-86)

* * *

வலி.வடக்கு, நவ.2

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 3ஆம் இடத்துக்கான போட்டி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளன.

இன்றைய போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

18வயதுப்பிரிவு அரையிறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எதிர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

14வயதுப்பிரிவு

* 3ஆம் இடத்துக்கான போட்டி- யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

* இறுதியாட்டம்- யாழ்ப்பாணம் இந் துக் கல்லூரி எதிர் நாவாந்துறை றோமன் கத் தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.

16வயதுப்பிரிவு

இறுதியாட்டம்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் நாவாந்துறை றோமன் கத் தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.


* 3ஆம் இடத்துக்கான போட்டி- கொக்குவில் இந்துக் கல்லூரி, எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

18வயதுப்பிரிவு இறுதிஆட்டம்

* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் இன்றைய இறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் இறுதி அணி.

(203- 86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக விஞ்ஞான தினத்தை யொட்டி யாழ்.மத்திய கல்லூரியில் விதாதா வள நிலையத்தினால் நேற்று நடத்தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படங்கள். சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் கண்காட்சியைத் திறந்து வைப்பதையும், அமைச்சர் மற்றும் யாழ். அரச அதிபர் உட்பட பிரமுகர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும், ரெலிக்கொம் நிறுவன காட்சி அறையையும் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

# முஸ்லிம் மக்கள் யாழ். மாவட்டத்தில் எந்த நேரத்திலும் வந்து குடியேறலாம்

## சமூகசேவைகள் அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.2

யாழ். மாவட்டத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருந்தாலும் அவர்கள் எந்த நேரத்திலும் இங்கு வந்து குடியேறலாம்.

இப்பகுதியில் தமிழ் மக்களும முஸ்லிம்களும் எவ்வாறு கௌரவமான முறையில் சகோதரத்துடன் வாழ்ந்தார்களோ அதே முறையில் வாழ அந்த மக்கள் மீளக் குடியமர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

குடாநாட்டில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 19 வருடபூர்த்தியை முன்னிட்டு 'பலவந்த வெளியேற்றமும் கௌரவ மீள் குடியேற்றமும்' என்னும் தொனிப்பொருளில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்ட தகவலைக் கூறினார்.

தொடர்ந்து அவர் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறு வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்களுக்கு இயன்ற உதவிகளை தொடர்ந்து எமது கட்சி செய்து வருகிறது.

நடந்தவற்றை மறந்து ஐக்கியப்பட்டு ஒன்றிணைந்து வாழ்வதே சிறந்த வாழ்வாக அமையும்- என்றார்.

இந்த நிகழ்வில் மக்கள் பணிமனைத் தலைவர் அல்ஹாச் சுபியான் மௌலவி உரையாற்றுகையில்-

ஐந்நூறு வருடத்திற்கும் மேலான பாரம்பரியத்தைக்கொண்ட முஸ்லிம் மக்களை ஆயுத முனையில் சுற்றி வளைத்து சொத்துக்கள் அனைத்தையும் பறித்து வெறும்கையுடன் பலவந்தமாக வெளியேற்றிய துயரமிக்க அந்த நிகழ்வு என்றும் மறக்கமுடியாதது.

அன்று முஸ்லிம் மக்கள் அனுபவித்த அல்லல்களை நினைக்கும் போது நெஞ்சு வெடிக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை வரலாற்றில் முஸ்லிம் மக்களுக்கு நிகழ்ந்த கொடுமை போல தமிழ் மக்களுக்கு நிகழவில்லை என்றே நான் கூறுவேன். எம்மைப் போல இதுவரை ஓர் இனமக்கள் இப்படி முழுமையாக வெளியேற்றப்பட்டார்களா? நீண்ட காலம் அகதி வாழ்க்கை வாழ்ந்தார்களா?.

இதற்காகத் தமிழ் மக்களை நான் குறை கூறவில்லை. வன்னியில் யுத்தம் நிகழும் போது நாம் கண்ணீர் வடித்தோம். வவுனியா முகாமிலிருக்கும் மக்களுக்கு உதவியிருக்கிறோம்.

முஸ்லிம் மக்கள் தமிழ் சகோதரர்களுக்கு உதவுவது போல,தமிழ்மக்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். நாம் மீளக்குடியமரும் போது நீங்கள் எப்படி உதவப் போகிறீர்கள் எனக் கேட்கிறேன்.

அனைத்து மக்களும் தமது இருப்பிடங்களுக்கு செல்லக்கூடிய அமைதி நிலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மக்கள் பணிமனையினால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போது 250 குடும்பங்கள் விண்ணப்பித்திருந்தன. தற்போது 100 குடும்பங்களை குடியமர்த்த திட்டமிட்டிருகிறோம்- என்றார்.

யாழ். மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எம்.றெமீடியஸ் உரையாற்றுகையில்:-

முஸ்லிம் மக்களை பலவந்தமாக வெளியேற்றிய நிகழ்வானது நியாயப்படுத்த முடியாதது. பலவந்த வெளியேற்றம் அன்று இடம்பெறும் போது தமிழ் மக்கள் அமைதியாக இருந்தனர். அதன் விளைவைத்தான் தமிழ் மக்கள் இன்று சந்திக்கின்றனர். இது இறைவனின் தீர்ப்பு- தண்டனை.

முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட அதே தினத்தில் தான் 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

முஸ்லிம் மக்களின் வாழ்வில் துயரமிக்க அந்த தினத்தை நினைவு கூருவது அம்மக்களின் அடிப்படை உரிமையாகும்.

முஸ்லிம் மக்கள் இங்கிருந்திருந்தால் எமது மண்ணின் விளையாட்டுதுறை மேம்பாடு கண்டிருக்கும்.

எமக்கு தேவையான பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவியிருக்காது. இது போன்ற பல நன்மைகள் எமக்கு கிடைத்திருக்கும்.

நாம் அவர்களை வரவேற்பது மட்டுமன்றி அவர்கள் தமது வாழ்வாதார தொழிலை மேற்கொள்ள வழி செய்து கொடுக்க வேண்டும்.

சட்ட நடைமுறைகளை முதன்மைப் படுத்தாது. அதிலிருந்து மக்களை விடுத்து, வாழ்வாதார தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவிப்பு வழங்கும் முகமாக பூரண ஆதரவு வழங்கும்படி யாழ். மாநகர சபை முதல் வரை கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (203- 14)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 08 . 06 . 1908

உதிர்வு 03 . 10 . 2009



அமரர் வீரகத்தி கந்தையா (செட்டியார்)

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழி காட்டிய அன்புத்தெய்வமே!
எங்கள் ஆருயிர்த் தந்தையே!
உமைப்பிரிந்து வாடி நிற்கின்றோம்.

இன்று *(2.11.2009)* திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தென்கிழக்கு,
கைதடி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(90496)



புதுக்கடைத் திறப்பு விழா

சோதி மொபைல்

SOTHY MOBILE

நிகழும் ஐப்பசி மாதம் (02.11.2009)
திங்கட்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம்
12.45 மணி வரையுள்ள சுபநேரத்தில் புதிதாக
எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

* சகலவிதமான கையடக்க தொலைபேசிகளையும், அதற்கான உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும். குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
* சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளையும் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

இலக்கம் 114,
ஆஸ்பத்திரி வீதி,
(அம்பிகை களஞ்சியம்,
முன்பாக)
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
இ. மதீஸ்வரன்
0778331777

(சி/562065)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் மீண்டும் சூறாவளி; லட்சக் கணக்கானோர் இடம்பெயர்வு!

மணிலா, நவ. 02

பிலிப்பைன்ஸை மீண்டும் கடும் சூறாவளி தாக்கியது. இதையொட்டி ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். 180 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

பிலிப்பைன்ஸை அடிக்கடி சூறாவளி தாக்கிவருகிறது. கடந்த 5 வாரங்களில் அங்கு 2 சூறாவளிகள் தாக்கின. இதில் ஆயிரத்து 100 பேர் பலியாயினர். இந்த சூறாவளி தாக்குதல்களிலிருந்து பிலிப்பைன்ஸ் இன்னும் மீளவில்லை.

இந்நிலையில், சனிக்கிழமை அங்கு மீண்டும் சூறாவளி தாக்கியது. இதற்கு 'மிரினே' என்று பெயரிடப்பட்டுள்ளது. மணிக்கு 185 கி.மீ. வேகத்தில் இந்தச் சூறாவளி வீசியது. அதனுடன் கன மழை கொட்டித் தீர்த்தது. லுசோன் தீவில்தான் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள மின் கம்பங்கள் சாலையில் சரிந்து விழுந்தன. இதனால் மக்கள் மின்சாரம் இன்றி அவதிப்பட்டனர். மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.


சூறாவளித் தாக்குதலைத் தொடர்ந்து முக் கிய நகரங்கள் வெள்ளக்காடாய் மாறின. தலைநகர் மணிலாவிலிருந்து செல்லும் 180 விமானங்களின் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. படகு, பஸ் போக்குவ ரத்துச் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டன. இதனால், நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவிருந்த உள்ளூர் திருவிழாவைக் கொண்டாட சொந்த ஊர்களுக்குச் செல்ல முடியாமல் பொதுமக்கள் தவித்தனர்.

சூறாவளி தாக்குவதற்கு முன்னரே, ஒரு லட்சத்து 15 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுவிட்டனர். தாழ்வான பகுதிகளில் பலரது வீடுகளை வெள்ளம் சூழ்ந்தது. இதனால், அவர்கள் வீடுகளின் கூரைகள் மீது அமர்ந்திருந்தனர். அவர்களை மீட்பதற்காக இறப்பர் படகுகளின் உதவியையும், ஹெலிகொப்டர் உதவியையும் நகர பிதா ஏரியல் மக்கலஸ் நாடியுள்ளார்.

மணிலா அருகே கால்வாயைக் கடக்க முயன்ற ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியானார். அவரது ஒன்றரை வயது மகனை காணவில்லை. இது போல், வெள்ளத்தில் குடிசை வீட்டை இழந்த ஒருவரைக் காணவில்லை.

பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'மிரினே' சூறாவளி, பலம் இழந்து வியட்நாம் நோக்கி நகர்ந்தது. இது பிலிப்பைன்ஸைத் தாக்கிய நான்காவது சூறாவளியாகும்.

சாந்தா குரூஸ் நகரில் வெள்ளப்பெருக்கேற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான குடியிருப்பாளர்கள் வெள்ளத்தில் இறங்கி நகரைக் கடந்து கொண்டிருந்தார்கள். நகரைச் சூழவுள்ள வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மக்களை மீட்பதற்காகக்



கடற்படைப் படகுகள் அனுப்பி வைக்கப் பட்டன.

''வெள்ளத்தின் மட்டம் உயர்வடைந்துள்ளது. எங்கள் பகுதியில் இடுப்புவரை வெள்ளம் உயர்வடைந்துள்ளது. இன்னும் பல பகுதிகளில் கூரைகளின் உச்சிவரை உயர்ந்துள்ளது'' என உள்ளூர் அதிகாரி யோன் அல்பே, பி.பி.ஸி. செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

ஆறுகளை மேவி வெள்ளம் பிரவாகமெடுத்துப் பாய்கிறது. அதனால் ஆற்றங் கரைகளை ஒட் டிய பகுதிகளிலிருந்து 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடியிருப்பாளர்கள் வெளியேறியுள்ளார்கள். அல்பே மாகாணத்தில் மேயோன் எரிமலைக் குமுறல் ஏற்படலாம் என அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளார்கள்.

கரையோர கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. நதிகளில் படகுச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன ட்ரக்குகளில் நிவாரணப்பொருள்கள் அனுப்பப் படுகின்றன.

# ஆப்கான் ஜனாதிபதித் தேர்தலிலிருந்து எதிரணி வேட்பாளர் அப்துல்லா விலகல்

ஆப்கானிஸ்தானில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிட மாட்டார் என எதிரணி வேட்பாளர் அப்துல்லா நேற்று ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தார்.

''எதிர்வரும் 7 ஆம் திகதி இத்தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் நான் போட்டியிடமாட்டேன். இது நீதியும் நேர்மையும் கொண்டதாக இருக்கும் என்பதில் நம்பிக்கையில்லை'' என்றும் அவர் தம் ஆதரவாளர்கள் மத்தியில் குறிப்பிட்டார்.

''குளறுபடிகளையும், மோசடிகளையும் தடுக்கும்பொருட்டு நான் பல பரிந்துரைகளையும் செய்திருந்தேன். தற்போதைய தேர்தல் ஆணையாளர் நீக்கப்படவேண்டுமென்பதும் அவற்றில் ஒன்று. எனினும், அனைத்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டன'' என்றும் அப்துல்லா சுட்டிக்காட்டினார்.

இத்தேர்தலை பகிஷ்கரிக்குமாறு, உங்கள் ஆதரவாளர்களுக்கு கோரிக்கை விடுப்பீர்களா? என ஒரு நிருபர் கேள்வி எழுப்பினார். அதற்கவர் பதிலளிக்கையில், ''இதுவரை அது குறித்து நான் முடிவெடுக்கவில்லை'' என்றார்.

மற்றமொரு வேட்பாளரான ஹொமாயூன் அஸிப்பி கருத்து வெளியிடுகையில், '' அரசின் சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவே இயங்குகிறது. திட்டமிட்டப்படி எதிர்வரும் சனிக்கிழமை இத்தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்பதை தேர்தல் ஆணையமே முடிவெடுக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதியும் முக்கிய வேட்பாளருமான ஹமீத் கர்ஸாயின் தேர்தல் பிரசாரப் பேச்சாளர் வாஹீட் ஓமர் இது குறித்துக் குறிப்பிடுகையில், ''இந்தப் பந்தயத்திலிருந்து அப்துல்லா விலகிக்கொண்டமை துரதிஷ்டவசமானது. எனினும், திட்டமிட்டப்படி அவரின்றியே சனிக்கிழமை தேர்தல் நடைபெறும்'' என்றார்.

# ஒபாமா அரசின் பொருளாதாரச் சலுகை: 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலை

வாஷிங்டன், நவ. 02

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அரசால் நடப்பு வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்ட பொருளாதாரச் சலுகையின் மூலம் 6 லட்சத்து 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

''நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்தும் திட்டங்கள் மட்டுமின்றி கல்வி, சுகாதாரம், பசுமைத் தொழில்நுட்பம் ஆகிய துறைகள் மூலமாக அடுத்த ஆண்டில் 35 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க ஒபாமா அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது'' என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் அமெரிக்கப் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்காகவும், வேலையிழப்பை' தடுப்பதற்காகவும் ஒபாமா அரசின் சார்பில் 78 ஆயிரத்து 700 கோடி டொலர் பொருளாதாரச் சலுகை அளிக்கப்பட்டது.

இதன் காரணமாக வேலையிழப்பை எதிர்நோக்கி இருந்தவர்களும், வேலையிழந்தவர்களும் என மொத்தம் 6 லட்சத்து 40 ஆயிரம் அமெரிக்க மக்கள் வேலை பெற்றுள்ளனர் என ரொபர்ட் கிப்ஸ் தெரிவித்துள்ளார்.

## வட சீன பஸ் விபத்தில் 13 பேர்பலி; 40 பேர் காயம்

பீஜிங், நவ. 02

வட சீன யான் குவான் நகருக்கருகில் பயணிகள் பஸ்ஸொன்று பாதையை விட்டு விலகி பள்ளத்தாக்கில் தலைகீழாகப் புரண்டு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 13 பேர் பலியாயினர். 40 பேர் காயமடைந்தனர்.

இந்த பஸ், ஷான்சி பகுதியின் தலைநகரான ஹெபேயிலிருந்து தாய்வானை நோக்கிப் புறப்பட்டது. யான் குவான் நகருக்கருகில் இவ்விபத்து சம்பவித்தது.

இவ்விபத்தில் 10 பேர் அதே இடத்தில் உயிர் நீத்தனர். பலத்த காயங்களுடன் வைத்தியசாலைக்குக்கொண்ட செல்லப்பட்ட மூவர் வழியில் உயிரிழந்தனர். மற்றும் 40 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## பாக். வீதியோரக் குண்டுவெடிப்பில் 7 சிப்பாய்கள் பலி; 11 பேர் படுகாயம்

இஸ்லாமாபாத், நவ. 02

வட - மேற்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற வீதியோரக் குண்டுவெடிப்பில், துணைப் படையைச் சேர்ந்த ஏழு சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள். 11 சிப்பாய்கள் பலத்த காயமடைந்தார்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இச் சிப்பாய்களின் வாகனம், பழங்குடியின மக்கள் வாழும் ஹைபர் பிராந்தியத்தில் வீதியோரக் குண்டுவெடிப்பில் சிக்கியது. இதில் தூக்கி வீசப்பட்ட வாகனம் சின்னாபின்னமாக சிதறியுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

கிழக்கு ஹைபரின் முக்கிய நகரான லேண்டி கொட்டாவை நோக்கி இவ்வாகனம் சென்றுகொண்டிருந்தபோது குண்டு வெடிப்பில் சிக்கியுள்ளது.

தீவிரவாதிகள் இக்குண்டை அவ்விடத்தில் மறைத்துவைத்திருந்து, இராணுவ வாகனம் அண்மியதும் தன்னியக்கக் கருவியால் குண்டை வெடிக்க வைத்துள்ளார்கள் என எல்லைமுனைப் படைப் பேச்சாளரொருவர் ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, ஒரக்ஸாய் என்னுமிடத்தில் பாகிஸ்தான் போர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் 13 தீவிரவாதிகள் பலியாகியுள்ளார்கள் என பாதுகாப்பு வட்டாரம் குறிப்பிட்டது.

# ஈராக் மீதான படையெடுப்புக்கு அமெ. மட்டும் முடிவெடுக்கவில்லை

## முன்னாள் ஜனாதிபதி புஷ் தகவல்

புதுடில்லி, நவ.02

''ஈராக்கிற்கு இராணுவம் அனுப்பிவைக்கப்பட்டமை சரியான நடவடிக்கையே ஆகும். ஈராக் மீதான படையெடுப்புக்கு அமெரிக்கா மாத்திரம் தன்னிச்சையாக முடிவெடுக்கவில்லை. இந்த முடிவை 41 நாடுகள் ஏற்றுக் கொண்டன'' என அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், புதுடில்லியில் சனிக்கிழமை நிகழ்ந்த மாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்தார். 'ஹிந்துஸ்தான் ரைம்ஸ்' இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

2003 ஆம் வருட மார்ச் மாதம் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தது. இதற்கு அப்போது ஜனாதிபதியாகவிருந்த புஷ்ஷே உத்தரவிட்டிருந்தார். இது தொடர்பாக புஷ் அன்றைய தமது நிலைப்பாட்டை இம் மாநாட்டில் மிக விரிவாக விளக்கினார்.

''நியூயோர்க் நகரில் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பின்னர் ஈராக்கின் சர்வாதிகாரி சதாம் ஹுஸைனின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர இதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. இத்தகைய நடவடிக்கைக்குப் பின்னர் பிற நாடுகளில் அமைதி ஏற்பட்டது. அத்துடன் ஈராக்கின் நிலைமையும் மேம்பாடடையத் தொடங்கியது.'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''கொடுங்கோலனைப் போல சர்வாதிகார ஆட்சி புரிந்த சதாம் ஹுஸைன், அமெரிக்காவுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்தார். இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னர் அவரை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டது'' என்றும் அவ்வர் தெரிவித்துக்கொண்டார்.

''ஈராக்கின் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஹுஸைனை நீக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமானது. காரணம் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருந்தது. குறிப்பாக அணு ஆயுதங்கள் ஈராக் வசம் இருந்தன. அணு ஆயுதங்கள் குறித்துப் பார்வையிட சர்வதேச அணுசக்தி பார்வையாளர்களை ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி அனுமதிக்கவில்லை'' என்றும் புஷ் குறிப்பிட்டார்.

''ஈராக்கில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவு முந்தைய அமெரிக்க ஜனாதிபதியில் கிளின்ரன் நிர்வாகத்தில் எடுக்கப்பட்டது. அமைதியான முறையில் சதாமை ஆட்சியிலிருந்து அகற்றவேண்டும் என்றே விரும்பினேன். ஆனால் இராணுவத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலையை அவரே ஏற்படுத்திவிட்டார். இராணுவ நடவடிக்கை மேற்கொண்டதற்காக வருந்துகிறேன். ஆனால் அதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை'' என்றும் புஷ் கூறினார்.

''ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை, ஈராக் மீது 17 தீர்மானங்களைக் கொண்டு வந்தது. இதில் ஹுஸைனிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பதும் ஒன்று. ஆனால் இவற்றில் எதையும் ஹுஸைன் ஏற்கவுமில்லை. ஒத்துழைப்பு அளிக்கவுமில்லை. அமெரிக்க இராணுவ நடவடிக்கையால் ஈராக் மக்கள் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுபட்டுள்ளனர். அத்துடன் ஜனநாயக முறையில் ஜனாதிபதியைத் தேர்வு செய்யவும் அவர்களுக்கு வழி ஏற்பட்டுள்ளது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''ஈராக் மீது படையெடுப்பு நடத்தவேண்டும் என்ற முடிவை அமெரிக்கா மட்டுமே எடுக்கவில்லை. 41 நாடுகள் இந்த முடிவை ஏற்றுக்கொண்டன. இராணுவ நடவடிக்கை எடுத்தமையால் முஸ்லிம் நாடுகள் ஒரு அணியாகவும் இதர நாடுகள் தனி அணியாகவும் பிளவுபட்டன எனக் கூற முடியாது. அமெரிக்க நடவடிக்கைக்கு முன்னரே 10 ஆயிரம் ஈராக்கியர்கள் ஆப்கானிஸ்தானில் தீவிரவாத பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்'' என்றும் அவர் விளக்கினார்.

''அமெரிக்காவின் படையெடுப்பை, முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடுத்த போர் என்று கூறமுடியாது. அவர்கள் என்ன செய்தாலும் அதை அனுமதிக்க வேண்டும் என்பதையும் அதேசமயம், அவர்களுக்குக் கோபமேற்படுத்தும் செயல் எதையும் நாம் செய்யக்கூடாது என்பதையும் எவ்விதம் ஏற்க முடியும்? அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தும்வரை காத்திருந்துவிட்டு பின்னர் அவர்கள் போர் தொடுத்திருக்கலாம் என்று கூறுவதை ஏற்க முடியாது. நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டியது ஒரு ஜனாதிபதியின் தலையாய கடமையாகும்'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

''இந்தியாவுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும். இதற்கு அமெரிக்கா ஆதரவு தெரிவிக்கும்'' என்றும் புஷ் குறிப்பிட்டார்.

உலக அரங்கில்

# மெக்ஸிக்கோ பண்ணையில் 15 பேர் சுட்டுக்கொலை!

மெக்ஸிக்கோவிலுள்ள பண்ணை ஒன்றில் சுமார் 15 பேர் பரிதாபமாக சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மெக்ஸிக்கோவின் வடக்குப் பகுதியிலேயே இந்தத் துரதிஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படுகொலை செய்யப்பட்டவர்களில், மிக முக்கியமான தொழிற்சங்கத் தலைவர் ஒருவரும் அடங்குவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல்காரர்களால் நடத்தப்படும் வெறித்தாக்குதலைப் போன்றதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் [illegible] எனினும், இந்தத் தாக்குதல் [illegible] தொடர்பாக இதுவரையில் சரியான தகவல்கள் வெளியிடப்படவில்லை.

2006 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பான மோதல்களில் மெக்ஸிக்கோவில் சுமார் 15 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தும்பொருட்டு, நாடு முழுவதும் சுமார் 45 ஆயிரம் படைச் சிப்பாய்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகர்களால் விவசாயிகளும், பண்ணையாளர்களும் அதிகளவில் தாக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளிடமிருந்து ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் மாவோஸ்ட்களுக்கு!

## ஆந்திர டி.ஜி.பி. அதிர்ச்சித் தகவல்

சென்னை, நவ. 02


இந்தியாவில் உள்ள மாவோயிஸ்ட்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு உண்டு என்றும், தங்களின் வன்முறைச் செயற்றிட்டங்களை அமுல்படுத்த மாவோயிஸ்ட்கள், விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெறுகின்றனர் என்றும் ஆந்திர மாநில டி.ஜி.பி. கிரிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விடுதலைப் புலிகள், இங்குள்ள மாவோயிஸ்ட்களுக்கு உதவி செய்கின்றனர் என எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. மாவோயிஸ்ட்களுக்கு ஆயுத உதவி மற்றும் பயிற்சி போன்றவற்றை விடுதலைப் புலிகள் அளிக்கின்றனர். இந்தியாவின் மத்திய பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில், மாவோயிஸ்ட்கள் மற்றும் விடுதலைப் புலிகள் இணைந்து கூட்டுப்பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் நடந்தன என புலனாய்வுத்துறையினரும் எச்சரித்துள்ளனர்.

புலனாய்வுத்துறை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில், கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சட்டீஸ்கர் மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ள, 'ஒப்ரேஷன் கிரீன் ஹன்ட்' என்ற தாக்குதலுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மாவோயிஸ்ட்கள், கெரில்லா போரில் தேர்ச்சி பெற்ற விடுதலைப் புலிகளின் உதவியைக் கோரலாம் என நம்பப்படுகிறது.

ஆந்திர மாநிலம் முன்னர் மாவோயிஸ்ட்களின் கோட்டையாக இருந்தது. அந்த நிலையை அவர்கள் திரும்பப் பெற முடியாது. சட்டீஸ்கர், பிற மாநிலங்களில், மாவோயிஸ்ட்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடத்தப்படுவதால், அவர்கள் ஆந்திராவிற்குள் ஊடுருவும் வாய்ப்புள்ளதால், எல்லையில் உள்ள பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர். கடலோரப் பகுதிகளில் புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு அப்பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாவோயிஸ்ட்டுகள் மீண்டும் இங்கு செயற்படுவதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார்.



திருப்பதி ஏழுமலையான் கோயிலில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமய அனுஷ்டானத்தில் பங்கு கொண்ட வேளையில்...

## மாவோயிஸ்ட் குறித்து அமைச்சரவையில் நிலவும் கருத்து வேறுபாட்டைத் தீர்க்குக

### பிரகாஷ் காரத் வலியுறுத்து

டில்லி, நவ. 02

மாவோயிஸ்ட்கள் விவகாரத்தில் மத்திய அமைச்சர்களிடையே கருத்தொற்றுமை இல்லை - என்று மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாவோயிஸ்டுகள் குறித்து அமைச்சரவையிலுள்ள கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகளை உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் முதலில் தீர்க்க வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து டில்லியில் கடந்த சனிக்கிழமை பிரகாஷ் காரத் மேலும் கூறியவை வருமாறு -

மாவோயிஸ்டுகள் தொடர்பாக மார்க்சிஸ்ட் கட்சி மீது சம்பந்தமில்லாத குற்றச்சாட்டுகளை சிதம்பரம் கூறக்கூடாது. மாவோயிஸ்டுகள் குறித்து மத்திய அமைச்சரவையிலேயே ஒருமித்த கருத்து இல்லை.

லால்கரில் மாவோயிஸ்ட்களுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை குறித்து ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி தனது வருத்தத்தை தெரிவித்துள்ளார். மாவோயிஸ்ட்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள மத்திய துணை இராணுவப்படையினரை திரும்பப் பெற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். மாவோயிஸ்ட்களுக்கு அவர் தொடர்ந்து ஆதரவும் அளித்து வருகிறார்.

அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர், ராஜ்தானி எக்ஸ்பிரஸ் நக்ஸல்களால் தடுத்து நிறுத்தப்படும் விடயம் தங்களுக்கு முன்னதாகவே தெரியும் என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, மாவோயிஸ்ட்கள் பிரச்சினை குறித்து அமைச்சரவையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் வழியை சிதம்பரம் தேடவேண்டும். மார்க்சிஸ்ட் கட்சி மீது வீண் பழிகளைச் சுமத்தக் கூடாது - என்றுள்ளது.

இதேவேளை, மாவோயிஸ்ட்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்திய காரத், மாவோயிஸ்ட்கள் வன்முறையைக் கைவிட்டு அரசியல் ரீதியாகப் போராட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**இந்தியச் செய்திகள்**

## இந்தியாவில் வன்முறையை ஒருபோதும் அனுமதியோம் என்கின்றார் ப.சிதம்பரம்!

மதுரை, நவ. 02

இந்தியாவில் வன்முறையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் - என்று உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

காங்கிரஸ் கட்சி சார்பில், முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 25 ஆவது நினைவு நாள் கூட்டம் மதுரையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அதில் அவர் பேசியவை வருமாறு -:

பயங்கரவாதத்துக்கு கடந்த 50 ஆண்டுகளில் மகாத்மாகாந்தி, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி என 3 பெரும் தலைவர்களை இழந்த ஒரே இயக்கமாக காங்கிரஸ் உள்ளது.

இந்தியாவில் நக்ஸலைட் இயக்கம் வளர்ந்து வருகிறது. காங்கிரஸ், பா.ஜ.க. ஆட்சிகளில் இந்த இயக்கத்தை குறைத்து மதிப்பிட்டதன் விளைவுதான் இது. இதனால், இந்த இயக்கங்கள் சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் விஷம் போல் பரவியுள்ளன.

ஆயுதம் ஏந்திய புரட்சி மூலம் மைய அதிகாரத்தைக் கைப்பற்றுவது எனும் இவர்களது திட்டம் ஒருபோதும் நிறைவேறாது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான ஆயுதம் என்பது வாக்குச்சீட்டுதான். இதைவிட வலிமையான ஆயுதம் வேறு கிடையாது. வாக்குரிமை ஆயுதத்தை நம்புபவர்கள்தான் இந்தியர்கள். இந்தியாவில் ஆயுதம் ஏந்திய புரட்சிக்கு ஒருபோதும் இடம் கிடையாது - என்றார்.

## இஸ்ரோ தலைவராக ராதாகிருஷ்ணன்

திருவனந்தபுரம், நவ. 02

இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (இஸ்ரோ) தலைவராக மூத்த விஞ்ஞானி கே.ராதாகிருஷ்ணன் (வயது - 60) நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

விக்ரம் சாராபாய் விண் ஆய்வு மையத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்த இவர், முறைப்படி மாதவன் நாயரிடம் இருந்து இஸ்ரோ தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.



'என்னிடம் பெரும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. கடும் உழைப்பு மற்றும் இஸ்ரோவின் அனைத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்புடன் நமது இலட்சியங்களை அடைவோம் என்று உறுதியாக நம்புகிறேன்' என்று பதவியேற்ற பின்னர் ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சந்திராயன் -1 உள்ளிட்ட பல்வேறு விண்வெளி ஆய்வுத் திட்டங்களில் பங்கு கொண்ட அவர் 35 ஆண்டுகளாக இஸ்ரோவில் பணியாற்றி வருகிறார்.

## ராஜஸ்தானில் எண்ணெய்க் கிடங்குகளில் தீ: 9 சடலங்கள் மீட்பு; ரூ. 500 கோடி நஷ்டம்!

ஜெய்ப்பூர், நவ. 02

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் அருகே சீதாபுரம் தொழில் பேட்டையில் இந்தியன் ஒயில் நிறுவனத்திற்குச் சொந்தமான பெற்றோல் கிடங்குகளில் தொடர்ந்து 3 ஆவது நாளாகவும் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. இத் தீ விபத்தில் உயிரிழந்தவர்களில் மேலும் 3 பேரின் உடல்கள் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டன.

இதையடுத்து இந்த தீ விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. தீ விபத்து ஏற்பட்ட எண்ணெய் கிடங்கில் உள்ள பெற்றோல், டீசல் மற்றும் மண்எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளின் மொத்த எண்ணிக்கையில் 11 கிடங்குகளில் தீ பரவியது. இக்கிடங்குகளில் தொடர்ந்து 3 ஆவது நாளாக தீ கொழுந்துவிட்டு எரிகிறது.

இவற்றில் 5 கிடங்குகளில் தீ தானாகவே அணைந்துள்ளது. 3 பெற்றோல் கிடங்குகள், 3 டீசல் கிடங்குகள் உள்ளிட்ட 6 கிடங்குகளில் தீ சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இதனால் எண்ணெய் கிடங்குகளில் உள்ள எரிபொருளின் அளவு கணிசமாக குறைந்து கொண்டே வருகிறது.

தீ விபத்து ஏற்பட்ட இடத்தை சுற்றியுள்ள 200இற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் சேதமடைந்துள்ளன. ரயில் மற்றும் வீதிப் போக்குவரத்து தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது. கொள்கலனில் இருந்து குழாய்க்கு பெற்றோலைத் திறந்துவிட்டபோது கசிவு ஏற்பட்டதால் தீ விபத்து ஏற்பட்டது எனக் கூறப்பட்டாலும், உண்மையான காரணம் வேறாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்தால் எண்ணெய் நிறுவனத்துக்கு 500 கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறினர். விபத்து பற்றி விசாரணை நடப்பதற்காக ஐந்து நிபுணர்கள் கொண்ட குழுவை பெற்றோலிய அமைச்சகம் நியமித்துள்ளது.



பெற்றோல் கிடங்குகளில் தொடர்ந்து 3 ஆவது நாளாகவும் தீ கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தபோது....

## 3 படகுகளுடன் 17 இலங்கை மீனவர் சென்னையிலிருந்து நாடுதிரும்பினர்

இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 17 பேர் நேற்றுமுன்தினம் சென்னையில் இருந்து 3 படகுகளில் சொந்த நாடு திரும்பினர்.

எல்லை தாண்டிவந்து தமிழக கடல்பகுதியில் மீன்பிடித்தனர் என இலங்கை மீனவர்கள் 50 பேர் கடந்த மாதம் இந்திய கடலோர காவல்படையால் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து, இவர்கள் அனைவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பது தொடர்பாக, சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள், இலங்கை மற்றும் இந்திய அரசுடன் பேச்சு மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதலோடு, கைது செய்யப்பட்ட மீனவர்களை எச்சரித்து அனுப்ப முடிவு செய்யப்பட்டது. அதன்படி, முதல் கட்டமாக நேற்றுமுன்தினம் 17 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் மாத்தறையைச் சேர்ந்தவர்கள்.

விடுதலை செய்யப்பட்ட 17 இலங்கை மீனவர்களும், சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 3 படகுகளில் நேற்றுமுன்தினம் மாலை இலங்கை புறப்பட்டனர். அவர்களை தமிழகக் கடல் எல்லையில் பத்திரமாகக் கொண்டு சென்று விடுவதற்காக கடலோர காவல் படையினர் தனிப் படகில் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப்பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.2

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக யாழ்.செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் விண்ணப்பித்து இதுவரை எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றாதவர்களும், ஏற்கனவே இதற்கென விண்ணப்பித்து எழுத்துப்பரீட்சையில் சித்தியடையாதவர்களும் தமக்கான எழுத்துப்பரீட்சை நேர அட்டவணையை அலுவலக நாள்களில் யாழ்.செயலக கிளையில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

## காங்கேசன்துறை வீதியில் காவலரண்கள் நீக்கம்

யாழ்ப்பாணம், நவ.02

காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள காவலரண்கள், பாதுகாப்புத் தடைகளை இராணுவத்தினர் அகற்றி வருகின்றார்கள்.

மல்லாகம் வங்களாவடி, மல்லாகம் மயூரன் மன்றம், சுன்னாகம் முகாம், சுன்னாகம் சந்தி, கோண்டாவில் அறிவியற்கழகம் ஆகிய இடங்களில் இருந்த வீதித் தடைகள் உட்பட வீதியில் அமைக்கப்பட்டிருந்த காவல் நிலையங்களும் அகற்றப்பட்டுள்ளன.

கடந்த வாரம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கிராம அலுவலர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது இத்தகைய வீதித்தடைகளை அகற்ற கிராம அலுவலர்களிடம் விவரம் கோரப்பட்டிருந்தது. (1-86)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.02

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வன் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கான மின்னல் வேக ஒருநாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று காலை 8 மணியளவில் ஆரம்பமாகின்றது.

யாழ். மத்திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் இடம்பெறும். இப்போட்டிகளில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தெரிவாகும் அணிகளுக்கு இடையிலான போட்டி இன்று இரவு 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிகளில் 12 கழகங்கள் பங்கு பற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (1-23)

# ஐ.தே.க. கூட்டில் இணைவதா? மு.கா. இன்று முடிவெடுக்கும்!

கொழும்பு, நவ.02

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் உருவாக்கப்படவுள்ள பொதுக் கூட்டமைப்பில் இணைவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று இறுதி முடிவெடுக்கும் என்று கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதி உயர் பீட உறுப்பினர்களுக்கும், எதிர்க் கட்சிகளின் முக்கிய தலைவர்களுக்கும் இடையில் இன்று விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னரே இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் என்று அக்கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பில் இணைவதற்காக சில விடயங்கள் தொடர்பில் சரியான தெளிவுபடுத்தல்கள் இன்னமும் கிடைக்கப்பெறவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் மேலும் தெரிவித்துள்ளது.

சிறுபான்மைக் கட்சி என்ற ரீதியில் தமது உரிமைகள் சரியான முறையில் உறுதிப்படுத்தப்படும் வரை கூட்டணியில் இணைந்து கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன என்று கட்சி வட்டாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அரசுடன் இணைந்து கொள்வது தொடர்பிலோ அல்லது ஏனைய சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்து கொள்வது தொடர்பிலோ இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.தலைமையிலான இப் பொதுக் கூட்டமைப்பு நாளை செவ்வாய்க் கிழமை உதயமாகும் என்று ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-சி)

## சாவச்சேரியில் இன்று வைத்தியசாலை திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ.02

சாவச்சேரியில் 'நியூமெடி கெயர்' வைத்தியசாலை திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ், சாவச்சேரி பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீநிவாசன் ஆகியோர் இணைந்து இந்த வைத்தியசாலையைத் திறந்து வைப்பர். (1)

# கோண்டாவில் கிழக்கில் வாள் வெட்டு மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், நவ.02

கோண்டாவில் கிழக்கு அரசடிச் சந்தியில் நேற்றிரவு 7.30 மணியளவில் வாள் வெட்டுக்கு இலக்காகிக் கையில் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளொன்றில் வந்த மூவர் அவரை வெட்டிவிட்டு அவரது மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இச்சம்பவத்தில் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த நவரட்ணம் றஜீவன் (வயது 19) என்பவரே கையில் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (6-49)

# நாளை முதல் கப்பல் சேவை இடம்பெறும் திகதிகள் செயலகத்தால் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.2

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு நாளைமுதல் கப்பல் சேவை இடம்பெறும் திகதிகளை அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

3 ஆம், 8ஆம், 13 ஆம், 18 ஆம், 23 ஆம், 28 ஆம், திகதிகளில் கப்பல் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனத் தெரிவித்துள்ளார்.

மேற்படி தினங்களில் பயணத்தை மேற்கொள்பவர்கள் அன்று காலை 7 மணிக்கு யாழ்.ரயில் நிலையத்திற்கு சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்வதோடு கப்பல், விமானம் மூலம் யாழ்.மாவட்டத்துக்கு பயணத்தை மேற்கொள்பவர்கள் அவ்வழியினூடாகவே யாழ். மாவட்டத்தில் இருந்து பயணங்களை மேற்கொள்ள முடியும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (1)

## வேம்படி வீதியில் நடந்த சைக்கிள் விபத்தில் தபால் ஊழியர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.02

யாழ்.வேம்படிப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் தபால் விநியோகம் செய்யும் ஊழியர் ஒருவர் மரணமானார்.

அராலி தெற்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மவுனகுரு விஜயதெய்வேந்திரன் (வயது - 52) என்பவரே மரணமானவர் ஆவார்.

யாழ்.தபாலக ஊழியரான இவர் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வேம்படி வீதியில் தபால் விநியோகத்தில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது அவர் வீதியைக் குறுக்காகக் கடக்க முயன்ற வேளை எதிராக வந்த சைக்கிள்கள் மோதுண்டதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மயக்க நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை மரணமானார். (அ- 1)

## யாழ்.தட்டாதெருச் சந்தியில் போக்குவரத்து நெருக்கடி

வண்ணை ,நவ.02

யாழ்.தட்டாதெருச் சந்தியில் வடக்குப் பக்கமாக கே.கே.எஸ். வீதியில் அதிக போக்குவரத்து நடைபெறும் வேளைகளில் விபத்துக்களில் மக்கள் சிக்கக்கூடியதான நெருக்கடி நிலைதோன்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான காரணம் அப்பகுதியில் வர்த்தக நிலையங்களின் பொருள்கள் பரவப்பட்டுள்ளதே எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கட்டடப் பொருள் விற்பனை மற்றும் மரக்கன்றுகள் விற்பனை நிலையங்களின் பொருள்கள் வீதி ஓரங்களில் பரவி வைக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு குறுணிக்கற்கள், மணல் ஆகியவற்றுடன் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளும் அடைவுகளின் எல்லையைத் தாண்டி வீதி ஓரங்களில் குமிக்கப்பட்டுள்ளன.

இதனால் போக்குவரத்தில் மக்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இதற்கான விடிவை யாழ். மாநகரசபை அதிகாரிகள் தலையிட்டு தட்டாதெரு சந்தியில் ஏற்பட்டு வருகின்ற நெருக்கடி நிலையை அகற்ற மக்களுக்கு உதவ வேண்டும். என்று தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியிலேயே பஸ்தரிப்பு இடமும் அமைந்துள்ளது. பஸ்ஸிற்காகக் காத்து நிற்போரும் மிகுந்த அவலத்துக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.(அ - 160)

## கோத்தபாயவையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவின் மனித உரிமை மீறல் கள் தொடர்பாக சாட்சியமளிக்குமாறு அமெரிக்க அதிகாரிகள் தன்னைக் கேட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க அதிகாரிகள் இருவர் தனது உறவினர் ஒருவரின் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர் என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் குறித்து சரத்பொன்சேகா இலங்கையில் உள்ள முக்கிய அதிகாரிகள் சிலருக்குத் தெரியப்படுத்தியுள்ளார் என இணையத்தளச் செய்திச்சேவை ஒன்று தெரிவித்தது.

''ஒக்ரோபர் 28 ஆம் திகதி மைக்கல் டரன்ரினோ என்னும் நபர் பாதுகாப்பு அமைச்சரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக என்னை விசாரணை செய்ய வேண்டுமெனக் கோரினார். நீங்கள் ஜனாதிபதியைக் குறிப்பிடுகிறீர்களா? அவரே எமது பாதுகாப்பு அமைச்சர் என நான் தெரிவித்தேன். அதற்கு அவர், இல்லை கோத்தபாய ராஜபக்ஷ குறித்துக் குறிப்பிடுகிறோம் எனத் தெரிவித்தார். பின்னர் நான் அவர் எமது பாதுகாப்பு அமைச்சர் அல்லர்,செயலாளர் எனக் குறிப்பிட்டேன். அதற்கு அந்த நபர் பின்னர் தொடர்பு கொள்வார் எனக் கூறினார்'' என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, இதுகுறித்து அறிந்ததும் இலங்கை அரசு உடனடியாகத் தனது எதிர்ப்பைத் தெரிவித்ததுடன் சரத் பொன்சேகாவை நாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைளை இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் மேற்கொண்டுள்ளது.- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# மிருசுவில் முகாமைச் சேர்ந்த 10 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தனர்

யாழ்ப்பாணம், நவ.02

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் இந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்கள் 10 பேர் சித்தியடைந்துள்ளனர்.

இந்தப்பாடசாலை 2006 ஆம் ஆண்டு முதல் இடம்பெயர்ந்து தற்காலிக கொட்டகைகளில் மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களையும் நிரந்தர மாணவர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் இந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் நிரந்தர மாணவர்கள் 6 பேரும் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த 41 மாணவர்களுமாக 47 பேர் தோற்றினர்.

இதில் வித்தியாலயத்தைச் சேர்ந்த இராஜகுமார் அனற் சுதர்சிகா 147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தார்.

நலன்புரி நிலைய மாணவர்களான யஸ்ரின் குலாஸ் ஆன் பிரசன்னா (141), மனோகரன் மதனிகா (137), அன்ரனி கிளிரஸ் வினஸ் ஆன் குரூஸ் (131), அருந்தவராஜா கஜோதன் (127), சிதம்பரம் விஜய் (126), யாக்கோபு செல்வகுமார் பிறின்சிகா (126), மகேந்திரன் நாகசுதர்சன் (116), விமலகுமாரன் அஸ்வின் (114), குமாரகுலசிங்கம் நிதுஷா (111) தில்லையம் பலம் செந்தூரன் (111), ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (10)

## யுத்தகால நிகழ்வுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது. இது தொடர்பாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

சரத்பொன்சேகா விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றமையைத் தொடர்ந்துயுத்தக் குற்ற அறிக்கை தொடர்பாகத் தனக்குள்ள சட்ட அதிகாரத்தை அமெரிக்கா வலியுறுத்தத் தொடங்கியுள்ளதா என்ற அச்சம் இலங்கை அரச வட்டாரங்களில் தோன்றியுள்ளது.

அமெரிக்காவின் ஒக்ல ஹோமா நகரில் உள்ள தூல்ஷா என்ற இடத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் சரத் பொன்சேகாவைச் சந்திக்கவுள்ளனர் என இலங்கை அரசின் உயர் மட்டத்திற்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சரத் பொன்சேகாவின் வீடு ஒக்ல ஹோமாவிலேயே உள்ளது.

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளின் சட்ட ஆலோசகராக விளங்கிய பிரெட் பீல்டிங்கின் சட்ட ஆலோசனையை சரத்பொன்சேகா நாடியுள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ரிச்சட் நிக்ஷன், ரொனால்ட் றீகன், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோருக்கான வெள்ளை மாளிகை சட்ட ஆலோசராக விளங்கிய பிரெட் பீல்டிங், ''சரத் பொன்சேகா உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். அவர்களுடைய கேள்விகள் அனைத்திற்கும் உண்மையான பதிலை வழங்கவேண்டும்'' என அறிவுறுத்தியுள்ளார்.

**இலங்கை அரசு சட்ட ஆலோசனை [illegible]**

இதேவேளை, [illegible] டிக்கை குறித்து அறிந்த அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய பட்டன் பொக்ஸ் எனும் சட்ட நிறுவனத்தின் உதவியை நாடியுள்ளார்.

இலங்கை அரசு குறிப்பிட்ட நிறுவனத்தைதையே தனது பிரசார நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

சரத்பொன்சேகாவும் பட்டன் பொக்ஸின் சட்டத்தரணிகளைப் பயன்படுத்த இணங்கியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா இராஜதந்திர சிறப்புரிமையை பயன்படுத்தி அமெரிக்க அதிகாரிகளின் அழைப்பை நிராகரிப்பாரா என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

இது இவ்வாறிருக்க, இந்த விடயத்தில் உதவியை நாடி அமெரிக்காவின் தென்னாசிய விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரொபெர்ட் ஓ பிளேக்கிற்கு இலங்கை தூதுவர் கடிதம் ஒன்றை [illegible]ள்ளார்.

சரத் பொன்சேகா அமெரிக்காவின் கீறின் கார்ட்டிற்கு உரித்தானவர். இதனால் சிறப்புரிமைக்கு உட்படாதவர் என்ற அடிப் படையில் அவரது இராஜதந்திர சிறப்புரிமைக் கோரிக்கையை அமெரிக்கா நிராகரிக்கலாம் என்ற அச்சமும் காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சக யுத்தக் குற்ற மீறல் குற்றச்சாட்டுகளுக்காக சரத் பொன்சேகாவை விசாரணை செய்வதற்காக நீதிமன்றத்தின் உதவியை நாடினால் என்ன செய்வது என்ற கேள்வியும் அரச வட்டாரங்களில் எழுந்துள்ளது.

அமெரிக்க பிரஜைகளும், பிரஜைகளாக விரும்புபவர்களும் அமெரிக்க சட்டங்களுக்கு கட்டுப்பட்டவர்கள் என்பதும் இதன் காரணமாக அவர்கள் அந்த நாட்டு சட்ட அதிகாரிகளின் விசாரணைக்கு உட்பட வேண்டுமென்பதும் முக்கியமானது.

இதேவேளை, சரத்பொன்சேகா றொபேர்ட் ஓ பிளேக்கை சந்திப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA.

# தரம் குறைந்த மாவில் பாண் உற்பத்தியா?

யாழ்ப்பாணம், நவ.02

குடாநாட்டில் பல இடங்களிலும் குறிப்பாக நகரப் பகுதியில் விற்பனையாகும் பாண் தரம் குறைந்து காணப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அவை பழுதடைந்து மணம் வீசுவதாகவும் மக்கள் முறைப்படுகின்றனர்.

இது குறித்து பாண் உற்பத்தி நிலைய உரிமையாளர்களிடம் கேட்டால் தமக்கு வழங்கப்படும் கோதுமை மா தரம் குறைவாக இருப்பதே காரணம் என்று தெரிவிக்கின்றனர். வண்டுகள், புழுக்கள் காரணமாகவும் பாண் பழுதடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாணில் புழு மற்றும் வண்டு காணப்படுவதாகக் கிடைத்த புகாரைத் தொடர்ந்து யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்ட சோதனையை அடுத்து நகரில் உள்ள பாண் உற்பத்தி நிலையம் ஒன்று நீதி மன்ற உத்தரவின் பெயரில் மூடப்பட்டுள்ளது. நாளை மறு தினம் வரை குறிப்பிட்ட பாண் உற்பத்தி நிலையத்தில் பாண் உற்பத்தியை நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-1)

# நல்லூரில் இன்று மணிமண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.02

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம் இன்று முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்பட விருக்கிறது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மண்டபத்தைத் திறந்து வைக்கவிருக்கிறார். (1)

## துணுக்காயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்ற யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைவிட வன்னிப்பிரதேசத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே முதன்முறையாக மீள்குடியமர்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரினால் முழுமையாக அழிந்து ஆளரவமற்ற பிரதேசமாகவுள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேறுகின்ற மக்கள் தமது வாழ்க்கையை சூனியத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இங்கு நடைபெற்று வருகின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து நேரில் கண்டறிவதற்காக புலம் பெயர்ந்தோர் குழுவின் பிரதிநிதிகள் வருகை தருவது முக்கியத்துவம் மிக்க ஒரு விடயமாகவே கருதப்படுகின்றது.

மீள்குடியேற்றம் நடைபெற்று வருகின்ற துணுக்காய் பிரதேசத்திற்கு நேற்று உலக வங்கி அதிகாரிகள் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிந்துள்ளார்கள்.

மீள்குடியேற்றத்திற்காக நடைபெற்று வருகின்ற உட்கட்டமைப்பு நிர்மாண பணிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் என்பன குறித்து, உலக வங்கி அதிகாரிகள் திருப்தி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

# ஊசி மருந்துக் குப்பிகளில் கழிவுப் பொருள்; விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

கொழும்பு,நவ.02

ஊசி மருந்துக்குப்பிகள் மற்றும் செலேன் போத்தல்களில் காணப்பட்ட கழிவுப் பொருள்கள் தொடர்பில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வறிக்கை இன்று சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவே இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது என சுகாதார அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர்கள் இருவரும், தேசிய வைத்தியசாலையின் வைத்திய குழுவும், தேசிய மருந்துப் பொருள் மற்றும் வைத்திய ஆய்வுகள் குழுவொன்றும் இந்த ஊசி மருந்துகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டிருந்தன.

# வடக்கின் வசந்தம் மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.02

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறி ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார். (6)

## சம்பள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 11 ஆம் திகதிமுதல் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் குதிக்க உள்ளன.

சம்பள உய்ர்வுக் கோரிக்கை சம்பந்தமாக அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுகள் தோல்வி அடைந்த நிலையிலேயே இத் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிக்கத் தீர்மானித்துள்ளன.

சம்பள உயர்வுக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்வரை இப் போராட்டம் தொடரும் என்று இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்க முன்னணியின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார். கொழும்பு விகாரமகா தேவிப் பூங்காவில் நேற்று இடம்பெற்ற தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார். (அ-சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லலித் வீரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அடங்கிய குழுவே மீண்டும் இந்தியா செல்லவுள்ளது.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் கடந்த ஜூன் மாதம் இக்குழுவினர் இந்தியா சென்றிருந்தனர்.

தற்போது இரண்டாவது சுற்று உயர் மட்டப் பேச்சுகளுக்காக இக்குழுவினர் புதுடில்லி செல்லவுள்ளனர்.

இந்த விஜயத்திற்கான திகதியைத் தீர்மானிப்பது குறித்த பேச்சுக்கள் இரு நாடுகள் மத்தியிலும் தற்போது இடம்பெறுகின்றன.

இலங்கைக் குழுவினர் தமது விஜயத்தின் போது இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே. நாராயணன், வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் உட்பட முக்கிய அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளனர்.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த எடுக்கப்பட்ட முயற்சிகள், அரசியல் தீர்வு நடைமுறைகள் உட்பட பல விடயங்கள் பற்றி இலங்கை குழுவினர் தெளிவுபடுத்துவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-சி)

## 2,818 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டனர்.

இவர்களில் பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 217 குடும்பங்களைச் சேர்ந்த 617 பேர் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திலும் சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த 627 குடும்பங்களைச் சேர்ந்த 2,201 பேர் சாவகச்சேரி கலாசார மண்டபத்திலும் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் கே.கணேஷ், திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். சொந்த இடங்களுக்குச் சென்ற மக்களுக்கு உடனடித் தேவைகளுக்கான உதவு தொகையாக ரூ.5,000 வழங்கப்பட்டது.

இதேவேளை, இன்று சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட 673 பேர் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர் என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.(அ-6)

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க் குற்றங்கள் குறித்த அறிக்கையை வைத்து சரத்பொன்சேகா மீதான விசாரணை நடத்தப்படலாம் என்ற அச்சம் அரச உயர்வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் சரத்பொன்சேகா மீதான விசாரணை குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அறிக்கை, வன்னியில் போர் உச்சக்கட்டத்தை அடைந்த கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை நடைபெற்ற போர்க் குற்றங்களை வரிசைப்படுத்தி உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு சிறுவர்களைத் தமது படைக்குச் சேர்த்ததாகவும், அரச படைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்ததாகவும் தம்மிடம் சரண் அடைந்த போராளிகளைக் கொன்றதாகவும் படையினர் அல்லது அரச துணை இராணுவக் குழுக்கள் தமிழ்ப் பொது மக்களை குறிப்பாக சிறுவர்களையும் இளைஞர்களையும் கடத்திச் சென்று கொன்றதாவும் - அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்களை முதலில் மறுத்த இலங்கை அரசு இவற்றை விசாரிப்பதற்கு குழு ஒன்றை நியமிக்க உள்ளதாக பின்னர் அறிவித்திருந்தது. (அ)

## ஈழத்தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழருக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் காங்கிரஸும் அதன் கூட்டணி கட்சிகளும் உறுதியாக இருக்கின்றன. இலங்கைக்கு இந்திய நாடாளுமன்ற குழு சென்றதன் மூலம் தற்போது 81 ஆயிரம் தமிழர்கள் மீண்டும் தங்களது வாழ்விடங்களுக்கு சென்றுள்ளனர். மீதம் உள்ளவர்கள் படிப்படியாக இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள்.

இதற்கான நடவடிக்கையில் காங்கிரஸ் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. சிங்கள மொழியுடன் தமிழ்மொழிக்கும் சம அந்தஸ்து பெற்றுத் தரப்படும் - என்றார்.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்து தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியிருக்கிறார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி.

இது தொடர்பாகவும் இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைமை குறித்தும் ஆனந்தசங்கரி கருணாநிதிக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் இறுதிப்பகுதி வருமாறு:-

நாடும் நாட்டு மக்களும் அதிகளவில் கஷ்டங்களுக்கு உள்ளாகி பலவற்றை இழந்துள்ளமையால் இந்த நாட்டிலோ அல்லது வேறு எங்கேயோ யார் இருந்தாலும் இவ்வாறு மீண்டும் ஏற்படுவதை விரும்பமாட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் ஏற்படக் கூடாது, ஏற்பட விடவும் கூடாது. ஒற்றையாட்சியின் கீழ் எத்தகைய தீர்வு வழங்கப்பட்டாலும் கடும்போக்காளர்கள் எதிர்காலத்தில் அநாவசியமாக இதில் தலையிடும் வாய்ப்பைக் கொடுக்கும்.

ஆகவேதான் இந்திய முறையிலான ஒரு தீர்வை முன்வைக்குமாறு நான் வற்புறுத்தி வருகின்றேன். இந்தியர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் சிறந்ததொரு கோட்பாட்டுக்கு அமைய அவர்களின் அரசமைப்பை உருவாக்கியுள்ளமையால் அந்த மாதிரியான அமைப்புமுறை ஒற்றையாட்சி, சமஷ்டி ஆகிய வார்த்தைகளை விரும்பாதவர்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

ஆகவே ஐயா, சகல அரசியல் வேறுபாடுகளையும், வேற்றுமைகளையும் மறந்து தமிழ் நாட்டவர் அனைவரையும் ஒன்றிணைத்து அரசியல் தீர்வு காண்பதில் தங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். எங்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மைக் கட்சிகளைச் சேர்ந்த நாம் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பாதுகாக்க திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

எனது வேண்டுகோளைத் தாங்கள் ஏற்று இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மத்திய அரசை இலங்கை சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதாகவுள்ள எனது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டுமென மிக விநயமாகக் கேட்டுக் கொள்கிறேன். தங்களைச் சந்தித்து இது சம்பந்தமாக மேலும் சில கருத்துக்களைத் தெரிவிக்கும் வாய்ப்பை விரைவில் ஏற்படுத்தித் தருவீர்கள் எனக் கேட்டுக் கொள்கிறேன்- என்றுள்ளது. (அ-சி)

Microsoft Certified Systems Engineer 100% off for 20 students only
பரீட்சைக்கட்டணங்கள் அரசினால் வழங்கப்படுகின்றன.

★ Network Manager, System Admin.தொழில் வாய்ப்புக்கள்
★ சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
★ 12Routers,Servers மூலம் முழுமையான செயன்முறைப் பயிற்சி
MCS Supported By UNDP/JRRP
விபரங்கள், விளக்கங்களிற்கு நேரில் வருக.. 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764
0772395895 0718475501

வாங்கி விட்டீர்களா?
தரம் 1 - 5 வரை ஒக்ரோபர் - நவம்பர் மாத இதழ்கள்
அம்மா
அன்னை
தாய்
அறிவு
தேடல்
கற்சுமி வெளியீடு

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS - 2011 A/L
அலைவுகளும் அதிர்வுகளும்
ஆரம்பம் : 02.11.2009 (திங்கள்)
MON, FRI :-5.00-6.00 PM
BY : வழமையான ஆசிரியர்

ஆசிரியர் குழு தேவை
தரமான பதிப்புகளை வெளியீடு செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு O/L, A/L அனைத்துப் பாடங்களுக்குமான ஆசிரியர்கள் தேவை. தமிழ் மூலம் 8 வருட கற்பித்தல் அனுபவம், 3 வருட புள்ளியிடல் பங்கு பற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
மேலதிக விவரங்களுக்கு: 0773613285

சுடர் ஒளி
நவ. 01 – நவ. 07
யுத்தக்குற்ற விசாரணை; நாடு தப்பிப்பிழைக்குமா?
தேர்தல் யுத்தம்
பூத்திடும் பனந்தோப்பில் நடந்தேறிய கூத்துகள்
அந்த உயிர் வலிக்கும் கணங்கள்...! - எங்களுக்கருகில் உறங்கியவர்கள் மரங்களில் துண்டு துண்டாகத் தொங்கினார்கள்...
தேர்தல்களும் மலையகமும் காங்கிரஸின் வெற்றி - இந்தியக் கண்ணோட்டம்
மற்றும் சிறுகதை, பித்தன் பதில்கள், சினிமா, இளஞ்சுடர்
இன்று விற்பனையில் உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.....

அட்சயா
(அரவிந் ஸ்ரூடியோவிற்கு அருகில்)
பேசியல், மேக்கப், கெயாஸ்டைல்
தலைமுடி அயண்பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், கேக் ஐசிங், யுவல்றி மேக்கிங் (நெக்லஸ் தோடு, காதுமாட்டி நவீன முறையில் செய்தல்) மேற்படி பயிற்சி நெறியினை பயில்பவர்களுக்கு சாறிவேக் (5), ஒளவுஸ் கட்டிங் (6) பயிற்சி முற்றிலும் இலவசம்! இலவசம்! உடன் பதிவினை மேற்கொள்ளவும்.
பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
பிச் கேக் (1) 30/=, ஐசிங் பிச்கேக் 45/= கஜூ பதித்த பிச் கேக் 60/= மட்டுமே. ஐசிங் கேக் ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
அட்சயா
461, நாவலர் றோட், ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org